# வளர்

காலாண்டிதழ் | வைகாசி 2024 | இதழ் : 07 | வெளியீடு : மகாஜனா '79



கவிஞர் அம்பி



பண்டிதர் க. உமாமகேஸ்வரன்



பண்டிதர் கடம்பேஸ்வரன்



சமூகசேவகர் பாலித தெவரப்பெரும



சமூகநலவாதி. நா. எதிர்வீரசிங்கம்



கவிஞர். வி. கந்தவனம்



பாடசாலை வினோத உடைப்போட்டி ஒன்றில்
பரிசுபெற்ற தென்னை மரம்
(கிருமிகளால் தாக்கப்பட்ட தென்னை)

○ உள்ளே ...

• சுப. கிருஸ்ணானந்தன் • செயபாலன் • மணிமாறன் • க. ஆதவன் • ஜெயாயினி.வி.
• விஜி நாகராஜா • தீபிகா • கோகிலா மகேந்திரன் • சின்னையா ரவீந்திரன்
• மனோ • ஆலகாலன் • சஞ்சயன் செல்வமாணிக்கம் • கவல்கணன் • புனிதா கணேஸ்
• மாயோன் • வே. காசிநாதன் • அகரன் • பஞ்சகல்யாணி • நெற்கொழுதாசன்
• ஜலீலா முஸம்மில் • VP. வாசுகன்

- தீதும் நன்றும் பிறர் தர வாரா -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சி.சு. செல்லப்பா – (1912 – 1998)

## தமிழ் இலக்கியத்தைச் சுவாசித்தவர்

வளர் – 7வது இதழில் நிதானமாகக் காலடி எடுத்துவைக்க முற்படுகையில் சி.சு. செல்லப்பாவின் 'எழுத்து' சஞ்சிகையும் தவிர்க்கவியலாதபடி எம்முன்னே கம்பீரமாக வந்து நிற்கின்றது.

தமிழ் இலக்கியம், அதன் வளமான வரலாறு மற்றும் பலதரப்பட்ட மரபுகள், இலக்கிய நிலப்பரப்பில் அழியாத தடம் பதித்த எண்ணற்ற எழுத்தாளர்களின் கடும் உழைப்பால் அலங்கரிக்கப்பட்டுள்ளது. இந்தப் புகழ் பெற்றவர்களில் சின்னமனூர் சுப்பிரமணியம் செல்லப்பா ஒரு உயர்ந்த நபராக இருக்கிறார், அவருடைய படைப்புகள், இலக்கிய வாசகர்களைக் கவர்ந்ததோடு மட்டுமல்லாமல், தமிழ் இலக்கியத்தைச் செழுமைப்படுத்தியுள்ளன. தமிழ் இலக்கியச் சிற்றிதழ்களுக்கு முன்னோடியாக இருக்கும் புகழ் பெற்ற "மணிக்கொடி" யில் இவரது படைப்புகள் வெளியாகின. இவரின் " சுதந்திர தாகம்" நாவல் *2001* இல் சாகித்திய அகாடமி விருது பெற்றது.

அவரது தமிழ்ப்பற்று, விடாமுயற்சி மற்றும் மனித இயல்பு பற்றிய ஆழமான புரிதல் ஆகியவற்றால், செல்லப்பா தமிழ் இலக்கிய வட்டங்களில் மரியாதைக்குரிய இடத்தைப் பெற்றுள்ளார். இலக்கிய ஆர்வலர்களைக் கொண்டு தரமான தமிழ் இலக்கியத்தை எழுதத் தூண்டித் தானும் எழுதி "எழுத்து" என்ற ஒரு சிற்றிதழைப் பத்து வருடங்களுக்கு மேலாகப் பல சிரமங்களிடையே நடாத்தினார். "எழுத்து" முதல் இதழில் இவ்வாறு எழுதுகிறார்,

**"சுவடு தெரிகிற தடத்திலே செல்ல மறுத்து, புதுத்தடம் போட்டுக்கொண்டு இலக்கியத்தின் எல்லைகளைச் சற்று விரிவடையச் செய்ய முயன்றவர்களைத்தான் சோதனைக்காரர்கள் என்று சொல்லலாம்."** என்று க.நா.சு. தன் "சிறந்த தமிழ்ச் சிறுகதைகள்" கட்டுரையில் கூறியுள்ளது அப்படியே "எழுத்து" தன் குறிக்கோளாகக் கொண்டுள்ள படைப்பு இலட்ஷிய மாகும். சோதனை செய்து பார்ப்பவர்களால் தான் இலக்கியமே வளர்ந்திருக்கிறது. தமிழ் இலக்கியத்துக்கு முதல் நாவல் (பிரதாப முதலியார் சரித்திரம்) தந்த வேதநாயகம் பிள்ளையும் முதல் சிறுகதை (குளத்தங்கரை அரசமரம்) தந்த வ.வே.சு ஐயரும் புதுக்கவிதை தந்த பாரதியும் வசன நடையில் புதுமை காட்டிய வ.ரா வும் இந்த வழி வந்த மற்ற சிலரும் சோதனைக்காரர்கள். இன்றைய இலக்கியம் பற்றிப் பேசும் போது இவர்களைத்தான் முதலில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பருவ ... 
பொதுசனநூலகம்
யாழ்ப்பாணம்

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

குறிப்பிடுகிறோம். சுயமாக, தனித்தன்மையுடன் கலை உருவம் படைத்தவர்களை அதே சுவட்டில் பின்பற்றி காப்பி அடித்து சிருஷ்டிப்பவர்களை ரசிக உள்ளம் அவ்வளவாக நீண்ட நாளைக்கு தான் நினைவில் இருத்திக்கொள்வதில்லை. ஆகவே, இலக்கிய அபிப்பிராயம் சம்பந்தமாக மாறுபட்ட கருத்துக்களுக்குக் களமாக "எழுத்து" அமைவது போலவே இலக்கியத் தரமான எத்தகைய புதுச் சோதனைகளுக்கும் "எழுத்து" இடம் தரும்.*

எழுத்து என்ற வார்த்தைக்கு அகராதி ரீதியாக அக்கரம், இலக்கணம், கல்வி, கையெழுத்து, ஆதாரச்சீட்டு, ஓவியம் என்றெல்லாம் விளக்கம் இருந்தாலும் இலக்கியப் படைப்பு என்ற அர்த்தத்தில்தான் பெயர் தாங்கி வருகிறது இந்த ஏடு என்று அறிவித்தார். இலங்கை எழுத்தாளர்கள் கே.எஸ்.சிவகுமாரன், முருகையன் போன்றவர்கள் ஈழத்தில் இலக்கிய முயற்சி, விமர்சனநோக்கு பற்றி எழுத்தில் எழுதி இருக்கிறார்கள். பிரமிள் (தருமு சிவராம்) நிறையவே கவிதைகளை எழுத்தில் எழுதினார். சங்க கவிதைகளை பொக்கிஷமாக நினைக்கும் செல்லப்பா சாமான்ய மனிதரைச் சென்றடையக்கூடிய புதுக்கவிதைகளை எழுத்தில் பிரசுரித்து புதுக்கவிதை வளர்ச்சிக்கு நிறையவே பங்காற்றினார்,

தமிழ் இலக்கியத்திற்குச் செல்லப்பாவின் நீடித்த பங்களிப்புகளில் ஒன்று, மனித உறவுகளின் சிக்கலான ஆய்வுகள் ஆகும். அவரது கதாபாத்திரங்கள் பெரும்பாலும் அன்றாட வாழ்க்கையிலிருந்து வரையப்பட்டவையாகயிருப்பினும் அவை காலத்தால் அழியாத தரத்தைக் கொண்டுள்ளன, இது பல தலைமுறைகளாக வாசகர்களுடன் எதிரொலிக்கிறது. ஒரு போராடும் குடும்பத்தின் சோதனைகள் மற்றும் இன்னல்களை சித்தரிப்பதாக (வாடிவாசல் நாவல் - தமிழர்களின் வீர விளையாட்டு, ஜல்லிக்கட்டுப் பற்றிச் சுழலும் கதை- ஜல்லிக்கட்டில் ஜமிந்தாரின் மாட்டைப் பிடிக்கும்போது உயிரிழந்த தந்தையின் நிறைவேறாத வீரக்கனவை நிறைவேற்றத் தனயன் களத்தில் இறங்குகிறான்) அல்லது பாரம்பரியத்திற்கும் நவீனத்துவத்திற்கும் இடையில் அலையும் ஒரு தனி நபரின் உட் கொந்தளிப்பை சித்தரிப்பதாக (நான்கு சுவர்களுக்கிடையே நடக்கும் ஒரு விதவைப் பெண்ணின் மனப்போராட்டத்தை விவரிக்கும் செல்லப்பாவின் "ஜீவனாம்சம்" தமிழின் முக்கியமான புதினம்) இருந்தாலும், செல்லப்பாவின் எழுத்து ஒரு அரிய நம்பகத்தன்மையையும் உணர்ச்சியின் ஆழத்தையும் வெளிப்படுத்துகிறது.

அறுபத்து ஐந்து வருடங்களுக்கு முன் இவர் எழுதிய "இன்று தேவையான உரைநடை" என்னும் கட்டுரை சம காலத்துக்கும் பொருந்தும். சங்கச் செய்யுள் காலத்தில் இருந்து இன்றைய உரை நடை வரை நடந்த "பரிணாம வளர்ச்சி" பற்றி எழுதியிருக்கிறார். இறையனார் களவியலுக்கு முதல் முதலாக உரை எழுதிய நக்கீரர் தொடக்கம் பின்பு வந்த நச்சினார்க்கினியர், பரிமேலழகர், கல்வெட்டுக்களில் காணப்படும் வசன தோரணைகளைத் தாண்டி பல நூற்றாண்டுகள் கடந்தால், வீரமாமுனிவர் எழுதிய "அவிவேகப் பூரண குரு" கதை, மேலும் பேச்சுத்தமிழ்ப்படியே எழுதப்பட்ட "ஆனந்தரங்கம் பிள்ளை நாட்குறிப்பு", "பஞ்ச தந்திரக்கதை", "மனு முறை வாசகம்", "விநோதரச மஞ்சரி", பின்பு வந்த "விக்கிரமாதித்தன் கதைகள்" குறிப்பிடத்தக்க வசன வளர்ச்சிக் காலங்கள் எனலாம். இவற்றிக்குப் பின் வந்த வேதநாயகம் பிள்ளை, மாதவையா... எழுதிய வசன நடை அடுத்த கட்டமாகும். இவர்களை தொடர்ந்து வந்த உரைநடைக்கு உரியவர்கள், பாரதி, வ.வே.சு. ஐயர், மறைமலை அடிகள், உ.வே. சாமிநாத ஐயர், வி.கல்யாணசுந்தர முதலியார்... அடுத்த கட்டத்தில், வ.ரா, கல்கி, சங்கு சுப்ரமணியன்.....

இவர் உரைநடையை இரண்டு விதமாகப் பிரிக்கிறார், கதை சொல்லும் பாணி, மற்றது கருத்தை அறிவிக்கும் போக்கு, இங்கு முக்கியம் என்னவென்றால் வாசிக்கிறவருக்கு எளிதில் புரிய வேண்டும். காலத்தோடு வசன நடை மாறுபட்டுக்கொண்டே வந்திருக்கிறது என்பதை வலியுறுத்தி அது இன்னும் மாறுபட்டுக்கொண்டே போகும் என்பதில் ஐயமில்லை என்பதை விளக்கியுள்ளார். வ.வே.சு. ஐயரின் வர்ணனை வசன நடை இன்றைய சிறுகதை எழுத்தாளருக்குத் தேவை இல்லை என வாதிடுகிறார். சங்க காலத்துத் தமிழ் தூயதமிழ் தானே? எப்படி இன்று வழக்கொழிந்து போயிற்று என வினவுகிறார். காலப்போக்கில் வளைந்து கொடுக்கும் தன்மையால் தான் ஒரு மொழி ஜீவனுள்ளதாகக் கருதப்படும் என்பதை ஆணித்தரமாக ஆமோதிக்கிறார். இந்த எழுத்து நடை மாற்றத்தை நாம் பழைய பிரித்தானிய மற்றும் தற்போதைய அமெரிக்க எழுத்து நடையுடன் ஒப்பிடலாம். ஆரம்பத்தில் பாரம்பரிய ஆங்கில எழுத்தாளர்கள் அமெரிக்க எழுத்து நடையினை விரும்பாத போதும், இன்று அமெரிக்க நாவல்கள் மற்றும் கவிதைகள் வணிக ரீதியாகவும் விமர்சன ரீதியாகவும் உச்சத்தை எட்டியுள்ளன. முடிவாக,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாதாரண மக்களைச் சேராவிடின் அவ்விலக்கியம் நீண்ட காலம் மக்கள் மனதில் நிலைத்திருக்காது.

உலகளாவிய தமிழை உருவாக்குவது பற்றிய கருத்துப் பற்றி பேசுகிறார். அப்படி ஒன்று தோன்றுமாயின் ஜீவனற்ற தனிமனிதக் குரல் ஒலிக்காத தமிழ் ஆகவே இருக்கும். ஏனெனில், தேசத்துக்குத் தேசம், பிரதேசத்துக்குப் பிரதேசம், ஊருக்கு ஊர், பேச்சு வழக்கு, பழக்க வழக்கங்களுக்கேற்ப மொழி மாறுபடும். இத்தனித்துவத்தை தரமான தமிழில் பார்க்க முடியாது என்பதே செல்லப்பாவின் வாதம்.

அடுத்து ஆங்கிலத்தில் நினைத்து தமிழில் எழுதுவது பற்றிய பிரச்சினை, பாரதி காலம் வரைக்கும் எழுப்பப்பட்டதாகத் தெரியவில்லை, இது மணிக்கொடி எழுத்தாளர்களைப் பற்றி எழுந்த புகார் (புதுமைப்பித்தன் தமிழா எழுதுகிறார் என்று கேட்டார்களே!) இன்று (1959) வரை புகைந்து கொண்டிருகிறது. அதன் விளை-வாக, மனது நினைக்கிற வாக்கியத் தொடர்கள் முன்னும் பின்னுமாக விழுவதை பார்க்கலாம். மணிக்கொடி எழுத்தாளர்களின் நடையில் இது காணப்படுவது நாளை வரும் மரபாக அமையலாம்தானே? என 1959 இல் இவர் கணித்தது பொய்க்கவில்லை, ஏனெனில் இன்று (2024) மணிக்கொடி எழுத்தாளர்கள் (பி. எஸ். ராமையா, புதுமைப்பித்தன், வ.ராமசுவாமி ஐயங்கார் , கு.ப. ராஜகோபாலன், ந.பிச்சமூர்த்தி, சிதம்பர சுப்பிரமணியன், சி.சு. செல்லப்பா, கி. ராமச்சந்திரன், ஆர்.சண்முகசுந்தரம், எம்.வி. வெங்கட்ராம், 'சிட்டி' பி.ஜி. சுந்தர்ராஜன்...) என்றால் மிக உயரிய இடம் தமிழ் இலக்கியத்தில் இவர்களுக்கு இருக்கிறது, இன்று இலக்கிய உலகம் இவர்களைக் கொண்டாடி வருகிறது.

அவரது கட்டுரைகள், ஆழ்ந்த இலக்கிய விமர்சனம் , கூரிய கவனிப்பு ஆகியவற்றால் குறிக்கப்பட்டன, அக்காலப் பிரச்சினைகள் மற்றும் இலக்கிய விவாதங்கள் பற்றிய கூர்மையான நுண்ணறிவுகளை இலக்கிய மாணவர்களுக்கும் ஆர்வலர்களுக்கும் வழங்கின. தமிழ்நாட்டில் உள்ள சிறு நகரங்களுக்கும் சென்று தனது பத்திரிகை மற்றும் பிரசுரங்களைத் தானே எடுத்துச் சென்று விளம்பரப்படுத்தினார். மல்லிகை ஜீவாவுடன் தமிழ் இலக்கியத்தின் மீதான அவரது ஈடுபாட்டை நாம் ஒப்பிடலாம்.

"எழுத்து" அதன் ஆசிரியருக்கு நஷ்டம் ஏற்படுத்திய போதிலும் தமிழ் இலக்கிய வரலாற்றில் நிரந்தரமான ஒரு இடத்தை பெற்றுள்ளது. அதன் மதிப்பை இலக்கிய மாணவர்களும் ஆய்வாளர்களும் பிற்காலத்தில் உணரலானார்கள். இப்படியான இலக்கியப் பத்திரிகை தேவை என்ற உணர்ச்சியைப் பின் வந்த தலை-முறையினரிடம் உண்டாக்கி விட்டிருப்பது "எழுத்து" சிற்றிதழுக்குக் கிடைத்த மாபெரும் வெற்றி ஆகும்". ** இலக்கிய ஆர்வலர்களுக்கு வரப்பிரசாதமான பெரும்பாலான எழுத்து- சிற்றிதழ்கள் Amazon Kindle store- இல் கிடைக்கின்றன.

தமிழ் எழுத்து நடையின் பரிணாம வளர்ச்சியானது பல நூற்றாண்டுகளாகத் தமிழ் சமூகம் அடைந்துள்ள கலாசார, சமூக மற்றும் மொழியியல் மாற்றங்களைப் பிரதிபலிக்கிறது. பண்டைய சங்க இலக்கியம் முதல் தற்காலத் தமிழ் இலக்கியம் வரை, எழுத்து நடை தொடர்ச்சியாக வளர்ச்சியடைந்து, பல்வேறு தாக்கங்களுக்கு ஏற்றவாறு மாறினாலும் அதன் தனித்துவமான சாரத்தைப் பாதுகாத்து வருகிறது. இன்று, மாறிவரும் சமூக, தொழில்நுட்ப முன்னேற்றங்களுக்கு ஏற்ப தமிழ் எழுத்து நடை தொடர்ந்து உருவாகி வருகிறது. சமூக ஊடகங்கள் மற்றும் இணையத் தளங்களின் எழுச்சியானது, எழுத்தாளர்களுக்கு, பரந்த வாசகர்களைச் சென்றடைவதற்கும் பல்வேறு வகையான வெளிப்பாட்டின் மூலம் பரிசோதனை செய்வதற்கும் புதிய வழிகளை வழங்கியுள்ளது. இப் பரிசோதனைகளுக்கு அமரர் செல்லப்பா ஆசி கூறுவார் என்பதில் ஐயமில்லை.

* : எழுத்து இதழ்
**: தமிழில் சிறு பத்திரிகைகள் – வல்லிக்கண்ணன்

- சுப. கிருஸ்ணானந்தன்
(Krishnasubram7@gmail.com)



தம் வாழ்நாள் பணியாற்றி, காலக் கரைதலில் கரைந்த
அதிமானிடர்களான கவிஞர். அம்பி, பண்டிதர் க. உமாமகேஸ்வரன்,
பண்டிதர் கடம்பேஸ்வரன், சமூகஅக்கறையாளர் பாலித தெவரப் பெருமா,
சமூக நலவாதி நா.எதிர்வீரசிங்கம், கவிஞர். வி. கந்தவனம்
ஆகியோருக்குத் தலை தாழ்த்தி எங்கள் அஞ்சலிகள்.

"வளர்"
தெல்லிப்பழை மகாஜனக்கல்லூரி
1979 ம் வருட
உயர்தர வகுப்பு மாணவர்
இலக்கிய குழாமின் வெளியீடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**எழுத்து, ஒரு சமூகத்தின் கண்ணாடி. ஒரு சமூகம், தன் வாழ்வை விட்டுச் செல்கிற தடம். எழுதியவற்றைக் காட்டிலும், எழுதாதவைகளால் நிரம்பியிருக்கிறது ஈழத்தமிழினம்.**

## - ஆலகாலன் பக்கம் -

# • சப்பி விதைகள்

**மிகமிகக்** குறைந்த பட்சம், இன்றைய ஈழத் தமிழ்ச் சமூகத்தில், கிழமைக்கொரு புத்தகமாவது வெளிவந்து விடுகின்றது. கணக்குப் பார்த்தால், வாரத்துக்கு நான்கு புத்தக நிகழ்ச்சிகளாவது நடக்கின்றன. வீட்டிற்கொரு புத்தகம் வெளியிடுகிற அளவுக்குப் போகிறது, வெளிநாட்டு வாழ் தமிழர்களின் ஆர்வப்பிணி. இந்த ஆபத்தான கைங்கரியத்தை, பதிப்பாளர்கள் தூண்டிலாக்கிக் கொண்டார்கள். குறிப்பாக, தமிழகப் புத்தகச் சந்தை, ஈழத்தமிழர்களை கத்தரிக்காய் வியாபாரிகளாக்கியது. விளைவு, மழைக்கால ஈசல்களைப் போல, நமது எழுத்தாளர்கள் பொங்கிப் பெருக்கெடுக்கத் தொடங்கினார்கள். அதுவரைக்கும், கல்வெட்டுக்களோடு அடக்கமாக இருந்த அத்தனை சனங்களும், "வரலாறு எழுதுகிறேன்" என்று சீறிக் கொண்டு வரத் தொடங்கினார்கள். ஒரே நேரத்தில் இரண்டு-மூன்று புத்தகங்கள் என வெளியிட்டு, தாம்பூலப்பை போல இலவசமாகவே தந்து, மிரள வைக்கின்றார்கள்.

எழுத்து, ஒரு சமூகத்தின் கண்ணாடி. ஒரு சமூகம், தன் வாழ்வை விட்டுச் செல்கிற தடம். எழுதியவற்றைக் காட்டிலும், எழுதாதவைகளால் நிரம்பியிருக்கிறது ஈழத்தமிழினம். நல்ல படைப்புக்களின் அவசியம், இன்னும் நிறையவே இருக்கிறது. ஆனால், அதற்காக எல்லோரும் அந்த வேலையைச் செய்ய ஆரம்பிக்கலாமா? "உங்கள் மனதில் என்ன இருக்கிறது?" என்ற முகப்புத்தக மந்திரமல்ல, ஒரு நூலை உருவாக்குகிற முயற்சி. ஆறப்போட்டு, ஊறப்போட்டு, உழுது, விதைத்து, களையெடுத்து, கெட்டொடித்து, உரம் போட்டு, மருந்தடித்து, தண்ணீர் விட்டு என்று, ஒரு குழந்தையைப் போல, பார்த்துப் பார்த்து பக்குவமாக வளர்த்தெடுத்து, அறுவடை செய்ய வேண்டிய எழுத்தாளனின் நீண்ட நாள் தவம் தான், ஒரு புத்தகம்.

இதைப் புரியாமல், ஏன் எமது சமூகம் இப்படி எழுதிக் குவித்துக் கொள்கிறது? என்று நிதானமாகச் சிந்தித்தால், ஒரு எளிய விடை தெரிகிறது. தற்புகழ் என்கிற மாயையும், உசுப்பி விட்டு உச்சிக் கொப்பில் ஏற்றி விடுகிற சக மனிதர்களது போலி விளையாட்டுக்களும், பணபலமும் தான், இந்தத் தகுதிக்கு மீறிய கிரீடங்களை, தாங்களாகவே எடுத்து அணிந்து கொள்கிற, அசட்டுத் துணிச்சலை எல்லோருக்கும் வழங்கிவிடுகிறது. முகப்புத்தகச் சுவர், நீயும் படுபயங்கர எழுத்தாளர் தான், என்கிற வண்ண மத்தாப்பை எல்லோர் மனங்களிலும் கொழுத்திப் போட்டு, உருவாடச் சலங்கை கட்டி விடுகிறது.

சரி. ஆர்வக் கோளாறில், ஓர் அப்பாவி இப்படி தகுதிக்கு மீறி ஆசைப்படுகிறார் என்று நன்றாகத் தெரிந்தால், **எங்கள் நேர்மையான எழுத்தாளர்கள், அறிவான புத்திசாலிகள் என்ன செய்திருக்க வேண்டும்? நியாயமாக விமர்சித்திருக்க வேண்டும். அக்கறையுடன் ஆராய்ந்திருக்க வேண்டும். குறை-நிறைகளைப் பக்குவமாகச் சுட்டிக் காட்டியிருக்க வேண்டும். முகத் துதிகளை, முதுகுசொறிதல்களை அறவே நிறுத்தி யிருக்க வேண்டும். அநியாயத்துக்கு அண்டப் புளுகு முன்னுரைகள், வாழ்த்துரைகள் எல்லாம் எழுதிக் கொடுத்து, ஒரு சமூகத்தின் இலக்கியத் தரத்தை கீழிறக்கத் துணை போயிருக்க கூடாது.** காசுக்குக் கூவுகிற குயிலாக, பெருமைக்கு மயங்குகிற மனமாக, இறங்கியிருக்கக் கூடாது.

நாலு பக்கம் படித்து விட்டு வந்து, ஆய்வுரை நடத்துகிற அடிபொடிகள், வாசிக்காமலே வந்து, தமது வானொலி நிகழ்ச்சிக்கு செவ்வி காண்கிற, செம்மனச்செல்வர்கள், ஆயிரத்தெட்டு எழுத்துப் பிழைகளையும் கடந்து புத்தகத்தைப் புளுகுகிற கண்மூடிப் பூனைகள் என்று, நம் சமூகம் போலி சூழ் உலகமாகிற்று. விளங்காமல் தலையாட்டுகிற கோயில் மாடுகள், மௌனமாகப் பொருமுகிற மனச்சாட்சிகள் என்று எல்லோராலும் விளைகின்றவை தான் நமதிந்தப் புத்தகப் பெருக்குகள். நாலு நல்ல புத்தகங்களையும், சேர்த்தே அடித்துக் கொண்டு போகிற இந்தப் பெருக்கு ஒரு சமூகத்திற்குப் பேரிழப்பே தான்.

காசிருந்தால், யாரும் எழுத்தாளராகலாம் என்கிற துயரச் சூழல், ஏற்கனவே இருக்கிற நம் இலக்கிய வளங்களையும், கீழிறக்கி விடுகின்ற அபத்தத்தை யாரும் உணர்வதாயே இல்லை. பெரும் சாதனையாக, தினந்தினம் கொட்டித் தீர்க்கிற இந்தக் காகிதமழை, ஒரு வாரம் ஓடுகிற சினிமா போல ஆகி விட்டது. வாங்கிப் படிப்பவர்கள் இல்லையே என்று அழுது கொண்டிருக்கிற நமது தமிழ்ச் சூழலில், சும்மா கொடுத்தாலும் படிக்க மனிதரில்லாத காலம் பெருகுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சிறுகதை

# நினைவழிந்த காதல்

- சஞ்சயன் செல்வமாணிக்கம் -

"பேத்தர் எழும்புங்கள். விடிந்துவிட்டது. அருமையானதொரு வசந்தகால நாளை உறங்கிக் கழிக்கிறீர்கள். வெளியே பாருங்கள் முகில்களற்ற நீல வானம்" என்றபடியே அவரது அறையின் திரைச்சீலைகளை ஒரு கரைக்கு இழுத்துவிட்டேன். வெளிச்சம் அறையை நிறைக்கச் சூரிய வெப்பத்தினை முகத்தில் உணர்ந்தேன். சாளரத்தினைத் திறந்தபோது மெல்லிய காலைக் குளிர்காற்று அறைக்குள் சூழத்தொடங்கியது.

முழிப்பு வந்து படுக்கையிலிருந்தபடி அலுப்பு முறித்த பேத்தரை, சோம்பல் மீண்டும் போர்வைக்குள் இழுத்தபோது அதைப் போர்த்திக்கொண்டு "பத்து நிமிடங்கள்" என்று முணுமுணுத்தார்.

"சரி", என்றுவிட்டு பதினைந்து நிமிடங்களின் பின் மீண்டும் வந்தபோது குளியலறையில் நீர் வழியும் சத்தம் கேட்டது. ஆனால் நீராடும் சத்தம் கேட்கவில்லை. கதவைத் தட்டித் திறந்தேன்.

நான் நினைத்தபடியே, கழிக்குமிடத்தில் உட்கார்ந்திருந்தபடியே தாடியைச் சொறிந்தபடி இரவு உடைக்கு மேலால் கோட் ஒன்றினை அணிய முயன்றுகொண்டிருந்தார். அவருடன் உரையாடி, கோட்டைக் கழற்றிவைத்து இரவு உடைகளையும் களைந்து நீரைத் திறந்துவிட்டு அதன் கீழ் அவரை நிறுத்தினேன். நீர் எதையும் இளக வைக்குமல்லவா. அவரும் தன்னை மறந்து குளிக்கலானார். சவர்க்காரத்தினை ஒரு துணியில் ஊற்றி அவரிடம் கொடுத்தேன். தேய்த்துக் குளித்தார். சவரக்கத்தியை நீட்டினேன். சவரம் செய்துகொண்டார்.

"பேத்தர்! நீங்கள் அணியவேண்டிய உடைகளை இங்கே வைத்திருக்கிறேன்" என்றுவிட்டு அவரின் பதிலை எதிர்பாராது குளியலறைக்குள் இருந்த ஏனைய உடைகளை எடுத்துக்கொண்டு வெளியேறினேன். இல்லையென்றால் அவர் மீண்டும் அவற்றை அணியக்கூடும்.

மூன்று பெண்கள் வரவேற்பறையில் உட்கார்ந்திருந்தனர். இசைத்தட்டு ஒன்றை எடுத்து இயக்கினேன்.

வயதானவர்களுக்கு கிறிஸ்தவப் பாடல்கள் பிடிக்கும். எனக்கும் நோர்வேக்கு வந்த காலத்திலிருந்து பிடித்த ஒரு பாடல் இருக்கிறது. மொழிபுரிய முன்னமே அதன் ராகத்தில் மனதை இழந்துபோனேன். மொழி வசப்பட்டபின் பாடலின் அர்த்தமும் மனதில் படிந்துவிட்டது. "நான் தேடியபோது நீர் அங்கிருந்தீர்" என்று தொடங்கும் பாடல் அது.

எமது சேகரத்தில் அப்பாடல் இருப்பது தெரியும் என்பதால் அதை ஒலிக்கவிட்டுவிட்டு அருகிருந்த திறந்த சமையலறையில் காலையுணவைத் தயாரித்துக்கொண்டிருந்தேன். அந்த மூன்று பெண்களும் பாடலில் தம்மை மறந்து போயிருந்தார்கள்.

முதுமக்கள் வாழும் இடம் அது. நினைவு மறதி நோயினால் பாதிக்கப்பட்டவர்களும் அங்கு தங்கியிருக்கிறார்கள். பேத்தரும் அப்படியானவர். வயது அதிகமில்லை ஐம்பதைக் கடந்திருக்கிறார். சரளமான பேச்சு, நிமிர்ந்த நடை, கட்டான உடல் என்பதால் அவரை எவரும் நினைவு மறதி நோய்க்கு உள்ளானவர் என்று சொல்ல முடியாது. அவரை வழிநடத்தினால் போதுமானது. தனது வேலைகளை அவரே செய்து கொள்வார். பாடசாலையொன்றில் இசை கற்பித்தவர். நடனத்திலும் பெருத்த ஆர்வம் உண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு நாள் எனக்கு தங்கோ நடனம் பழக்க முற்பட்டார்.

'பேத்தர்! நான் வாழ்க்கையில் ஒரு நாளும் நடனமாடியதில்லை. ஓரிரு நிதானம் தப்பிய நாட்களைத் தவிர்த்து" என்ற என் தோளைப் பிடித்தடி கற்பிக்க முயற்சித்தார். இறுதியாக "சஞ்சயன், இத்தனை இறுக்கமாக உடலை வைத்திருந்தால் ஆட முடியாது. காற்றில் பறக்கும் இலைபோல் நீ உன்னை உருவகிக்கக் கற்றுக்கொள்" என்றார்.

அவரது மனைவி, குழந்தைகள் அவ்வப்போது வந்துபோவார்கள். இடையிடையே தொலைபேசி அழைப்பு வரும். நத்தார் காலத்தில் மட்டும் வீட்டுக்குச் சென்றுவருவார். இல்லேயேல் எம்முடன்தான் அவரது வாழ்க்கை.

"காலை வணக்கம்! என்ற குரல் கேட்டுத் திரும்பினேன். மிகவும் சிறப்பாக உடையணிந்து, டை, கோட் அணிந்து, குளிர் கண்ணாடி, தொப்பி சகிதமாக வயதான Roger Moore போன்றிருந்தார்.

அவரை அமர்த்திக் காப்பி பரிமாறியபின் வேறொருவர் நீராடுவதற்கு உதவச் சென்று மீண்டும் உணவு மேசைக்கருகில் வந்தபோது பேத்தரைக் காணவில்லை. அவர் இவ்வாறு மறைந்துபோவதும் மீண்டும் வருவதும் வழமை என்பதால் பாதகமிருக்கவில்லை. உணவு மேசையில் உட்கார்ந்திருந்த பெண்களுக்கு வேறு பாடலொன்றை இசைக்கவிட்டேன். இப்போது நோர்வேயின் மெல்லிசை மன்னரான லில்லபியோர்ன் நில்சன் (Lillebjørn Nilsen) இன் மிகவும் பிரபலமான Tanta til Beate (பெயாதவின் மாமியார்) என்ற பாடல் ஒலிக்கத் தொடங்கியபோது ஒருவர் பாடலை உரத்துப் பாடத்தொடங்கினார்.

பேத்தருக்கு மருந்து கொடுக்க வேண்டிய நேரமாயிற்று. அப்போதும் ஆளைக் காணவில்லை. மருத்துவத்தாதி அவரைத் தேடியழைத்துவரக் கட்டளையிட்டார்.

அது முதுமக்களுக்கான அனைத்துச் சேவைகளை யும் உள்ளடக்கியதொரு கிராமம். சிகையலங்கார நிலையம், பலசரக்குக் கடை, பொழுதுபோக்கு அறை, உணவகம், Pub, உடற்பயிற்சி நிலையம், சிறிய தொரு திரையரங்கம், கலை நிகழ்வுகளுக்கான மண்டபம், பூந்தோட்டம், காலாற நடப்பதற்குப் பாதை என்று அங்கு அனைத்து வசதிகளும் இருந்தன. அங்கு வாழும் எவரும் அனுமதியுடன் வெளியே செல்லலாம், வரலாம். உறவினர்கள்எப்போதும் வரலாம் போகலாம். ஆனால், நினைவு மறதிக்குள்ளானவர்கள் மட்டும் தனித்து வெளியே செல்ல முடியாது. பாதுகாப்பு நிரம்பிய இடம். எனவே, பேத்தர் வெளியே சென்றிருக்க முடியாது. இங்கு தான் எங்கோ நிற்கிறார். எனவே அந்தரித்துப் பதறியடித்துத் தேடத்தேவையில்லை.

எஸ்தர் டென்மார்க்கைப் பிறப்பிடமாகக்கொண்டவர். பயணிகளுக்கான கப்பலில் மாலுமியாகக் கடமையாற்றிய கணவரை, கொப்பன்ஹெகன் துறைமுகத்திற்கு அருகிருந்த தன் நடனச்சாலையில் 25ஆண்டுகளுக்கு முன் பரிசாரகியாகக் கடமையாற்றியபோது கண்டதால், காலம் அவரை நோர்வேக்கு அழைத்து வந்தது. வயது அதிகமிருக்காது. நாற்பதுகளின் இறுதி அல்லது ஐம்பதுகளின் ஆரம்பமாக இருக்கும் என்று நினைக்கிறேன். ஆனால், நாற்பது வயதுத்தோற்றம். உதட்டுச் சாயமின்றியும் ஒப்பனையின்றியும் காண முடியாது. மிகவும் அழகாகவும் கவர்ச்சியாகவும் உடையணிவார். அழகும் அவரிடத்தில் கொட்டிக் கிடந்தது. கடந்த நான்கு வருடங்களாக இங்கு வாழ்கிறார். நினைவு மறதி நோய் அவரையும் விழுங்கிக்கொண்டிருக்கிறது.

அவரை யார் என்று அறிவேனே தவிர அவரை ஒரு நாளும் பராமரித்ததில்லை. அவர் ஒரே வளாகத்தில் வேறு பகுதியில் வாழ்கிறார். தினமும் கடையிலே, உணவகத்திலோ, தோட்டத்திலோ சந்திக்கும்மனிதர். இவரும் நடனத்தில் நாட்டமுள்ளவர். இசையைக் கேட்டால் போதும் பாம்பாட்டியின் இசையைக் கேட்ட பாம்புபோல் தானாகவே ஆடத்தொடங்கிவிடுவார்.

அவரது கணவர் அவ்வப்போது வரும்போது வெளியே அழைத்துச்செல்வார். வரும்போது அவரது கையில் புதிய உடைகள் இருக்கும். தனது மனைவி அழகானவள் என்பதில் அவருக்குப் பெருமை.

வெளியே செல்லாவிட்டால் வளாகத்திலிருக்கும் உணவகத்திலிருந்து உண்டபடியே பேசிக்கொண்டி ருப்பார்கள். வெம்மை நிறைந்த நாட்களில் குழந்தைகள், பேரக்குழந்தைகளுடன் எஸ்தரையும் மலை வீட்டுக்கு அழைத்துச் சென்று வருவார் கணவர்.

பேத்தரைத் தேடிக் களைத்துப்போனேன். வாயிற் காவலருடன் தொடர்புகொண்டு "பேத்தரைக் கண்டீர்களா?" என்று கேட்டேன்.
"நடன மண்டபத்தில் பாட்டுச் சத்தம் கேட்கிறது. பலர் அங்குதான் நிற்கிறார்கள்"
"ஆகா, நான் வருகிறேன்" என்றுவிட்டு மண்டபத்தினுள் புகுந்தேன். பலரும் பழங்காலத்து நோர்வேஜிய இசைக்கு 'Sving' நடனமாடிக் கொண்டிருந்தார்கள். வயதானவர்கள் மெதுவாக அசைந்துகொண்டிருக்க பேத்தரும், எஸ்தரும் சுழன்றாடிக்கொண்டிருந்தார்கள்.

இடைவேளையின்போது குளிர்பானம் அருந்தியபின் நடனம் மீண்டும் ஆரம்பித்தபோது இசையின் தன்மை மாறி Tango நடனம் தொடங்கியது.
இருவரும் மிக நெருக்கமாக நின்றுகொண்டார்கள். பேத்தரின் வலது கையும் எஸ்தரின் இடது கையும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீண்டு ஒன்றையொன்று பற்றியிருக்க மற்றைய கை மற்றையவரின் இடையைப் பற்றியிருந்தது. இருவரும் முகத்தை ஒரே பக்கமாகத் திருப்பத் தாளத்திற்கேற்ப இருவரது கால்களும் நகர்ந்துகொண்டிருந்தன. மற்றையவர்கள் சுற்றியிருந்து கைதட்ட, இருவரும் தம்மை மறந்து ஆடிக்கொண்டிருந்தார்கள். எனக்கு அன்னா கரீனினா நாவலில் விரான்ஸ்கி அன்னா கரீனினாவை நடனமாட அழைத்து, அனைவர் முன்னிலையிலும் ஆடிய காட்சி நினைவுக்கு வந்தது. நானும் அவர்களது நடனத்தில் லயித்துப்போனேன். பேத்தரும் எஸ்தரும் ஆடலிலும் பாடலிலும் தம்மை மறந்திருந்திருப்பதை காணக்கூடியதாக இருந்தது.

பாடல் நடுப்பகுதியைக் கடந்து இறுதிப் பகுதிக்குள் புகுந்தபோது இசை விறுவிறுப்பை ஏற்படுத்த, மீண்டும் நடனத்தின் அசைவுகள் வேகமெடுத்தன. பாடலின் இறுதிவசனம் முடிவுறும்போது இருவரும் பாதத்தினை ஒரே நேரத்தில் நிலத்தில் அடித்துச் சப்தமெழுப்பி நிறுத்தினார்கள்.

கரகோசம் மண்டபத்தை நிறைத்தது. அப்போதுதான் அது நடந்தது. அப்படி நடக்கும் என்று நான் எதிர்பார்க்கவில்லை. எவருமே எதிர்பார்க்கவில்லை. எஸ்தர், பேத்தரின் கழுத்தைக் கட்டிக்கொண்டு உதட்டைக் கவ்வினார். சாதாரணமான முத்தம் என்றுதான் முதலில் நினைத்தேன். ஆனால் பேத்தர் எஸ்தருக்கு ஈடுகொடுத்தபோதுதான் சூழ்நிலையின் தார்ப்பர்யம் புரியத்தொடங்கியது.

முத்தம் நின்றபாடில்லை. மற்றையவர்கள் தங்களைக் கவனிக்கிறார்கள் என்ற வெட்க உணர்வையும் அவர்களிடத்தில் காண முடியவில்லை. பொது இடங்களில் முத்திப்பது சாதாரணம் என்ற கலாசாரத்தில் வளர்ந்தவர்களிடம் அதை எதிர்பார்க்க முடியாதல்லவா!

பாடல்களை ஒலிபரப்பிய சக பணியாளர் சங்கடத்தில் நெளிந்தார். நிகழ்வுக்குப் பொறுப்பானவர் என்னை நோக்கிக் கையைக் காண்பித்தபோது அதன் அர்த்தத்தினைப் புரிந்துகொண்டு, பேத்தரின் அருகே சென்று "பேத்தர்" என்றேன்.

முத்தத்தின் ருசியில் அவரது காது செவிடாகிக் கிடந்தது. இரண்டாவது முறை அழைத்தபோது உதட்டை விடுவித்துக்கொண்டு "என்ன?" என்றார். குரலில் சற்று எரிச்சல் தெரிந்தது.

"இன்று காலை நீங்கள் இன்னும் மருந்து அருந்தவில்லை, வாருங்கள்" என்று அவரது ஒரு கையைப் பிடித்து மெதுவாக இழுத்தேன். வந்தார். அவரது மறுகை எஸ்தரைப் பற்றியிருந்தது.

மண்டபத்திலிருந்து வெளியேறினோம். பேத்தர் எஸ்தரின் கையை விடவேயில்லை. எங்களுடன் அவரும் வந்துகொண்டிருந்தார். மூவரும் கைகளைக் கோர்த்தபடி நடந்தோம்.

மருத்துவத்தாதி பேத்தருக்கு மருந்தைக் கொடுத்த பின் எஸ்தரைக் காண்பித்துவிட்டு "இது யார்?" என்று எஸ்தரைக் காண்பித்துப் பேத்தரைக் கேட்கும்போது என்னைப் பார்த்துக் கண்ணடித்தார்.

"இது எனது காதலி"

"அப்ப மனைவிக்கு என்ன சொல்லப் போகிறீர்கள்?"

"யாருடைய மனைவிக்கு?"

"வேறு யாருடைய... உங்களது மனைவிக்குத் தான்"

"எனக்கு மனைவியில்லை. இவளைத்தான் திருமணம் செய்யப்போகிறேன்" என்றுவிட்டு எஸ்தரை 'இல்லையா?' என்பது போல் பார்த்தார். கண்களில் காதலுடன் அவர் பேத்தரின் கையை எடுத்துத் தனது கைக்குள் வைத்துக்கொண்டார்.

நாட்கள் சில கடந்தன. இவர்கள் இருவரும் கையைக் கோர்த்தபடி ஒன்றாகவே திரிந்தார்கள். கிடைத்த சந்தர்ப்பங்களிலெல்லாம் நடன மாடினார்கள். அவர்களுக்காகவே வசந்தகாலம் படைக்கப்பட்டிருப்பது போன்று முத்தித்தார்கள். அவ்வப்போது தனித்திருந்தார்கள்.

ஒரு நாள் பேத்தரின் அறைக்குள் மருந்துடன் சென்றபோது முத்தித்திருந்த அவர்களின் ஆடைகள் அகலும் நிலையிலிருந்ததால், கதவைச் சாத்திவிட்டு வெளியேறினேன். பணியாளர்களிடத்தில் இதுவே பேச்சாக இருந்தது. இந்த வயதிலும் காதல் வருமா? இணையர் ஒருவர் இருப்பதை மறந்து மறந்திருக்கிறார்களே.

ஆனால், அருகிருப்பவரை நினைவிருக்கிறதே எப்படி? தினமும் சந்திப்பதால்தான் நினைவிருக்கிறதா? என்று பேசிக்கொண்டிருந்தோம்.

ஒரு நாள் மாலைநேரம் பேத்தருக்கு மருந்து கொடுப்பதற்காக அவரைத் தேடினேன். ஆளைக் காணவில்லை. இறுதியாக எஸ்தரின் அறைக்குள் இருவரும் ஆடை கலைந்து நெருக்கமாக இருந்ததை அறிந்த பணியாளர் எமக்குத் தொலைபேசினார்.

எஸ்தரின் அறையைத் தட்டினேன். சற்றுநேரம் கழித்துப் பேத்தர் கதவைத் திறந்தார். அவரது உடை-களை அணிவித்து அழைத்து வந்தேன்.

அன்று மாலை உணவின் பின் எஸ்தர் வந்திருந்தார், தங்கள் இருவருக்கும் விஸ்கி வேண்டும் என்றார் பேத்தர். அவரது அறைக்குள் இருக்கும் மதுவிலிருந்து ஒரு கிண்ணம் வார்த்துக் கொடுத்தேன். உள்ளிறங்கியது. இரண்டாவதைக் கேட்டபோது "முடிந்துவிட்டது" என்று பொய் சொன்னேன்.

எஸ்தரை அவரது குடும்பத்தவர்கள் இரண்டு நாட்கள் விடுமுறைக்கு அழைத்துப்போனார்கள். பேத்தர் சோர்ந்து போனார். எஸ்தரை எல்லா இடங்களிலும் தேடினார். அமைதியற்று நடந்து திரிந்தார். சினந்தார். கோபித்தார்.

எஸ்தர் வந்தார். மீண்டும் காதல் வழிந்தோடத் தொடங்கியது. வசந்தகாலத்தில் வாரத்தில் நான்கைந்து நாட்கள் கலை நிகழ்வுகளும் கொண்டாட்டங்களும், உணவுப் பரிமாறலும் நடைபெறும். எஸ்தரும் பேத்தரும் கொண்டாடித் தீர்த்தார்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேத்தரைத்தேடி எஸ்தர் வந்தால் இருவரையும் அறைக்குள் தனித்திருக்க விடாது, வெளியே சென்று வாருங்கள் என்று அனுப்புவேன். அவர்கள் தனித்திருக்கும்போது பேத்தரின் குடும்பத்தினர் வந்தால் என்ன செய்வது என்ற பயம் எனக்குள் வந்திருந்தது.

ஒரு நாள் மாலை நேரத்துப் பணிக்கு வந்திருந்தபோது சக பணியாளர் என்னிடம் "இன்று பெரும் பிரச்சனை நடந்தது. பேத்தரின் அறைக்குள் இருவரும் இருந்தபோது பேத்தரின் மகன் அறைக்குள் சென்றார். இவர்கள் கட்டிலில் கிடந்திருக்கிறார்கள். அவர் வெளியே வந்து எம்முடன் சற்றுநேரம் பேசிக்கொண்டிருந்துவிட்டு, இருவருக்கும் ஆடைகளை அணிவித்துவிடக் கேட்டார்.

"அப்புறம் என்ன நடந்தது?" என்று ஆவலை அடக்க முடியாது கேட்டேன்.

"அவர் அவர்கள் இருவரையும் வெளியே அழைத்துச் சென்று மூவரும் ஒன்றாக உணவகத்தில் உணவருந்திவிட்டு வந்தார்கள். நான் எஸ்தரை அவரது இல்லத்திற்கு அழைத்துச் சென்று விட்டேன்"

"மகன் ஒன்றும் சொல்லவில்லையா?"

"அப்பெண் யார் என்று கேட்டார்"

"நான் எதையும் மறைக்கவில்லை. இருவரும் நெருங்கிப் பழகுகிறார்கள்" என்றதற்கு

"ம். அப்பா நோயிலிருந்து மீளமாட்டார் என்பதும் அவரது காலம் மிகக் குறுகியது என்பதும் எனக்குத் தெரியும். அந்தப் பெண்ணும் அப்படியானவர் என்றே தோன்றுகிறது. அவர்கள் இருவரையும் அவர்கள் இந்தக் கணத்தில் விரும்புவதைச் செய்யவிடுவதையே நான் விரும்புகிறேன். இருவரினது நோயும் அவர்களின் வாழ்விலிருந்த அனைத்தையும் இழக்கச்செய்திருக்கிறது. நினைவுகள்கூட அவர்களிடம் இல்லை. மீதமிருப்பது இந்த நேசம் மட்டும்தான். அதையும் ஏன் நாம் பறிக்க வேண்டும்? நான் அம்மாவிடம் இதுபற்றிச் சொல்கிறேன். அவரைப் புரிந்துகொள்ளவைப்பது எனது வேலை. என்னால் இயலும் என்றே நம்புகிறேன்" என்றார் அவர்.

எனது சகபணியாளர் ஆபிரிக்கர். "என்னால் எனது தந்தையை இவ்வாறு அணுக முடியாது. ஆனாலும் அவர் சொல்லும் விடயத்தில் அர்த்தம் உள்ளது போன்று உணர்கிறேன்" என்ற அவரது உரையாடல் நீண்டபோது, அது என்னைக் கேள்விகள் கேட்கத் தொடங்கியிருந்தது.

இருப்பினும், எனது மனதிலிருந்த பல கேள்விகளுக்குக் கணப்பொழுதில் பேத்தரின் மகன் பதிலளித்திருந்தார்.

"மீதமிருப்பது இந்த நேசம் மட்டும்தான். அதையும் ஏன் நாம் பறிக்க வேண்டும்?" எத்தனை அற்புதமான பதில். நினைக்க நினைக்க அதன் தாற்பரியம் நீண்டுகொண்டே செல்கிறதே.

அன்று மாலை பேத்தர் எங்கே என்று வந்து கேட்ட எஸ்தருக்குப் பேத்தரின் அறையைத் திறந்துவிட்டேன்.

○

# வளர

## சிறுகதைப்போட்டி 2024

மின்னஞ்சல் மூலம் 566 கதைகளும், தபால் மூலம் 305 கதைகளும் வந்து சேர்ந்திருக்கின்றன. ஆவணி மாதம் போட்டி முடிவுகள் அறிவிக்கப்பட்டு புரட்டாதி மாதம் பரிசில்கள் வழங்கப்படும்.

இப்போட்டியானது, பல ஆரோக்கியமான தரவுகளை எமக்கு வழங்கியிருக்கிறது.

எண்ணூறுக்கும் மேற்பட்ட இலங்கை எழுத்தார்வலர்கள் ஆர்வத்துடன் பங்குபற்றியிருக்கிறார்கள்.

அண்ணளவாக அரைவாசிக்கும் மேற்பட்டவர்கள் பள்ளி மாணவர்கள். இவர்கள் வாசிப்பு - எழுத்துத் துறையில் நாட்டமுள்ளவர்களாக இருக்கிறார்கள்.

கணிசமான பெண்கள் கதைகளை எழுதியிருக்கிறார்கள்.

ஒவ்வொருவரிடமும் ஒவ்வொரு கதைகள் இருக்கின்றன. அவை தனித்துவமான கருக்கள். கதைப்போக்கில் சில போதாமைகள் இருப்பினும் சமூதாய அக்கறையுள்ளவர்களாக அவர்களை அடையாளம் காண முடிகிறது.

கெக்கிராவை, மாத்தறை உள்ளிட்ட இலங்கையில் எல்லாப் பகுதிகளிலிருந்தும் கதைகள் வந்து சேர்ந்திருக்கின்றன.

எண்ணூறு கதைகளும் எம்மோடு பேசுகின்றன. எங்கள் சிந்தனைகளை விரிக்கின்றன. இன்னும் இன்னும் எமக்கான பொறுப்புகளை அதிகரிக்கின்றன.

சகல கதைகளையும் நாங்கள் கவனத்துடன் அணுகுகிறோம். நல்ல கதைகளை தொகுப்புகளாக்க முயற்சிப்போம். அக்கறையுள்ளவர்கள் எம்மோடு இணைக.

போட்டி பற்றிய அறிவித்தலை எல்லாப் பகுதிகளுக்கும் கொண்டுசேர்த்த முகநூல் மற்றும் இணைய - வலைத்தள நண்பர்களுக்கு அன்பும் நன்றியும்.

- வளர் குழுமம் -


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெற்கொழுதாசன் கவிதைகள்

## 1.

வரவேற்பறைக் கதவில்
நல்வரவு தனித்துக் கிடக்கிறது .

வாசலில் என்றோ ஒருநாள்
யாரோ ஒருவர்
வரைந்த கோலத்தின் மீது
சாயமிழந்துபோன இறகொன்றை
எறும்புகள் தூக்கிச் செல்கின்றன.

யார்
அந்த
யாரோ ஒருவர்.

எழுத்துக்களை மாறி மாறிக் கோர்த்துப்
பார்க்கிறான்.

வெற்றிடமாக்கிய நேற்றில்,
ஓடிக்கொண்டிருந்த நினைவுகளில்
ஏதோவொரு தடக்கல்.

கொஞ்சம் வெளிச்சமாய்
கொஞ்சம் இருட்டாய்

தன்னை சுற்றி
முற்றிலும் அடைத்துக்கொண்டவனின்
கண்கள் இப்போது ஏன் இவ்வளவு
பிரகாசமாய் ஒளிர்கிறது.

## 2.

அறுந்துவிழும் நினைவிலிருந்து
பொன்னிழைகளென அளைந்த ஒருதுளி
தடுமாறித் திரும்பும் கால்களில்
எத்தனை வருடத்தின் பதற்றம்
சல்லி வேர்களில் சிக்கிய
ஒற்றைக் கல்லென திரண்டுகிடக்கும்
என் துயரமே,
எந்த இறைவனின் உதிரத்தில்
உருக்கொண்டாய்?
எந்த சாத்தானின் வரத்தில்
உயிர் பிழைத்தாய்?



## 3.

வரைபடத்திலிருந்து
நீக்கப்பட்ட தெருவில்
முகவரி கொண்டிருந்த மனிதனும்
அதேநாளில்
காணாமல் போயிருந்தான்.
நீண்ட நெடிய நாட்களின் பின்வந்தவர்கள்
புதிய வரைபடத்தையும்
தெருவையும் வரைந்தபோது
எழுந்துவந்தவன்
எல்லோருக்கும் அந்நியனாயிருந்தான்.
எல்லோரும் அந்நியனாயிருந்தனர்.

முதல் வணக்கத்தையும்
முதல் கேள்வியையும் கேட்டபோது
தவறுதலாக வரைந்த தெருவென
முதலிலிருந்து அழிக்கத்தொடங்கினர்.

சாவதும் புதுவதன்றே *

* கணியன் பூங்குன்றன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 7

மனோவின்

# நெடும் பயணம்

...தொடர்...



பாலசிங்கம் அண்ணன் வழிகாட்டியபடி மக்கோன் புகையிரத தடத்தில் மக்கோன் புகைவண்டிக்காகக் காத்திருந்தேன். மக்கோன் நிலையத்தில் பவாவின் தம்பி பாலன் எனக்காகக் காத்து நின்றார்.

...

தொடரும்.

*28.01.2024*

**பா**லனைக் கண்டதும் எனக்கு மீண்டும் உயிர் வந்தது. பாலன் தனது மைத்துனரின் குடும்பத்தினருடன் வசித்துக்கொண்டிருந்தார். பாலனுக்கு வேலை கிடையாது. அவரது மைத்துனருக்கும் தான். அரச உதவிப்பணம் அவர்களுக்குத் திருப்தியாக இருந்தது. அவர்களுடைய வாழ்வு அமைதியான வாழ்க்கை போலவே தோற்றம் தந்தது. அந்தக் கிராமத்தில் வேறு சில தமிழர்களும் வசித்தனர்.

ஓரிரு நாட்களுக்குள் சுவிஸ்நாட்டிற்குள் நான் நுழைந்து விட வேண்டும். அதற்குரிய தகவல்களைத் திரட்டத் தொடங்கியிருந்தேன்.

ஓ! கையுக்குள் வெண்ணெய்.

பாலன் மட்டுமல்ல அவரது மைத்துனரும் ஏஜென்ற். சுவிஸ் நாட்டிலிருந்து பிரான்சுக்குள்ளும் பிரான்ஸ் நாட்டிலிருந்தும் சுவிசுக்குள் ஆட்களைக் கடத்துபவர்கள். உண்மையை சொன்னால், பாலன் அவரது மைத்துனரின் உதவியாளர்தான்.

பாலனும், நானும் அருகிலுள்ள பூங்காவிற்குள் காலாற நடந்தோம்.
'பொலிஸ் பிடிச்சால் பிரச்சினையில்லையா?' என்றேன்.

'சும்மா இருமையா! இது நம்மட இடம். ஒண்டும் நடக்காது" என்றார்.
'ங்ஆ! சரி " என்றேன். என்றாலும் மனசு பயந்தபடிதான் இருந்தது.

பாலன், சுவிஸ் பயணம், காட்டு வழிப்பயணம் பற்றிக் கதைகதையாகச் சொல்லிக்கொண்டிருந்தார். நானும் கனவில் மிதந்துகொண்டிருந்தேன். சொர்க்கபுரி என்றழைக்கப்படும் சுவிஸில் நான் காலாறிக் கொண்டிருந்தபோதுதான் சுவிஸிலிருந்து பவாவின் தொலைபேசி அழைப்பு வந்தது.

அவர் சுருக்கமாகச் சொன்னது இதுதான்.
'நீங்கள் இப்போதைக்கு இங்க வரவேண்டாம். விபரம் பிறகு சொல்கிறேன்".

எனக்குத் திக் கென்றது. என் ஸப்த நாடிகள் அடங்கின. விறைத்துப்போய் நின்றேன்.

பாலனில் எந்த உணர்வுகளும் தெறிக்கவில்லை.

"என்னய்யா யோசிக்கிறியளா? நான் இருக்கிறன் ஒண்டும் யோசிக்கவேண்டாம்" என்றார் அவர்.

"நான் இருக்கிறன்" என்ற வார்த்தை ஒரு தென்பைத் தந்தது.

சுவிஸ் புல்வெளியொன்றில் மேய்ந்து கொண்டிருந்த ஆடொன்றை முகாமிலிருந்த தமிழர்கள் சிலர் பிடித்து "ஆடடித்து"க் கொண்டாடியிருக்கிறார்கள். அது பெரிய சம்பவமாகி, சுவிஸ் காவல்துறை சில தமிழர்களை விசாரணைக்காக பிடித்து அடைத்து வைத்திருந்தது.

இந்தச் சம்பவத்துடன் மறைமுகமாகவேனும் சம்பந்தப்பட்ட, இறைச்சி சாப்பிட்ட பவா தலை மறைவாகியிருந்தார். இந்த நிலையில் எப்படி அவர் என்னை சுவிஸிற்கு அழைக்கமுடியும்?

ம்..பிரான்சும் பரவாயில்லையே!

இப்போ பிரான்ஸ் நாட்டு அகதிவிசா நடைமுறைகள் பற்றிப் பாலன் விலாவாரியாக எனக்குச் சொல்லிக்கொண்டிருந்தார். என்னுடைய கனவு சுவிஸிலிருந்து பிரான்சுக்குத் தாவிக்கொண்டிருந்தது. என்னுடைய வாய் ஆ வென்று பிளந்து கிடந்தது.

பிரான்ஸ் பென்னம் பெரிய தேசம். ஐரோப்பாவிலேயே நிலப்பரப்பால் கூடிய தேசம். இத்தாலி, ஜேர்மனி, கொலண்ட், சுவிஸ், லக்சம்பேர்க் எனப் பல தேசங்களை எல்லைகளாகக்கொண்ட தேசம். பிற தேசத்தவர்களை நிறையவே உள்வாங்கிய,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்வாங்கிக் கொண்டிருக்கும் தேசம்.
பாரிஸ் கொஞ்சம் பிரச்சனைதான். சன நெருக்கடி மிக்க நகரம். பாரிசுக்கு வெளியில் எத்தனை நகரங்கள் அனாதரவாகக் கிடக்கின்றன. அந்த நகரங்களுக்கு உலக நிலவரம் பிடிபட முதல் தமிழர்கள் உழைத்துத் தள்ளிவிடுவார்கள்.

ஒவ்வொரு நகரத்திலும், ஒவ்வொரு பெயர்களிலும் பதியலாம்! அப்போதெல்லாம் பெருவிரல் அடையாளங்கள் இல்லை. கணினிகள் இல்லை. வலைப்பின்னல் இல்லை. ஜேர்மனிபோல் நகரம் விட்டு நகரம் போகமுடியாது என்ற கட்டுப்பாடு இல்லை. ஒவ்வோர் இடத்திலும் பதியும் போது மாதாந்தம் அகதிகளின் அடிப்படைத் தேவைகளுக்காக ஆயிரத்து இருநூறு பிரெஞ்சு பிராங்குகள் கிடைத்தன.

"இப்ப பாருமைஸே! நான் மக்கோன் நகரத்திலும் பதிந்திருக்கிறேன். லியோன் நகரிலும் பதிந்திருக்கிறேன். எனக்கு இரண்டாயிரத்து நானூறு பிராங்குகள் வருகுது. இன்னும் சில இடங்களில் பதியத் திட்டமிட்டிருக்கிறேன். அதுதான் நான் சுவிஸ் போகவே யோசிக்கேல்ல" என்றார் பாலன்.

பிறகு நான் மட்டும் என்னவாம்?
நான் ஏன் சுவிசுக்குப்போகவேணும்?
எனது சிந்தனைகள் சிறகடித்துப் பறந்தன.

பத்து இடத்தில் பதிந்துவிட்டால்...! பத்து தர ஆயிரத்து இருநூறு! ஒரு வருடத்துள் என்னுடைய பிரச்சினைகள் எல்லாம் தீரந்து விடும். 'ஆ..ஊ..யஃகூ...!' மனது துள்ளிக் குதித்தது.

ஊரில இருக்கிற என்னுடைய சினேகிதர்களுக்கும் சொல்லவேண்டும்!
எதற்கும் முதலில் என்னுடைய அலுவல்களைப் பார்ப்போம்!

'பாலன், இந்தக் காசை எப்பிடி எடுக்கிறது?"

'அதுக்கேன் யோசிக்கிறீர். பாங்க் எக்கவுண்டைக் குடுத்தால் எக்கவுண்டுக்கு வந்து கிடக்கும்."

'ஓ! அப்ப ஒவ்வொரு இடத்திலயும் ஒவ்வொரு எக்கவுண்ட் திறக்கவேணும்."

'கட்டாயம். அதோட ஒவ்வாரு மாதமும் நாங்கள் இருக்கிறம் எண்ட உறுதிப்படுத்தி பஞ் பண்ணவேணும்."

'அதை எங்க ? எப்பிடி பஞ் பண்ணிறது?"

' பஞ்சிங் காட் வரும். அதை பஞ் பண்ணி அனுப்பினால் சரி."

'அது எங்க வரும்? அட்றஸ்?"

'அது எல்லாம் வெல்லலாம். சின்னப்பிரச்சினை"

நான் காசுகளை எண்ணி ஒவ்வொன்றாகக் கடன்களை அடைக்கத் தொடங்கினேன். சிறிதுநேரத்தில் 'அனஸ்தசி' கொடுத்த அப்பிராணி போல அப்படியே தூங்கிவிட்டேன்.

'பாலன். இனிப் பொறுக்கேலாது. நாங்கள் நாளைக்கே வேலையைத் தொடங்குவம் "என்றேன்.

'ஓம் நானும் பிளான் பண்ணித்தான் இருக்கிறன். முதல்ல அவிஞ்ஞோன் என்ற இடத்தில போய் பதிவம். அங்க என்ர ப்ரெண்ட் ஒருத்தன் இருக்கிறான்."

அவிஞ்ஞோன் பிரான்சின் மத்தியில் அமைந்திருந்தது.

பிறகென்ன?
மறுநாள் காலை அவிஞ்ஞோனுக்குப் பயணமானோம்?

'பாலன் ரிக்கற்றுக்கு எவ்வளவு காசு வரும்?"
'அதை விடும் நான் பார்த்துக்கொள்றன்" என்று மௌனமாகச் சிரித்தார்.

'என்ன இருந்தாலும், பெரிய தொகை. வரும் முதல் மாதக் காசில எடுத்து பாலனுக்குக் குடுத்திடவேணும்"

மக்கோனிலிருந்து அவிஞ்ஞோனுக்குப் பயணமானோம். இரண்டு ட்ரெயின் மாறவேண்டி இருந்தது.

"பாலன், ரிக்கற்?"

'யோவ்! பேசாமல் வாருமையா..."
அவரைப் பின் தொடர்ந்தேன்.

அவருடை கண்கள் கழுகுக் கண்கள் போல வெறிகொண்டலைந்தன.

பெட்டிக்குப் பெட்டி அநேக மாக ஒவ்வொரு தரிப்பிடங்களிலும் இறங்கி மாறினார்.

தலையில் தொப்பி மற்றும் நேர்த்தியான யுனிபோஃம் போட்டவர்களைக் கண்டபோது அலேர்ட் ஆகினார். ரிக்கற் இல்லாது எப்படிப் பயணிப்பது என்ற வித்தை அவருக்கு நன்றாகவே தெரிந்திருந்தது. சில மணி நேரத்துள் நானும் கற்றுக்கொண்டுவிட்டேன்.

அவிஞ்ஞோனில் இறங்கி பஸ் எடுத்தோம்.
"பஸ்ஸிலுமா?"
"ஓம். பஸ்ஸிலும் தான்."
சாரதி எங்களைக் கண்டுகொள்ளவே இல்லை.

நாலாவதோ ஐந்தாவது தரிப்பிடத்தில் இறங்கினோம். நேராகவே அவருடைய நண்பர் குறுணி தங்கியிருந்த தொடர்மாடி அறைக்கு அழைத்துச்சென்றார். அங்கே குறுணி இருக்கவில்லை. குறுணி பட்டப்பெயராகத்தான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கவேண்டும். நானும் அதைப்பற்றிய தேடலில் இறங்கவுமில்லை.

நாங்கள் திரும்பிவந்து குறுணிக்காகத் தெருவில் காத்திருந்தோம். அரைமணிநேரத்தில் குறுணி கையில் மளிகைச்சாமான்கள் சிலவற்றுடன் வந்தார். கையில் ஒரு கேஸ் பியரும் இருந்தது. எங்களைக் கண்டதும் புன்முறுத்தார்.
"வாங்கோ, என்ன புது ஆளோட?' என்று பாலனைப் பார்த்துக்கேட்டார்.

'ஓம்! பவான்ர ப்ரெண்ட். உங்கட சிற்றியையும் ஒருக்கால் பாப்பம் எண்டு வந்திருக்கிறம் " என்றார் பாலன்.

குறுணி பியரை உடைத்து நீட்டினார். பாலன் பக்குவமாக பருகத்தொடங்கினார்.
என்னிடமும் நீட்டினார்.

நான் சிரித்தேன்.

'வெக்கத்தை விட்டு அடியுங்கோ. இந்த நாட்டில கொஞ்சம் அடிச்சாத்தான் தாக்குப்பிடிக்கலாம்"' என்றார் குறுணி.

'சீ..சீ..அவர் சைவம் விட்டிடுங்கோ" என்று கண்ணைச் சிமிட்டிச் சிரித்தார் பாலன்.
குறுணி என்னைத் தொந்தரவு செய்யவில்லை.

குறுணி எங்களுக்காகச் சமைக்கத்தொடங்கினார். மெல்லிய கீலங்களாக இருந்த வெள்ளை இறைச்சியை சிறிய துண்டு துண்டாக அவர் வெட்டிச்சமைத்த முறை அழகாக இருந்தது. சட்டியில் குழம்பு கொதித்து வாசனை எழுந்தது. ஊறிய எச்சிலை அவர்கள் காணாதபடி விழுங்கிக்கொண்டேன்.

"என்ன! பன்றியோ?" என்றார் பாலன்.

'ஏன் சாப்பிர்றேல்லையோ ?" என்றார் குறுணி.

எனக்கு முகம் சுருங்கியது. பன்றிக்கறி சாப்பிட்டு எனக்கு அனுபவமில்லை. கொஞ்சம் அருவருப்பாகத்தான் இருந்தது.

குறுணி சமைத்துப் பரிமாறத் தொடங்கினார்.

தனக்கு வேண்டாம் என்றார் பாலன்.
"இப்ப கொஞ்சம் முதல் தானே பசிக்குது என்றனீங்கள்" என்றேன்.
கண்ணைச் சிமிட்டி என்னை மேலதிகமாகக் கதைக்காது தடுத்தார்.

எனக்குப் பசித்தது. குறுணி உணவைப்பரிமாறிய முறை வாயூறவைத்தது. இறைச்சிக்கறிக்குப் பக்கத்தில் ஒரு கத்தரிக்காய் வெள்ளைக்கறியும் இருந்தது. சோற்றில் ஆவி பறந்தது. நான் கோப்பையைக் கையிலெடுத்தேன். பாலன் என்னை ஒரு மாதிரியாகப் பார்த்தார். குறுணி, 'கொஞ்சம் பொறுங்கோ வாறன்" என்று விட்டு ரொய்லற் பக்கம் போனார்.

'என்ன சாப்பிடப்போறீரோ?" என்றார் பாலன்.

ஏன்? என்றேன் நான்.

நாங்கள் ஒரு ஊர்க்காரர். ஊரில உவங்கள்ர படலைப்பக்கமே போக மாட்டம் என்றார் பாலன்.

ஓ! இங்கயுமா? இப்பவுமா?

எனக்குப்பசித்தது. நான் கோப்பையைக் கையிலெடுத்தேன். உணவு அருமையாகத்தான் இருந்தது. இறைச்சிக்கறிக்கு மேல் எண்ணை போன்றதொரு திரவத்தை ஊற்றினார்.
ஓம். அதுவும் சுவையாகத்தான் இருந்தது.

பாலன் இன்னொரு பியர்ப்போத்திலைக் கையிலெடுத்தார்.

'குறுணி, என்ன மாதிரி இஞ்ச நிலமை? அகதியாகப் பதியலாமா?" என்றார் பாலன்.

'போன மாசம் வரை ஓகே. இப்ப நோண்டியாப்போச்சு.
அவன் ஒருத்தன் பத்து விசாவோட பிடிபட்டிருக்கிறான்."

'என்ன பிடிபட்டுப்போனானோ?"
எனக்கும் நாடி விழுந்தது. கனவுக்கோட்டை படக்கெனச் சரியத்தொடங்கியது.

விழுந்துகொண்டிருந்த கோட்டையை குறுணி பிடித்து நிறுத்தினார். 'இப்ப மார்சல் சிற்றி பரவாயில்லை. எல்லாரும் அங்கதான் போய்ப் பதியிறாங்கள். ஒண்டில்லாட்டி ஒண்டு இல்லாமலா போயிடும்?" என்றார் அவர்.

'எப்பிடி அவன் பிடிபட்டவன்?" பியரை உறிஞ்சியபடி பாலன் கேட்டார்.

'கார் வைச்சு ஓடினா பிடிபடாமல் என்னவாகும்?"

'என்னா கார் வைச்சு ஓடினவரோ! " பாலனும் பியருடன் சேர்த்துச் சிரித்தார்.

'இவர் ஒரு அகதி. வேலை இல்லை. கிளறுவங்கள் தானே! இனி ஆராவது காட்டியும் குடுப்பாங்கள்...?"

'என்ன காட்டிக்குடுப்பாங்களோ? யாரு?"
கலக்கத்துடன் கேட்டேன்.
'வேற யாரு? நம்மட ஆக்கள்தான்."

"பாலன் மார்சலுக்குக் போவமோ" என்றேன்.
'ஓ! இஞ்ச நிண்டு என்ன செய்யிறது. உடனயே கிளம்புவம் "என்றார் பாலன்.

நாங்கள் தயாரானோம். குறுணி எங்களை புகையிரத நிலையம் வரை வந்து வழியனுப்பி வைத்தார். நாங்கள் வழமையான பாணியில் மார்சல் நகருக்குப் பயணமானோம்.

தொடரும்..
*12.04.2024*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# பிரெஞ்சு –தமிழ் இலக்கிய ஆசிரியர் லெத்தீசியாவுடன் ஒரு சந்திப்பு

- அகரன் -

'Leticia IBANEZ' அண்மையில் பாரிசில் நடைபெற்ற இலக்கியச்சந்திப்பில் 'தமிழ் – பிரெஞ்சு தொடர்பு' பற்றிய கட்டுரையை படித்தவர். அவரின் தமிழ் எல்லோரையும் கவர்ந்திருந்தது.

பிரெஞ்சு இலக்கிய ஆசிரியரான இவர் INALCO (Institut national des langues et civilisations orientales) என்ற பல்கலைக்கழகத்தில் நவீன தமிழ் இலக்கிய பேராசிரியராக கடமையாற்றுகிறார்.

Valencia என்ற ஸ்பானிய நகரத்தில் பிறந்து பிரான்சின் லியோன் நகரத்தில் வளர்ந்தபோது தழிழர்களான அயலவர்களின் உதவிக்கு 'நன்றி' சொல்ல கற்றுக்கொண்ட தமிழ்ச்சொல் அவரை ஈர்த்துக்கொண்டது. அந்த சொல்லின் உந்துதலால் தொடர்ந்து தமிழில் வாசிக்க கற்றுக்கொண்டார்.

'வாசிப்பின் மூலம் வந்தடைந்த ஒலியின் அழகு தன்னை நவீன தமிழ் இலக்கியங்களைப் படிப்பது வரை கொண்டுவந்தது' என்கிறார்.

கடந்த ஆண்டு 'Prix Pierre-François Caillé -2023' என்ற விருதை சோபா சக்தியின் 'இச்சா' நாவலை 'la Sterne rouge' என்ற பெயரில் பிரெஞ்சு மொழிக்கு மாற்றிய சிறப்புக்காக பெற்றுக்கொண்டார். இவ்விருது பற்றி Agnès Debarge என்ற இலக்கிய கர்த்தா கீழ்வருமாறு கூறியிருக்கிறார்.

'Léticia Ibanez' தமிழில் இருந்து ஒரு இலக்கிய மொழிபெயர்ப்பாளராக, 'வேறொரு உலகத்திற்கு நம் கண்களைத் திறக்கிறார்'

'லெத்தீசியாவிடம் பேட்டி எடுக்க வேண்டும்' என்று கட்டளை வந்ததும் எனக்கு ஒருபக்கம் மகிழ்ச்சி, மறுபக்கம் பயம். லெத்தீசியா பிரெஞ்சு இலக்கிய ஆசிரியர். பயத்தின் காரணம் இலகுவாக கண்டறியப்பட்டது. அதற்கு எனக்கு பிரெஞ்சு இலக்கியம் பற்றி ஏதாவது தெரியவேண்டும். அதன் வாய்ப்புகளை எட்டிப்பார்த்தால் ஹமாஸின் நிலக்கீழ் பாதைகள் போல் நீண்டஇருட்டாக இருந்தது.

மகிழ்ச்சிக்கான காரணங்கள் கட்டிடங்களுக்கு நடுவே நீட்டிக் கொண்டிருக்கும் ஈபிள் கோபுரம் போல் எல்லோருக்கும் தெரிந்துவிடும் உயரமானவை. அவருக்கு எனது கைபேசியில் பேட்டி எடுக்கும் விருப்பத்தை சொன்னதும் தானாகச் சாத்தும் கதவுபோல் 'மே மாதம் 15 திகதிக்கு முன் ஒரு நிமிடத்தையும் மேலதிகமாக வைத்திருக்கவில்லை' என்று நாகரிகமாகக் கதவைச் சாத்தினார்.

நாங்கள் பிரெஞ்சு அரசாங்கத்திடம் எப்படியெல்லாம் கதைபேசி, அழுது, நடித்து, கதறி 'அகதி அடைக்கலம்' பெற்றவர்கள். லெத்தீசியாவிற்கு இந்த விடயங்கள் தெரியாமல் இருக்கலாம்.

வீட்டுக் கோழிமுட்டைகள், அண்மையில் வெளியான சில தமிழ் நாவல்களையும் எடுத்தபடி, 'லெத்தீசியா. உங்களைத் தொந்தரவு செய்ய வில்லை. நாம் மே 15 க்கு பிறகு உரையாடலாம். ஆனால் என்னிடம் உங்களுக்குச் சில நவீன தமிழ் நாவல்கள் பரிசாகத் தர இருக்கிறது. அவற்றை நான் உங்கள் வீட்டுக்கே வந்து தருகிறேன். அதற்கு ஏதாவது நேரம் இருக்குமா ?' என்று இத்தனை நாள் கற்று வைத்திருந்த தந்திரக் கலையை பயன்படுத்தினேன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அது தக்கபடி வேலை செய்தது. மாலை ஆறுமணிக்கு நேரம் தந்தார். ஒரு கிராமத்தில் இருந்து நகரத்திற்கு செல்பவன் போல் பயணமானேன்.

சரியான நேரத்தில் அவரின் வீட்டின் அருகே கார் தரிப்பிடத்திற்கு இடம் தேடி பலவீனப்பட்டுக்கொண்டிருந்தபோது நேரம் மாலை ஆறுமணியைகடந்தது. லெத்தீசியாவிடம் இருந்து அழைப்பு வந்தது.

‘ஓம்.. ஓம்.. அருகே கார் தரிப்பிடத்தில் நிற்கிறேன். கீழே உள்ள கஃபேயில் சந்திக்கலாமா ?’

‘இல்லை அகரன். உங்களை பார்ப்பதற்கு நாங்கள் எல்லோரும் ஆவலாய் உள்ளோம். நீங்கள் வீட்டுக்கு வாருங்கள்’

‘இல்லை..அது வந்து…’

‘நீங்கள் வருவதில் எங்களுக்கு மகிழ்ச்சி’

அந்த வீட்டு முகவரியைக் கைபேசியில் பின்தொடர்ந்தேன். மிக நெருங்கிய நேர்த்தியான ‘றூய் மல் மெசோன்’ நகரத்தின் மையப்பகுதியில் அவர் வீடு இருந்தது. அடுக்குமாடி வீட்டின் கீழ் அவர் காத்திருந்தார். ‘அவர் பள்ளியில் ஆசிரியர் பணியை முடித்து அப்போதுதான் வந்திருப்பார் உடனே புறப்பட்டுவிடவேண்டும்’ என்று நினைத்தபடி நெருங்கினேன்.

என்னைக் கண்டதும் தமிழ்ப் பெண்ணாகவே மாறினார். பிரெஞ்சு உதடுகள் எவ்வளவு லாவகமாக தமிழை உச்சரித்தன என்பதை நேரே பார்ப்பவர் எவருக்கும் உச்சுக்கொட்டும். வீட்டுக்குள் நுழைந்ததும் ஒவ்வொருவராக அறிமுகப்படுத்தினார். இரு மகள்கள். மூத்த பெண் ‘தெரிவை’ வயதில் இருந்தாள் அவள் பெயர் ‘சத்தியா’ குட்டிப்பெண் அப்பாவின் கையில் இருந்தாள் ‘ இவள் பெயர் காயத்திரி’ என்றார்.

‘என்ன சொல்கிறீர்கள் ? இவர்களின் பெயர் நிரந்தரமாக இதுதானா ?’ ‘ஆம் அகரன்’.

அறை எங்கும் புத்தக வாசனை. அங்கெல்லாம் தமிழ் புத்தகங்கள் தெரிந்தன. கண்ணில் பட்ட பிரமிள் புத்தக தொகுப்பு நீண்டிருந்தது. உங்களுக்கு பிரமிள் எழுத்துக்கள் பிடிக்குமா ?

‘நிச்சயமாக.என் கணவருக்கு அவர் கவிதைகள் ரொம்பப்பிடிக்கும்’

பிரமித்துப் போய் புத்தக அடுக்குகளை பார்த்தபடியே நின்றேன். ‘அமருங்கள்’ என்றார். லெத்தீசியாவின் ‘தமிழ் உறவு’ என்னை அமரவிடாமல் செய்தபடி இருந்தது. என்னுள் அவமானம், வெக்கம், வியப்பு , ஆச்சரியம் என்னைவிட உயர்ந்த படி இருந்தது. அப்போதே லெத்தீசியாவை ஏமாற்றி அவரின் நேரத்தை அவரிடமிருந்து பறிக்க ஆரம்பித்து விட்டேன்.

பிரான்சில் பிறந்து வளரும் தமிழ்த் தலைமுறைக்கு விட்டுக்கொடுக்காத எடுத்துக்காட்டாக இருக்கும் லெத்தீசியாவிடம் கற்றுக்கொள்ள நிறைய விடயங்கள் உண்டு.

அடுத்த இதழில் தொடரும்...


## அகரனின் நூல்கள்




**அதர் இருள்** - குறுநாவல்

**ஓய்வுபெற்ற ஒற்றன்** - சிறுகதைத் தொகுப்பு

அகரன் பிரான்ஸ் இல் இருக்கும் ஓர் இளம் எழுத்தாளர். பாரிசின் - குறிப்பாக லாசப்பலின்- தமிழ்வாழ்வுச் சூழலிலிருந்து தூரத்தில் வதியும் சந்தர்ப்பம் கிடைத்ததாலோ என்னவோ, அவரது எழுத்துக்களின் உள்ளடக்கம் தமிழ்ப் பரப்புக்குள் குறுகி நிற்கவில்லை. தமிழ்ப் புலம்பெயர் இலக்கியத்தில் ஒரு விசாலத்தை அவரது எழுத்துக்கள் காட்டிநிற்கின்றன. அவரது எழுத்துநடை அலாதியானது. இந்த அம்சங்கள் அகரனது தீவிர வாசகனாக என்னை ஆக்கியது என நம்புகிறேன்.

- Ravindran Pa



வளர் : 7 எழுத்து ஒப்பு நோக்குனர்
- சாந்தா முருகானந்தன்
- புனிதா கணேஸ்

படங்கள் மற்றும் ஓவியங்கள் :
நன்றி : முகநூல் மற்றும் google picture;


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குரலற்றவராய்

## ஆண்டு இரண்டில்...




எல்லோரும் எழுதவேண்டும். அதை எல்லோரும் வாசிக்கவேண்டும். அதுதான் இலக்கியத்தின் பேருண்மையென்று நம்பிய இலக்கியச் செயற்பாட்டாளர். அதற்காகவே "நடு" என்றொரு இணைய இதழை நடத்தினார். அதில் எல்லோரையும் எழுத அழைத்தார். சலிப்பில்லாமல் அழைத்துக்கொண்டே இருந்தார். எழுதியோரையும் தன் இயலுமைக்குட்பட்டவகையில் கௌரவித்தார்.

தன்னளவில், அவர் நம்பிக்கை கொண்டிருந்த இலக்கியத்தின் மீதான பற்றுதலில் தனியொருவனாக சோர்வில்லாமல் இயங்கிக் கொண்டேயிருந்தார். கதைகளை எழுதினார். நேர்காணல்களைச் செய்தார். இரண்டு கதைத் தொகுதிகளையும், ஒரு நேர்காணல் தொகுதியையும் குறுகிய காலத்திலேயே வெளியிட்டார். எழுதுவதோடு நின்றுவிடாமல் பதிப்பாளராகவும் செயற்படத்தொடங்கினார். மிக குறுகிய காலத்தில் ஐந்துக்கும் மேற்பட்ட நூல்களைப் பதிப்பித்திருந்தார். பலரின் நூல்களைப் பதிப்பிக்கவும் முயற்சி செய்துகொண்டிருந்தார். அந்தத் தொடர்ச்சி நீடித்திருந்தால் இன்னும் பல நூல்கள் வெளியாகியிருக்கும்.

ஆரம்பகாலத்தில் யாழ். இணையம் என்ற தளத்தில் எழுதிக்கொண்டு இருந்தார். அவரது எழுத்துக்களின் சேகரம் யாழ் இணையம் தான். அவரது நட்பு வட்டமும் பெரும்பாலும் அங்கிருந்துதான் தொடங்கியது. இலக்கியம் மீதான நேசமும் உந்துதலும்கூட அங்கிருந்துதான் ஆரம்பமாகியிருக்க வேண்டும். அதன் நீட்சியாக பாரிஸிலிருந்து வெளியாகிய ஆக்காட்டி இதழின் ஆசிரியர் குழுவிலும் சிலகாலம் செயற்பட்டிருந்தார்.

இலக்கியத்தைக் கடந்தும் கோமகனை நேசிக்கவும் உறவாடவும் இன்று நினைவுகூரவும் வைத்துக் கொண்டிருப்பது அவரது புன்னகையும் போலியற்ற அன்பும் தான். அவருடனான உரையாடல்களில் அவரிடமிருக்கும் மகிழ்வும் குழந்தைத்தனமான இயல்பும் மற்றவர்களுக்கும் தொற்றிக்கொள்ளும். அந்தச் சூழலை சந்தோசமான இடமாக மாற்றிவிடும். அவரிடம் கறாரான வரையறைகள் எதுவுமிருந்ததுமில்லை. தன்னைச் சுற்றியுள்ளவர்களின் இயல்புடன் ஒன்றிணைந்துகொள்வார். அதில் தனக்கானதொரு இடத்தினை ஏற்படுத்திக்கொள்வார். அதற்காகத் தன்னாலியன்ற எதையும் செய்யத் தயங்காத அவர் தன்னால் இயலாதொன்றெனில் அதையும் எந்த மறைவுமின்றிச் சொல்லிக்கொள்ளவும் தயங்கியதில்லை. நண்பர்கள் மீதான அவரது நம்பிக்கைகளும், நேசிப்பும், மரியாதையும் என்றும் குறைந்து போனதில்லை. அவர்களுக்கான மரியாதையை வழங்கியே பழகுவார். உரையாடலைத் தொடர்வார். நண்பர்களை நேசித்த, நண்பர்களது நலன்களிலும் அக்கறைகொண்ட அவரை நாங்களும் நேசித்தோம் என்று இறுதிவரை அவருக்கு உணர்த்த முயலவில்லை. அதற்காக அவரும் காத்திருக்கவில்லை.

அவர் இறந்துவிட்டார் என்ற செய்தி கேட்டு, எழுதிய வரிகளை இந்த இரண்டாம் ஆண்டு நினைவு நாளிலும் தேடி வாசித்தேன்.

நினைவுகளில்
ஏதாவதொரு நிகழ்வுகளில
எங்காவதொரு பொழுதுகளில்
ஞாபகங்களில் மீட்டுக்கொள்வோம்.
துயரத்தின் சாயல் சிறிதுமில்லாத புன்னகையை.
அப்போதெல்லாம் ஒரு புகைப்படம்
எடுத்துவைத்துக்கொள்வோம்.
தவறவிட்ட,
உங்கள் இருப்பை அதில் தேடிக்கண்டுகொள்வோம்.
சென்று வாருங்கள் கோமகன்.

எத்தனை சந்தர்ப்பங்களில் அவர்குறித்த நினைவுகளை மீட்டிருக்கின்றோம்?

நெற்கொழுதாசன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி. கிடைக்கப்பெற்றோம்



தமயந்தி எழுத்தாளர் மட்டுமல்ல,
அசையாப்படக் கலைஞர்,
கவிஞர், கூத்துக் கலைஞர்.
அதையும் தாண்டி கடல் சார்ந்த
சுற்றுச்சூழல் செயற்பாட்டாளரும் கூட.

வாழ்வின் அனைத்துப் பகுதிகளையும் அக்கறை கொள்ளும்
இலக்கியச் செயற்பாட்டாளர்களுக்கு தமயந்தி எப்போதும்
முக்கியமான எழுத்தாளராகவே தெரிவார்.

வட கிழக்கு நிலப்பரப்பின் பெரும்பகுதி கடலை அண்டிய
கரையோரக் குடியேற்றங்களைக் கொண்டமைந்தது.
மிக அதிகமான மக்கள் கடலின் தேவையோடும், உணர்வுசார்ந்த
நெருக்கத்தோடும்தான் கடலை பார்த்து வாழ்கின்றனர்.
கடல்தான் அவர்களுக்கு எல்லாமுமாக இருக்கிறது.

கடலை எப்படி அதை நெருங்கி வாழும் மனிதர்களிடமிருந்து
பிரித்துவிட்டிருக்கின்றனர் என்பதை, கடலை நம்பி வாழும் மக்கள்
எப்படி தமது வாழ்வின் இன்றியமையாத பகுதியாக கருதுகின்றனர்
என்பதை வெளிப்படுத்துவதினூடாகவும்,
கடல் சார்ந்த சமூகங்களிடமிருந்து அவர்களின் வாழ்வு எப்படி
தூரமாக்கப்பட்டு துயரத்திற்குள் தள்ளிவிடப்படுகிறது என்பதை
உணர இந்தத் தொகுப்பிலுள்ள கவிதைகள் நமக்கு உதவுகின்றன.

-றியாஸ் குரானா--

சூரியனைத் தின்றவர்கள் · தமயந்தி




## மார்ச் மாத பாரிஸ் இலக்கிய நிகழ்வுகள்







பேர்லினில் வதியும் இலக்கியச்
செயற்பாட்டாளர் ந. சுசீந்திரனின்
சொற்கள் வனையும் உலகம்,
தடங்களில் அலைதல் ஆகிய
நூல்கள் 7.3.2024 அன்று பாரிசில்
அறிமுகம் செய்து வைக்கப்பட்டது.

பிரான்சில் வதியும்
எழுத்தாளர்
சு.கருணாநிதியின்
கருக்குகள் மற்றும்
தாக்கங்கள் ஆகிய
இரு நூல்கள்
14.4.2024 அன்று
பாரிசில் வெளியிட்டு
வைக்கப்பட்டது.







நாவலாசிரியரும்,
அரசியல்
ஆய்வாளருமான
குணா கவியழகனின்
'கடைசிக்கட்டில்'
நாவல் 21.03.2024 அன்று
பாரிஸில் வெளியிட்டு
வைக்கப்பட்டது




மார்ச் 30, 31ம் திகதிகளில் 51வது இலக்கியச்சந்திப்பு
வாதப்பிரதி வாதங்களுடன் இரு முழுநாள் அரங்காக நடந்தேறியது.

இந் நிகழ்வையொட்டி சமகால 25 ஈழ எழுத்தாளர்களின் கதைகளின் தொகுப்பென
'இமிழ்' என்ற சிறுகதைத்தொகுப்பும் வெளியிட்டு வைக்கப்பட்டது.
தொகுப்பின் தொடர்ச்சியாக, கதைத்தேர்வு, இலக்கியத்தில் தனிநபர் ஒழுக்கம்,
பாலியல் சுரண்டல் என முகநூல் வட்டத்தில் மிகநீண்ட விவாதம்
நடைபெற்றுவருவதும் குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதமும் வாழ்வியலும்

- விஜி நாகராஜா

(சிட்னி)



## பிரிதல்

'தைரியம்தான் வாழ்க்கை. பயம்தான் மரணம்." உலகில் எந்த ஒரு உயிரா யினும் பிரிதலைச் சந்தித்துத்தான் ஆகவேண்டும். பிரிதல் எம்மைப் பலவழிகளில் பாதிக்கின்றது. உடல் ரீதியாகவும், மனரீதியாகவும் பாதிப்புகளை ஏற்படுத்துகின்றது. சில உறவுகள் இவ் உலகை விட்டே நீங்கும்போது நிரந்தரமாகவே பிரிந்துவிடுகிறோம். அது எமக்குப் பெரும் இழப்பாகவே அமைகிறது.

எனக்கு இப்போதும் நன்றாக நினைவிருக்கிறது எனது பெற்றோரைப் பிரிந்த கணங்கள்...
நீண்டகாலமாக ஒரே வீட்டில் வசித்து வந்தோம். அவர்கள் நோய்வாய்ப்பட்டுக் கிடந்த இறுதிநாட்கள்... என்னவென்று சொல்லமுடியாத ஒரு தவிப்பு, ஒரு கவலை. பிரிவை ஜீரணிக்கமுடியாத நிலை. என்னைச்சுற்றி ஒரு வெறுமை. கண்களில் கண்ணீர். பயம், பசியின்மை எனப் பலவிதமான போரட்டங்களால் மனமும் உடலும் பாதிப்படைந்திருந்தது.
இதிலிருந்து நான் எப்படி விடுபடுவேன்? எப்படி இதைக்கடந்து போவேன்? பெரிய கேள்விக்குறி எனக்கு முன்னால் தோன்றியது.

முதலில், என் தாயாரைப் பிரிந்தேன். அப்போது எனது அப்பா மிகவும் உடைந்துவிட்டார். 72வருட தாம்பத்திய வாழ்க்கை. ஒரு சிலரால் தான் அது முடியும். ஒரு சிலருக்குத்தான் அது சாத்தியம். ஒவ்வொரு தடவையும், அப்பா அவர் அறையிலிருந்து மூக்கைச் சீறும்போதும், அவர் அழுகிறார் என்பதை எம்மால் உணரமுடிந்தது. நேர காலம் இருக்கவில்லை. நடுச்சாமத்தில்கூட அப்பா அழுவார். அந்த நேரங்களில் முடிந்தளவுக்கு நாம் அவரைத் தேற்றினோம்.

அடுத்த எட்டு மாதத்தில் அப்பாவையும் இழந்தபோது வீடே வெறுமையாகிவிட்டது. நான் எதைச் செய்தாலும் அப்பா வந்து முன்னே நின்றார்.

கோவிட் காலங்களில், வீட்டில் தனியே இருந்து நான் வேலை செய்யும் சந்தர்ப்பம் உண்டானது. என்னால் தனியே இருக்க முடியவில்லை. எங்கோ ஒரு மூலையில், தண்ணீர்க்குழாய் திறப்பதுபோலவும், மைக்கிறோ அடுப்பு வேலை செய்வது போலவும் பலவகையான சத்தங்கள் கேட்டன. எல்லாமே பிரம்மைதான். எனது வாழ்க்கையில் கடினமான நாட்களைக் கடந்துபோகவேண்டி இருந்தது. பிரிவு என்னை மிகவும் வாட்டியது. இப்போதும் அவர்கள் என்னுடன் வாழ்வதாகவே எண்ணிக் கொள்கிறேன். வீட்டை விட்டு வெளியே செல்லும்போதும், "அப்பா, அம்மா வீட்டைக்கவனமாகப் பார்த்துக்கொள்ளுங்கோ" என்று சொல்லிவிட்டுத்தான் போவேன்.

அன்பு காட்டும் உள்ளங்களை நிரந்தரமாகப் பிரியும்போது, நாம் மனநோய்க்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளாகின்றோம். காலம்தான் சிறந்த மருந்தாக நம்மை மாற்றும்.

### பள்ளிப் பிரிவு

நமது வாழ்க்கையில் பல கட்டங்களில் பிரிவைச் சந்திக்கிறோம். அதில், முதலாவதாக ஏற்படும் பிரிவு நமது பாடசாலை வாழ்வில்தான் ஏற்படுகிறது.
அப்பப்பா...! எவ்வளவு சந்தோசமான காலங்கள் அவை. நமக்குப் பாடம் சொல்லித்தந்த ஆசிரியர்கள், அதிபர்கள், நம்கூட பயணம்செய்த சக மாணவர்கள்... அதில் ஒரு சிலரை நிரந்தரமாகவே பிரியவேண்டிய துர்ப்பாக்கியம் கூட ஏற்பட்டிருக்கிறது. அது மட்டுமா! பாடசாலைக் கட்டடங்கள், விளையாட்டு மைதானங்கள். எல்லாவற்றையும் இழந்து விடுகிறோம். அப்போது அதன் தாக்கம் தெரிவதில்லை. அந்தப் பசுமையான நினைவுகளும், இளமைக்காலமும் திரும்ப வராதா என ஏங்கும்போதுதான் அந்த பிரிவுத்துயரின் வலி புரிகிறது.

நட்பைப் பற்றிக் குறிப்பிடும் சுகிசிவம் ஐயா "வாழ்க்கையில் மிகப்பெரிய பரிசு என்னவென்றால், "வாடா போடா" என்ற நட்பை எவனொருவன் இறுதிவரை வைத்திருக்கின்றானோ, அவன் இந்தப் பிரபஞ்சத்தால் ஆசீர்வதிக்கப்பட்டவன்" என்கிறார்.
ஆனால் நாமோ பாடசாலை நட்பைப் பாதி யிலேயே பிரிந்து விடுகிறோம்.
ஆம்! முப்பது நாற்பது வருடங்களின் பின் திரும்பவும் தொடரும் வரம் பெற்றவர்கள் பாக்கியசாலிகளே!

பிள்ளைகளைப் பெற்று அவர்கள் திருமணமாகும்போதும் ஒரு பிரிவு ஏற்படுகிறது. அதிலும் பெண்குழந்தைகளைப் பிரியும்போது அப்பாமார்களுக்கே கண்கள் கசிந்துவிடுகின்றது. பிள்ளைகளைத் தாலாட்டிச் சீராட்டி வளர்த்து, அவர்களை இன்னுமொருவரிடம் ஒப்படைக்கும்போது நாம் மனரீதியாகச் சந்தோசம் அடைந்தாலும், எம் பிள்ளை இனி எமக்குச் சொந்தமில்லை என உணரும்போது
ஏற்படும் சந்தோசம் கலந்த துக்கம் ஏற்படுகிறது. இதுகூட விசித்திரமான பிரிவு தான்.

### குடும்ப உடைவு

குடும்ப உடைவினால் உண்டாகும் பிரிவு இன்று அடுத்த தலைமுறையினரிடம் மிகவும் பூதாகரமாக வளர்ந்து வருகின்றது. சிறு சிறு கருத்து வேறுபாடுகள் விவாகரத்தில் போய் முடிகின்றன. பொறுமை என்பதை அடுத்த தலைமுறையினரிடம் காண முடியாத ஒன்றாக உள்ளது.

ஒரு தொலைக்காட்சி நிகழ்ச்சி. அதில் விவாகரத்துப் பெற்றுக்கொண்ட இளம் மனைவி கவலைப்பட்டு அழுதுகொண்டிருந்தார். தான் சகோதரர், தாய் தகப்பன் சொற்கேட்டு அவசரப்பட்டுவிட்டதாகவும், அவர்கள் தன்னையும், தனது மகளையும் கவனிப்பதாகச் சொல்லிவிட்டு, இன்று யாருமே தன்னைக் கவனிப்தே இல்லை என்றும், ஒவ்வொரு நாளும் தான் செய்த தவறை எண்ணி வருந்துவதாகவும் வருந்திக்கொண்டிருந்தார்.

நான் திரும்பவும் அவருடன் சேர்ந்து வாழவிரும்புகிறேன். ஆனால், அவர் மறுமணம் சொய்துகொண்டுவிட்டார். இனி என்னால் எதுவும் செய்யமுடியாது எனவும் அவர் தொலைக்காட்சியில் நீண்ட நேரம் அழுதுகொண்டிருநதார். அவரைப் பார்ப்பதற்கு மிகவும் கலையாக இருந்தது.

குடும்பங்களில் பிரிவு ஏற்பட நிறையக் காரணங்கள் உள்ளன. இதில் அந்நியர் தலையீடுகள் பெரும் பங்கு வகிக்கின்றன. இவற்றை நாம், பொறுமையாகவும் மதிநுட்பத்துடனும் அணுகினால் மட்டுமே கடந்துவிடமுடியும்.

### 90s kids

தொண்ணூறுகளில் பிறந்த பிள்ளைகளின் விவாகரத்து வீதம் கூடவாக இருப்பதாக, ஒரு மனநல மருத்துவரின் கட்டுரையொன்று கூறுகின்றது.

நாம் எவ்வளவு படித்துப் பட்டம் பெற்றாலும், எவ்வாறு உயர் பதவியை அடைந்து அதிக சம்பளம் வாங்கினாலும், வாழ்க்கையைச் சரியாக அமைக்கத் தெரியாவிட்டால், அமைந்த வாழ்க்கையைச் சரிவரக் கொண்டுசெல்லத் தெரியாவிட்டால்...! நாம் படித்துப் பட்டம் பெற்றதன் பலன்தான் என்ன? அந்தப் படிப்புக்கு எந்த அர்த்தமுமே இல்லை.

"அதிக எதிர்பார்ப்புகளே அதிக ஏமாற்றத்திற்கு வழிவகுக்கின்றன. பெற்றோர்களே பிள்ளைகளுக்கு முன்னுதாரணமாய் இருக்கிறார்கள். பெற்றோர்கள் சொல்வதைக் கேட்பதை விட, பெற்றோர்களைப் பார்த்தே பிள்ளைகள் வளர்கிறார்கள்"

நாம் பிள்ளைகள் முன் நல்ல கணவன் மனைவியாக வாழ்வதை விட, நல்ல அப்பா, அம்மாவாக வாழவேண்டும்.

"புரிதல் இருந்தால் பிரிதலுக்கு இடம் இருக்காது"
பிரிதல் அல்லது பிரிவு ஆரோக்கியமான சமுதாயத்தை உருவாக்காது.

"அன்பைக் கவனமாகக் கையாண்டால் வெற்றி உங்களுக்கே! பிரிவுக்கே இடமில்லை.

...தொடரும்....மனிதமும் வாழ்வியலும் ....


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மெல்பேர்னில்–
# 'கும்பகோணம்' நூல் வெளியீடு




தொல்காப்பியத்துக்கு முற்ட்படட தமிழ் இலக்கண நூல் அகத்தியம். அகத்தியம் தந்த தலைச்சங்கப் புலவரான தமிழ் முனிவர் அகத்தியர் சமாதி உறையும் கும்பகோணம், ஒரு கோவில்களின் நகரம் ஆகும். இந்நகரத்தின் கோவில்களைப் பற்றிய வெகு விபரமான புத்தகத்தை ஆங்கிலத்தில் வெளியிட்டு இருக்கிறார் மலேசியத் தமிழரும் அவுஸ்திரேலியா வாசியுமான நேசா ஆறுமுகம் அவர்கள். பல வருடங்களுக்கு முன் கும்பகோணம் சென்றபோது, அங்கு ஒரு ஈர்ப்பு விசை இருந்ததால் பின்பு ஒவ்வொரு வருடமும் சென்று வாரக்கணக்கில் நின்று பல அரிய தகவல்களைத் திரட்டி புத்தகத்தினை வெளியிட்டு இருக்கிறார். மெல்பேர்னில் நடந்த இப்புத்தக வெளியீட்டுக்கு (24/03/2024) நூற்றுக்கு மேற்பட்டவர்கள் பங்கு பற்றியமை மகிழ்ச்சியையும் ஆறுதலையும் தந்தது. புத்தக வெளியீட்டு விழா மறுக்க முடியாத வெற்றியாக அமைந்தது, ஆசிரியர், நன்றியுணர்வுடன், இதயப்பூர்வமான உரையாடல்களில் ஈடுபட்டார். இந்நிகழ்ச்சியானது, ஒவ்வொரு விபரத்தையும் கவனத்தில் கொண்டு, அண்ணத்தை மகிழ்விக்கும் சிற்றுண்டிகள் முதல், புத்தகத்தின் கருப்பொருள்கள் பற்றிய ஆசிரியரின் வசீகரிக்கும் விளக்கக்காட்சி வரை ஒழுங்கமைக்கப்பட்டிருந்தது.

– வித்தகபுரத்தான்




## சஞ்சயனின் நூல்கள்




**'படுவான்கரை போராளிகளின் வாழ்வும் துயரமும்"**
*(2013)*

**'தினம் ஒவ்வொன்றும் பெருங்கனவு"**
புற்றுநோயால் பாதிக்கப்பட்டு மீண்ட ஒரு பெண்ணின் அனுபவப் பகிர்வு
*(2023)*

**'நினைவு மறந்த கதை"**
நினைவு மறந்த நோயில் வாழும் தாயுடனான அனுபவ ஆற்றுகை
*(2023)*




**'தேவதைகளின் பாதணிகள்"**
பிள்ளைகளைப் பிரிந்து வாழும் தந்தையின் நினைவுகள்
*(2024)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாயோன் பக்கம்

## புலம்

புலன் என்ற சொல்லில்
இருந்தே பொருளைக்
கொண்டு கொண்டுள்ளது.
ஐம்புலன்களால்
அனுபவிக்கக்கூடிய நிலப்பரப்பு
புலம் எனில் புலம் என்பது
தாயகத்தை மட்டும் குறிக்காது.
வெளிநாடுகளில் வாழும்
இடங்களும் புலம் என்றே
பொருள் கொள்ளப்படும்.

---

எனக்குப் பிடிக்காது
என்பதற்காக
ஒட்டு மொத்த உலகத்துக்கும்
பிடிக்காது
என எண்ணுவது
அனுதாபத்துக்குரியது!




## ஆவணம்

தமிழ் அகராதிகளில் ஆவணம் என்ற
சொல்லுக்குப் பொருள்.

1. Market, bazaar கடை வீதி
2. Right to property, ownership; காணி உறுதி.
3. Slavery, bondage, அடிமை ஓலை.

ஆனால் இன்று ஊடகங்கள் ஆவணம்
என்றால் document என்று அர்த்தத்தை எங்கும்
பிரதிபலிக்கின்றன.

## "கொன்" "சல்"

பேராதனைப் பல்கலைக்கழகத்தில்
ஆண் ஆணுடன் உரையாடுவது "கொன்"
என்றும், ஆண் பெண்ணிடம் உரையாடு-
வது "சல்" என்றும் மாணவர்களிடையே
அழைக்கப்படுகிறது. இதன் மூலம் எப்படி என
ஆராய்ந்த போது, தமிழ் அகராதியில் கொன்
என்றால் பயனற்றது என்று அறியப்படுகின்றது.
ஆனால் எல்லா ஆண்-ஆண் பேச்சுக்களும்
பயனற்றது என்று கொள்ள முடியாது.
Conversation (உரையாடல்) இருந்து Con
வந்திருக்கலாம் என தோன்றுகின்றது.
சல் என்பது சல்லாபத்தின் சுருக்கம் ஆக
இருக்கலாம்.

மேற்குறிப்பிட்டவை, ஒரு தமிழ் அறிஞருடன்
உரையாடும் போது கிடைத்த தகவல்கள்.

நீ வருவதற்கு முன்பு, நன்றாக இருந்தேன்
நீ போன பிறகும் நன்றாக இருக்க
நீ இருக்கும் போது எனை மாசடையச் செய்யாதே மானிடனே!
இப்படிக்கு
பூமாதேவி
Please recycle your plastics
GO GREEN

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிந்திக்க வைத்த வினோத உடைகள்

- முருகையா மணிமாறன்

வெறுமனே பொழுதுபோக்காக, பார்வையாளர்களை மகிழ்வூட்டும் நிகழ்வாக,பாடசாலைகளில் மற்றும் ஊர் விழாக்களில் நடைபெற்றுவந்த வினோதஉடைப்போட்டிகள் இன்று பார்ப்போரைச் சிந்திக்கத்தூண்டும் கடும் போட்டிகளாக மாறி விட்டன.

போட்டியாளர்களும், அவர்களது சிந்தனைகளும் நடுவர்களைத் திணற வைக்கின்றன.

சமூகம் விழிப்புணர்வடைய வேண்டிய பெரும்செய்தியை ஒரு பதினைந்து நிமிடத்தில் மிகவும் சூட்சுமாக அவர்கள் சொல்லிவிட்டுப் போகிறார்கள்.

ஒரு ஆசிரியராக வகுப்பறையில் புகுத்தவேண்டிய விஞ்ஞான எண்ணக் கருக்களை வினோத வுடைப் போட்டியாளர்கள் மிக இலகுவாக பார்வையாளர்கள், மாணவர்கள் மத்தியில் புகுத்திச் செல்கிறார்கள்.

அண்மையில் நடைபெற்ற யா/பண்டத்தரிப்பு மகளிர் பாடசாலையின் இல்ல மெய்வல்லுநர் நிகழ்வில் மனதைத் தொட்ட சில வினோத உடை வெளிப்பாடுகளை வளர் வாசகர்களுடன் பகிர்ந்து கொள்வதில் மகிழ்வடைகிறேன்.

## தென்னை மரம்

கையில் தென்னோலைகள், உடலை மூடி பட்டுப்போன தென்னை மரத்தின் பட்டை என தன்னை தென்னை மரமாக உருவகித்து வருகிறார் அந்தப் போட்டியாளர். நடுவருடனான உரையாடலின்போது 'தான் ஒரு நோய்வாய்ப்பட்ட தென்னை மரமாகவும் தன்னை வெண்பூச்சிகள் தாக்கியிருப்பதாகவும் தனக்கு உரிய சிகிச்சை அளிக்காது விடின் தனது அழிவு நிச்சயம் என்பதுடன் தனது இனத்தின் இருப்பே கேள்விக்குறியாகிவிடும் எனவும் தன்னைப் பாதுகாக்கக் கூடிய பரிகார நடவடிக்கைகளையும் கூறி அவற்றை நீங்களே மேற்கொள்ளவேண்டும் " எனவும் எச்சரிக்கிறார். மேலும், தாம் இல்லாத உலகத்தைப் பற்றி (தேங்காய் இல்லாத உலகைப்பற்றி) ஒரு கற்பனை எதிர்வு கூறலை விதைத்துவிட்டும் செல்கிறார்.

## 2200ம் ஆண்டுப் பெண்மணி

வினோதமான ஆடை, முதுகில் ஒரு கண்ணாடிப்பெட்டி, கண்ணாடிப்பெட்டியுள் ஒருதாவரம் அப்பெட்டியில் இருந்து வரும் குழாய் போட்டியாளரின் மூக்கினுள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்கிறது. மறு கையில் குடிநீர்ப்போத்தல். தன்னை 2200 ஆண்டுக்காரியாக(2200ம் ஆண்டுக்குரிய பெண்மணி) உருவகிக்கிறார். தான் 2023ம் ஆண்டை நோக்கி முன்நகர்ந்து இன்றைய விளையாட்டுப் போட்டிக்கு வந்திருப்பதாக கூறுகிறார். நடுவராக நின்ற ஆசிரியரின் சேலைத் தாவணியைப் பிடித்து கண்களில் ஒற்றி முகர்கின்றார் தான் சேலையைமுதலில் பார்ப்பதாக அவைக்குக் கூறுகின்றார். மூக்குக் கவசத்தைக் கழற்றி இயற்கைக் காற்றை நுகர்கின்றார். மட்டற்ற மகிழ்ச்சியை வெளிப்படுத்துகிறார். பாடசாலையின் சூழலில் உள்ள தாவரங்களை மரஞ்செடிகளை வியப்புடன் பார்க்கின்றார் அவைகள் தனக்கு மட்டற்ற மகிழ்வையும் குளிர்மையையும் தருவதாகக் கூறுகின்றார். நடுவர்கள் குறுக்கிட்டு 2200 தொடர்பாக வினாவ 2200 இல் சுவாசிக்கும் பிராணவாயுவும், குடிநீருமே விலை மதிப்பற்ற பொருளாக இருக்கும் எனவும் காடுகளையும் நீர்வளத்தையும் பாதுகாக்க காத்திரமான ஆலோசனைகளை அவைக்கு முன்வைக்கிறார் . ஆடைகள் தொடர்பாக வினாவப்பட்டபோது சூட்சுமமாகத் தனது ஆடைகள் உள்ளே அணிந்திருப்பதாகவும் உங்கள் கலாசாரத்தை மதித்து அருகில் உள்ள கடையில் தான் ஆடைகளை வாங்கி அணிந்து இங்கு வந்திருப்பதாகவும் கூறுகின்றார். நடுவர்களின் கேள்விகள் எதற்கும் பிடி கொடுக்காது அவையை அடக்கித் தனது கருத்துக்களைப் புகுத்திய விதம் சிறப்பு. நடுவர்களும் விட்ட பாடில்லை 'மகளே உங்கள் பெயர் என்ன?" என ஒரு நடுவர் வினாவ 'நான் 2200ம் ஆண்டுக்காரி" என மீண்டும் விடையளிக்கிறார். தனது உரையால் எம்மை 2200 இற்கே அழைத்துச் சென்றுவிட்டார் அந்தப் போட்டியாளர்

## சிறைக்கைதி

கிழிந்த ஆடை. பலநாள் குளிக்காதவர் போல் தோற்றம். வாடிய உடல். தான் ஒரு சிறைக்கைதி எனவும் சிறையிலிருந்து விடுதலையாகி வருவதாகவும் வரும் வழியில் பாடசாலை மாணவர்கள் கூட்டமாக நிற்பதால் தான்பட்ட கஸ்ரத்தை மாணவர்களிற்கும் கல்விச் சமூகத்திற்கும் கூறி போதைக்கு அடிமையாகாமலிருக்க வேண்டும் என்ற நல்ல செய்தியை



பரப்புகிறார். போதைக்கு அடிமையாகித் தான் பட்ட கஸ்டங்களை, சிறையில் பட்ட கஸ்டங்களை, நன்நடத்தைப் பள்ளியில் உள்ள கஸ்டங்களை உணர்த்தி மாணவர்ளை நல்வழிப்படுத்திச் செல்கிறார்.

## வான தேவதை

புவிவெப்பமடைகிறது, புவி அழிவை நோக்கி நகர்கிறது என்ற அவலச் செய்தியை தாங்கியவாறு பறந்து வருகிறாள் வானதேவதை. சற்று மாறுபட்ட மொழிநடையில் (கிறிஸ்தவ ஆசீர்வதிப்பு மொழி நடையில்) நடுவர்களை எச்சரிக்கிறாள். நடுவர்கள் புவி வெப்பமடைதலை எவ்வாறு குறைத்துக் கொள்ளலாம் என்று வினவ, களத்தைத் தனதாக்கி காத்திரமாக அறிவுரைகளை வழங்குகிறாள். காடழிப்பு, ஆழ்துளைக் கிணறுகள், பொலித்தீன் பாவனைகள், அதீத பொதுப் போக்குவரத்தால் சூழல் மாசடைதல் இவற்றால் வரும் பேராபத்துகளென நீருக்குள்ளால் நெருப்பைக் கொண்டுபோவதுபோல பார்வையாளர்களுக்குப் பெரும் வகுப்பையே எடுத்துவிட்டுப்போகிறாள் வானதேவதை.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பழைய பொருட்களைச் சேகரியுங்கள்!
# அவை நம் பண்பாட்டைப் பேசும்!!



## என்வீட்டுப் பொக்கிசங்கள்

**பஞ்சகல்யாணி**

பொக்கிசங்கள் பல வகை. நான் சேர்த்த பொக்கிசங்களும் பல வகை.என்னுடைய பெற்றோருக்கு நான் ஒரு பொக்கிசம் என்று சின்னனிலை சொல்லுவினம்.அது போல என்னுடைய பெற்றோர், பிள்ளைகள், நெருக்கமான நண்பர்கள், புத்தகங்கள் எல்லாம் எனது விலைமதிப்பிட முடியாப் பொக்கிசங்கள். இவை எல்லாவற்றையும் விட என்னிடம் இன்னொரு வகையான பொக்கிசம் உண்டு. அதுதான் பழம் பொருட்கள். எமக்கு முந்திய எமது சமுதாயம், குறிப்பாகத் தமிழ்ச் சமுதாயம் பாவித்த பல பொருட்களை நான் சேகரித்து வைத்துள்ளேன்.

**ஏன் நான் சேகரித்துக் கொண்டிருக்கிறேன்?**

எப்படிச் சேகரித்துக் கொண்டிருக்கிறேன் என்றால் அது பெரிய கதை. என்னுடைய தாய்வழிப்பேரன் (அப்பு) ஒரு விவசாயி.
அவரிற்குப் பன்னிரண்டு குழந்தைகள். பெரிய குடும்பம். அதற்குத் தேவையான பொருட்கள் எல்லாவற்றையும் கதிர்காம யாத்திரை சென்று வரும் போது வாங்கிச் சேகரித்துள்ளார். நாட்டில் நிலவிய சுமுகமற்ற சூழலால் சிறிய தூர இடப் பெயர்வுகள், பெருந்தூர இடப்பெயர்வுகள், நாட்டை விட்டு வெளியேறுதல் எல்லாம் நமது காலத்தில் நடந்தது. அதன்போது என்னுடைய அப்பு வீட்டுச் சாமான்கள் எல்லாம் களவாடப்பட்டன.

என்னுடைய அம்மா ஒரு ஆசிரியர். இராமநாதன் கல்லூரிப் பழைய மாணவி. பேராதனைப் பல்கலைக்கழகப் பட்டதாரி, அவரிடம் பல சிறப்பியல்புகள் இருந்தன. அதில் ஒன்று பொருட்களைப் பேணுதல். இலங்கையின் பல்வேறு இடங்களில் வசித்தாலும் எங்கள் (பிள்ளைகள்) நால்வரினதும் பொக்குழ்கொடி , பிறந்தநாட் சட்டைகள் என்று பலவற்றைப் பேணி வைத்திருக்கிறார். இந்தப் பேணுதல்தான் பிற்காலத்திற் பெற்றோரைப் பேணுதல் என்று விரிந்து செல்கிறது. இன்றைய நாட்களில் இலங்கையில் தமிழ்ப் பெற்றோர், பராமரிக்கப் பிள்ளைகள் அருகில் இல்லாமல் அல்லற்படுவது உலகறிந்த விடயம்.

நிற்க, எனது அம்மா தொலைந்து போன தமது பழைய சாமான்களைப் பற்றி அடிக்கடி கதைப்பா கவலைப்படுவா. நான் யாழ் போதனா வைத்தியசாலையில்2008 காலப்பகுதியில் வேலை செய்து கொண்டிருக்கும் நாட்களில் KKS வீதியால் நடந்து போனபோது ஒரு கடையில் அம்மிகள், ஆட்டுக்கல்லுகள் எல்லாம் வெளியே அடுக்கப்பட்டிருந்தன.அம்மா ஞாபகத்திற்கு வந்தார். அன்று அந்தக் கடையிற் காலடி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்ததுதான், பின்பு ஒவ்வொரு நாளும் மாலையில் அங்கு செல்வேன். மூக்குப்பேணி, கைவிளக்கு, பாக்குவெட்டி, தாம்பாளங்கள், குடங்கள், வெற்றிலைத்தட்டு, பூக்கூடை, பாக்குரல் (பித்தளை, வெண்கலம், மரம்) என்று கொஞ்சச் சாமான் வாங்கி பக்கத்திலேயே ஒரு கடையில் polish பண்ணி வீட்டை கொண்டு போனால் அம்மாக்கு நல்ல சந்தோசம், ஆனாலும் "ஆற்றை வீட்டுச் சாமானோ தெரியாது பிள்ளை, கள்ளச் சாமானாயும் இருக்கும் "என்று என்னைச் சங்கடப்படுத்தினார்."ஏன் பிள்ளை உழைச்ச காசை வீணாக்கிறாய் " என்று அப்பா சொன்னார்.



இருந்தாலும் நான் தளர்ந்துவிடவில்லை. வெற்றிலைப் பெட்டி, மூக்குப்பொடிப்பெட்டி, சுண்ணாம்புச் சிமிழ், பணிக்கம், பித்தளை iron box, செம்புகள், பாற்செம்பு, லோட்டா, தூக்கு விளக்கு, தூண்டாமணி விளக்கு, குத்துவிளக்கு, மேசை விளக்குகள், இலக்சுமி விளக்குகள், பிள்ளையார் விளக்குகள், பாவை விளக்கு, வட்டில், கரண்டிகள், அரிதட்டு , தேயிலை வடி, அரிக்கன் சட்டி , இட்டலிச்சட்டி,சொதிச்சட்டி, கறிச்சட்டி, தூக்குச்சட்டி, இடியப்ப உரல், கொத்து, சுண்டு, பணப்பெட்டி எல்லாம் பித்தளையில் வாங்கினேன். ஐரோப்பிய நாட்டவர்கள் அந்தக் கடையிற் பல பொருட்களை வாங்கியதைக் கண்டேன்.



என்னுடைய சேகரிப்புக்களை வீட்டிற்கு வருவோரிற்கெல்லாம் காட்டி அவர்களையும்சேகரிக்கத்தூண்டினேன்.கூடுதலாக அந்தச்சாமான்களைப் பாவித்தவர்கள் அவற்றைக் கண்டவுடன் உள்ளம் பூரித்தனர். நாங்கள் உதையெல்லாம் பெட்டகத்துட் பூட்டி ஒரு கரையாக வைத்துள்ளோம் என்றனர். பிந்திய காலத்தவர்கள் உதெல்லாம் என்னத்துக்கு என்று சலித்துக் கொண்டனர்.



பல இடங்களிலும் பொருட்களை வாங்கினேன். அதன்போது பல சங்கடங்களையும் எதிர் கொண்டேன். ஊரிலே "பழைய சாமான் வாங்கப்படும், பழைய புத்தகங்கள், காற்சலங்கைகள், தளபாடங்கள், அலுமீனியம், பித்தளைப் பொருட்கள்" என்று கத்திய படி சிறிய வாகனம் செல்லும். அந்தப் பொருட்கள் நீர்வேலியில் ஓர் இடத்தில் குவிக்கப்பட்டுப் பிரிக்கப்படும். ஒரு நாள் அந்த இடத்தில் இறங்கிவிட்டேன். பழைய சாமான்களையெல்லாம் தாண்டி முதலாளியைக் கண்டு "பித்தளைப் பாக்கு வெட்டி இருக்கோ?"என்று கேட்கவும், அவர் உசாராகி "எங்கையிருந்து வாறியள்? எங்களைக் களவு பிடிக்கவோ அடுக்கு? பித்தளையிலும் பாக்குவெட்டி இருக்கோ? என்று உறும நான் அந்த இடத்திலிருந்து நகர்ந்தேன்.



பின் கல்வியங்காட்டில் பித்தளை உருக்குவோரிற்குப் பல பொருட்கள் மொத்த விற்பனையில் விற்றுக் கொண்டிருக்க அதை மறித்துச் சில பொருட்களை நான் வாங்கினேன். ஏதோ என்னால் முடிந்தது. இன்னுமோரிடத்திற் கலப்பை வாங்கச் சென்ற போது பதின்ம வயதுச் சிறுமிதான் வீட்டில் நின்றாள். கலப்பையைக் காட்டுமாறு கேட்டபோது கதியால் போட உதவும் இடிகட்டையைக் காட்டினாள்.



தனியே பித்தளை என்றில்லாமல் மரத்தாலான மாட்டு வண்டிற் சில்லுகள், பல்லாங்குழி, உழவாரம், கைத்தடி, கலப்பை, மத்து, தளபாடங்கள் போன்றவற்றையும் இரும்பாலான அரம், பாக்குவெட்டி, சத்தகம், கொக்கச்சத்தகம், அரிவாள், அரிவாமனை, குத்தூசி, தராசு , தையல் மெசின் இறங்குப் பெட்டி போன்றவற்றையும் மண்ணாலான ஓடுகள், பெரிய பானைகள், கூசா போன்றவற்றையும் கண்ணாடியாலான பழைய மண்ணெண்ணெய்க் குக்கர், மேசை விளக்கு போன்றவற்றையும் கல்லாலான தொட்டி, காவார்க்கல்லு, வட்டக்கல்லு, வாய்க்காற் கல்லு, தோய்க்கிற கல்லு என்பவற்றையும், மேசைமணிக்கூடு, பெண்டியூலம் மணிக்கூடு, கிரமபோன், பல வகை ரேடியோக்கள், சிலேற்று, கொட்டப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org













பெட்டி போன்றவற்றையும் பழைய நாணயங்களையும் சேகரித்தேன். என்னுடைய நண்பர்களும் உறவினர்களும் சிலவற்றைப் பரிசளித்தனர். ஏட்டுச் சுவடிகளும் ஓலையில் எழுதிய சாதகங்களும் எனக்குக் கிடைத்தன. ஆனாலும் எழுத்தாணிகள் கிடைக்கவில்லை.

பனையோலையாலான பல பொருட்கள் கிடைத்தபோதும் பனம் ஈர்க்காற் செய்த, தோட்டக்காரர் அணியும் தலைப்பட்டை எனக்குக் கிடைக்கவே இல்லை. அவற்றைச் செய்தவர்களும் இறந்து போனார்கள். ஆட்டுக்கல், அம்மி, திரிகை, உரல், உலக்கைகளும் என்னிடம் உண்டு. எத்தனையோ பொருட்கள் என்னிடம் இல்லை.

எமது பழைய இசைக்கருவியான பறை,அதை செத்த வீட்டிலும் /இழவு வீட்டிலும் , காவற்தெய்வம் கோவில்களிலும், காவடி, கரகாட்டத்தின் போதும், ஊரூராகச் செய்தி சொல்வதற்கும் எமது ஊரிற் பயன்படுத்தினர். பெரிய பறை மேளத்தை வாங்கி வீட்டுக்குக் கொண்டு செல்வதில் பல இடைஞ்சல்கள் இருந்ததால் சிறிய அளவில் செய்வித்து வைத்துள்ளேன். நல்ல சத்தம் வரும். அதைவிட உடுக்கு அதற்குரிய அளவு பிரமாணத்திற் செய்து வைத்துள்ளேன். வழமையாக உடுக்கில் உடும்புத் தோல் பாவிப்பார்கள். என்னுடையதில் மாட்டுத் தோல் பாவித்ததாக்க் கூறினார். இன்னும் ஆர்மோனியம், யாழ் போன்ற இசைக்கருவிகள் உண்டு. நான் வாங்கவில்லை

இது ஒரு வருங்கால சமுதாயத்தவர்க்கான சேகரிப்பு என்றும் சொல்லலாம். ஆர்வமுள்ளவர்கள் பார்த்துச் செல்லலாம்.

ஆறு திருமுருகன் சேர்த்து வைத்திருக்கிறார் பேந்தென்ன கவலை என்று பலர் பல தடவை கேட்ட போது, நான் யாழ் நூலகத்தை நினைத்துக் கொள்வேன்.

நான் ஒரு வீடுகட்டி அதன் மாடியில் ஒரு அறையை நூலகத்திற்கு ஒதுக்கியது போற் பழைய பொருட்களிற்கும் ஒதுக்கினேன். உலோகங்கள் polish பண்ணினாலும் மங்கிச் செல்கின்றன. பழைய பெண் எழுத்தாளர் குந்தவையின் தந்தையார் கப்பல் வைத்திருந்தார். அந்தக் கப்பலின் நங்கூரம் அவர் தந்தையார் தொண்டமனாற்றிற் கட்டிய வீரகத்திப்பிள்ளை மகா வித்தியாலயத்திற் தற்போது காட்சிப் படுத்தப்பட்டுள்ளது, அந்தக் கப்பலின் கப்பியைக் குந்தவையிடம் கேட்டுப் பெற்றுக் கொண்டேன். அது துருப்பிடிப்பதாற் கறுப்புப் paint அடித்துள்ளேன். மற்றும் படி இப்பொருட்களைப் பாதுகாக்கும் அறிவு பெரிதாக எனக்கு இல்லை.

பழைய பொருட்கள் கலை நயம் மிக்கவை, ஓரங்கள், விளிம்புகள் அழுத்தம் திருத்தமாக இருக்கும். இதில் சிறு கால்களுடன் காணப்படும் சின்னஞ்சிறிய செம்புகள் என் மனதிற்குப் பிடித்தமான பொருட்களாகும். என்றாலும் வெற்றிலை சப்புவதற்காய்ப் பயன்படுத்தப்பட்ட வெற்றிலைப் பெட்டி, வெற்றிலைத் தட்டு, பாக்குவெட்டி, பல வகையான பாக்குரல்கள், சுண்ணாம்புச் சிமிழ், வெற்றிலைத் துப்பலைத் துப்பப் பணிக்கம் என்பவற்றைக் கண்டு ஆச்சரியப்பட்டேன்.

எமது மக்களிற்கு நான் சொல்வது பழைய சாமான்களை அறாவிலைக்கு விற்காமற் சேகரித்து வையுங்கள். அவை எமது பண்பாட்டைப்பேசும்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aayanaham.org



இரக்கமுள்ள நெஞ்சில் அன்பு பிறக்கும்,
நாணமுள்ள நெஞ்சில் அறம் பிறக்கும்
- கன்பூசியஸ்

- சிறுகதை -

# அளவுக்கு மீறிப் பீறும் அறம்

- கோகிலா மகேந்திரன்

**ப**தினாறு வகைப் பிரிப்பில் இது மிக மிக அரிதான ஆளுமை வகைதான்! மனிதர்களில் ஒன்று முதல் மூன்று வீதமானோர் மட்டுமே இப்படி இருப்பார்களாம். இருக்கிறார் இவர்!

பல வருடங்களாகத் தொடர்ந்து படுக்கையில்தான் இருக்கிறார். எழுந்து நடமாடுவதற்குத் தேவையான ஒத்துழைப்பு உடல் அங்கங்களில் இருந்து கிடைக்கவில்லையா? அல்லது அங்கங்கள் எல்லாவற்றையும் கட்டுப்படுத்தும் மூளையில் இருந்து பொருத்தமான கட்டளைகள் அவற்றுக்கு வழங்கப்படவில்லையா? ஞாபகமும், அறிகையும், காரணம் காணும் திறனும், சந்தேகங்களைத் தீர்க்கும் வலிமையும் இந்தத் தொண்ணூறு வயதிலும் மிகச் சிறப்பாக இருக்கிறதே!

காலையில் சில நிமிடங்கள் தேவார திருவாசகங்கள் ஓதுகிறார். மனைவி அல்லது மாணவர் ஒருவர் கூடச் சேர்ந்து பாடுகிறார்கள். சொற்பிழை இம்மியளவும் இன்றிப் பண் தவறாது ஓதப்படும் தனது பாடல்களைப் பலரும் கேட்கவேண்டும் என்ற ஆழ்மன விருப்பமோ என்னவோ, தான் பாடும்போது யன்னல்கள் தாமாகத் திறந்து கொள்கின்றன என்றும், பலர் வந்து யன்னல்களில் நின்று பாடல்களைக் கேட்கிறார்கள் என்றும் அந்தத் தரிசனம் தன்னை மகிழ்விக்கிறது என்றும் சொல்கிறார். முதல் நாள் பாடல் கேட்ட அடியார்களைவிட , அடுத்தநாள் கேட்க வருவோர் தொகை மெல்லமெல்ல அதிகரித்துச் செல்கிறது என்கிறார். முதுமை காரணமான இயல்பான "இல்பொருள்காட்சி"என்று மருத்துவர்கள் குறிப்பெழுதக்கூடும்.

'ஐபாட்"வைத்துத் தன் மனதில் வரும் விடயங்களை "ரைப் "செய்கிறார். நிமிர்ந்து படுத்திருக்கும் உடல் நிலையில் இருந்து கைகளால் தூக்கித்தான் அதைச் செய்கிறார். அவ்வாறு கடிதங்கள் எழுதி அனுப்புகிறார். நூல்களுக்கு "அணிந்துரை "எழுதிக்கொடுக்கிறார். புத்திசாலிகள் இவரது அணிந்துரையின் பெறுமதி அறிந்து கால தாமதத்தைப் பொருட்படுத்தாமல், பொறுமையுடன் காத்திருந்து பெற்றுச் செல்கிறார்கள். எழுதி முடித்தவற்றை, முடித்து அனுப்பியவற்றை, முடித்துக் கொடுத்தவற்றை இன்னும் இன்னும் செம்மைப் படுத்திக் கொண்டிருக்கிறார்.

இவை ஒன்றும் செய்யாமல், மனம் ஓய்வாக இருக்கும் நேரங்களில், பல வருடங்களுக்கு முந்திய சம்பவங்கள் எண்ணச் சுழலாய் மனதுள் திரள்கின்றன. மனப்பாலில் உருண்டு மேலே வரும் வெண்ணெய்க் கட்டிகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒன்றை மூளையின் முன்னுதல் சோணைக்கு அனுப்புகிறது மனம். அந்தச் சம்பவத்தில் தனது எண்ணங்களை,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணர்வுகளை, செயல் ஒழுங்குகளைத் தான் படித்துத் தெளிந்த அறநூல்களில் கூறப்பட்ட விழுமியக் கருத்துக்களோடு மிக நுணுக்கமாய் ஒப்பிட்டுச் செப்பம் பார்க்கிறது.

மிகச் சிறு வயதிலிருந்தே உடம்பு நலுங்காமல், எப்போதும், எந்நேரமும் நூல்களோடு உறவாடிய இவர் ஒரு "பேர்பெக்க்ஷனிஸ்ட் ". எதிலும் குற்றமற்ற தன்மை, எங்கும் பூரணத்துவம், எதை எடுத்தாலும் நேர்மையும் மேன்மையும், எப்போதும் உயர்ச்சி தேடுகிற பாங்கு சாதாரணமாக மற்ற மனிதர்களின் நினைவுத் திரையில் மிக மிக அற்பப் புள்ளியாகத் தேய்ந்து போகும் சம்பவங்கள், இவரது உள்ளம் தெளிவாய்க் கோத்து அடுக்கி வைத்திருக்கும் சுய சரிதை ஞாபகக் கோப்புகளில் இருந்து மெல்ல எழுகின்றன. எண்ணமே சுமைகளாய், இதயமே பாரமாய்...

குழந்தை பரமேஸ்வரனுக்கு அப்போது ஐந்து வயது. அயல்வீட்டுப் பாலகன் மட்டுமல்ல ,நெருங்கிய உறவினரின் அழகிய பிள்ளை. பெற்றோருக்கு அவன் ஒரே ஆண்மகவு என்பதால் செல்லப்பிள்ளை. அவனது தோல் நிறம் காரணமாக உறவினர்கள் அவனை அன்புடன் "வெள்ளையன்" என அழைப்பதுண்டு. அயற்பாடசாலையில் முதலாம் வகுப்புக்குப் போகிறான். வளர்ந்து வரும் உலகத்திற்கே வலது கையாய் வரப்போகிறவன் என்பதற்கான அறிகுறி-களைப் பாடசாலையில் காட்டத் தொடங்கிவிட்ட சிறுவன். இரண்டு வீட்டுக்கும் இடையே இருந்த எல்லை வேலியின் பொட்டுப்படலையூடு அவன் ஒரு நாளுக்குப் பலமுறை இவர்கள் வீட்டுக்கு ஓடி வந்துவிடுவான். இங்கே அவனோடு விளையாடும் சின்னப்பிள்ளைகள் யாருமில்லை. விளையாடினால் நான்கு வயது மூத்த சின்ன மாமாவுடன்தான் விளையாடவேண்டும். இன்று அவனுக்கு உடல் அலுப்பாகவும் இருக்கிறது. "எல்லாம் இன்பமயம் " என்ற அந்தச் சிம்மேந்திர மத்திம ராகப் பாடல் மீது அவனுக்கு அசாத்தியப்பிரேமை. அவனுக்கு ஒருவயதாகும்போது வெளிவந்த "மணமகள்" சினிமாப்பாடல் அது! எம்.எல்.வசந்தகுமாரியும், பி.லீலாவும் இணையும் அந்த விறுவிறுப்பான குரல்வளமும், மோகனம், தர்பார், ஹிந்தோளம் இணைந்த கற்பனா சுரவரிசைச் சிறப்பும் அவனைக் கொள்ளை கொண்ட விடயங்களாக இருக்கலாம். அந்தச் சிறிய ஊரில் இவர்கள் வீட்டில் மட்டும்தான் "கிராமபோன்" இருக்கிறது. இன்று மதியம் முதல் அவன் அந்தத் திண்ணையில் உட்கார்ந்திருக்கிறான். "அந்தப் பாட்டுப் போடுங்கோ மாமா " பல முறை வந்த கோரிக்கை அவனுடையது. "இயற்கையினாலே இயங்கும் எழில்வளம் எல்லாம்" இன்பமானவை என்ற செய்தி அவனுக்குள் பூரிப்பைத் தருவது. எத்தனை முறை கேட்டாலும் சலிக்காதது. அதற்காக "அல்லாதனவும் ஆவனவும் தெரிந்த நல்லோர்" முன் வந்து குந்தியிருக்கிறான். அவன் அமர்ந்திருக்கும் தோற்றத்தில் உள்ளார்ந்த ஆசையும், எதிர்பார்ப்பும் , பாடலைக் கேட்கப் போகிறோம் என்ற முன்கூட்டி வரும் மகிழ்வும் ஒன்றாகப் பிணைந்திருக்கின்றன. ஒரு கையில் பனங்கிழங்குத் துவையல் வைத்திருக்கிறான். இன்னும் சாப்பிடத் தொடங்கவில்லை. அவித்த பனங்கிழங்குடன் வெங்காயம், பச்சைமிளகாய், தேங்காய்ப்பூ, உப்பு, மிளகுதூள், எல்லாம் போட்டு மர உரலில் இடித்த கொஞ்சம் காரமான துவையல். அவனுக்குப் பிடிக்கும் என்று அவனது அத்தை இடித்துக் கொடுத்தது. இனி, இனிப்பான பாடலைக் கேட்டபடியே உண்ண எண்ணுகிறான் போலும்.

கிழித்த பனங் கிழங்குகள் இந்த வீட்டு முற்றத்தில் பனையோலைப் பாயில் பரப்பிக் காய விடப்பட்டிருக்கின்றன.

அடுத்து நடக்கப் போகும் காட்சிகள் அவன் மனதில் அகக் காட்சிகளாக விரிகின்றன. பெரிய மாமா வந்து, மூடியில் ஒரு நாய் ஒலிபெருக்கி முன் குந்திக்கொண்டிருக்கும் அந்தக் "கிராமபோன்" பெட்டியைத் திறப்பார். குறித்த கறுப்பு நிற "ரெக்கோட்டை"த் தேடி எடுத்துப் பெட்டியில் வைத்துச் சுழற்ற முதல், கொஞ்சம் "கிரீஸ்" போடுவார். அந்த "ஓடியன் "(HMV ?) கிராமபோன் உராய்வின்றிச் சுற்ற அது உதவும்.

ஏ. கே. முகமட் கடையில் வாங்கி வைத்திருக்கும் ஊசிப் பெட்டியில் இருந்து புதிய ஊசி ஒன்றை எடுத்து, ஊசி தாங்கியில் சுரையைக் கழற்றி வைத்துப் பூட்டுவார். புரி தேயாமல் இருப்பதால் ஊசி இறுக்கமாக நிற்கும். ஊசி, சுற்றும் தட்டின் விளிம்பில் தொடுமாறு விடப்படும்போது அந்த அருமையான பாடல் ஒலிக்கத் தொடங்கும். மலரின் மணம்தனில், வயலின் பயிர்தனில், நிலவின் ஒளிதனில், குழலின் இசைதனில், (கீரிமலையின்) நீலக் கடல் வீசும் அலைதனில் வரும் இன்பம் வளர் மழலை மொழி உடைய பரமேஸ்வரனுக்குத் தெரியும்தான். மலையின் அருவிதான் இன்னும் நேரில் காணாதது . ஆனாலும் இந்தப் பாட்டின் இசை எத்தனை முறை கேட்டாலும் மனதை அப்படியே வருடி எடுத்துவிடுகிறதே! அப்பு இந்தப் பாடலை வீட்டிலே முணுமுணுக்கிறார். அக்காமாரும் சின்ன மாமாவும் சில வரிகள் பாடுகிறார்கள். இவனும் பாடிப்பார்க்கிறான். அந்த "மபதனிபா பா " அதற்கு மேல் வருகுதில்லை. இன்று கேட்ட பிறகு இன்னும் கொஞ்சம் நன்றாகப் பாடலாம். முழுவதும் பாடமாக்கினால் மச்சாள் வீட்டுக்கு விளையாடப் போகும்போது ஊஞ்சல் ஆடி ஆடி இந்தப் பாட் டையும் பாடலாம்.

பெரியமாமா தான் படித்துக்கொண்டிருந்த நூலை மூடிவிட்டு எழும்புகிறார் .
"ஆ ... வரப்போறார் ..."இவன் நினைத்துக் கொள்கிறான்.
அது ஒரு ஞாயிற்றுக்கிழமை. இவர் இனித்தான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாப்பிட்டு, உடைமாற்றி, ஊரிலிருந்து தெல்லிப்பழைச் சந்திக்கு அருகிருக்கும் புகையிரத நிலையத்திற்கு நடந்துசென்று, புகையிரதம் ஏறிப் பரமேஸ்வராக் கல்லூரியின் விடுதிக்குப் போய்ச் சேரவேண்டும்.

இவர் உடல் கழுவி ஆயத்தமாகும் நோக்கில் கிணற்றடிப் பக்கம் திரும்புவதைப் பார்த்த பப்பா "பெரிய மாமாவின் தந்தையார், பண்டிதர், ஊரிலும் அயலூர்களிலும் படித்தவர் அனைவரினதும் ஆசிரியர் "அவன் ஆசைப்படுறான். ஓருக்காப் போட்டிட்டுப் போவன்" என்கிறார். உயர் குருதி அமுக்கம் உடலைப் பாதித்திருக்கும் நிலையில் அவர் சாய்மனைக் கதிரையில் படுத்திருந்து "பெரியபுராணச் செய்யுள்களைப்" பார்த்துக்கொண்டிருக்கிறார். இவரது மனம் கணக்குப் பண்ணுகிறது. உடல் கழுவிச், சாப்பிட்டு, உடைமாற்றிப் புறப்படக் குறைந்தது அரைமணி நேரம் தேவை. வீட்டிலிருந்து ஸ்டேசனுக்கு நடக்கக் குறைந்தது நாற்பது நிமிடமாகும்.

''வேணுமெண்டா நீங்கள் போடுங்கோ. எனக்கு நேரம் போட்டுது" என்று கூறியபடி இவர் தன் வேலைகளில் மூழ்கிப் போகிறார். இந்த உரையாடல் நடைபெறுவதற்கிடையில் ''பாட்டு வரப்போகுது ''என்ற புளுகத்தில் காலையில் முழுகிய ஈரத்தலையுடன் வெயிலில் இன்னொருமுறை வீட்டுக்கு ஓடிய பரமேஸ்வரன் தேன் பலாச்சுளைகளில் இரண்டைத் தூக்கிக்கொண்டு மீண்டும் ஓடிவந்து அதேதிண்ணையில் அமர்ந்து கொள்கிறான் .

"பெரியமாமாவைக் காணேல்லையே!"
இன்னும் சற்றுநேரம் காத்திருக்கிறான். இவர் உடை மாற்றிப் பையையும் தூக்கிக்கொண்டு வெளியே வருகிறார் . அவனுக்குப் புரிந்துவிட்டது.

"பெரிய மாமா பள்ளிக்குடம் போப்போறார் "
அவனுக்குத் தலை இடிப்பது போலவும் இருக்கிறது. உடம்பு எரிவதுபோல் ஒரு உணர்வு! வேகமாய் எறிந்த கண்ணாடிக்குவளைபோல் அவன் மனமும் நொருங்கிவிட கையில் இருந்த பலாப்பழச் சுளை-களைப் பலாமரத்தில் இருந்து கத்திக்கொண்டிருந்த அண்டங் காகத்திற்கு எறிந்துவிட்டுக் கலங்கிய கண்களுடன் படலையினுள் புகுந்து வீட்டிற்கு ஓடிவிட்டான்.

வீட்டிலிருந்து தெல்லிப்பழைக்கு நடக்கும் நேரத்தில் இவர் மனதில் குற்ற உணர்வு சிறிதாய்க் கொம்பு நீட்டுகிறது.
பாடசாலை வேலைகள் பற்றிய சிந்தனை, கடைசியாய்ப் படித்து மூடிய திருக்குறளில்,
"நன்று ஆற்றல் உள்ளும் தவறுண்டு அவரவர்
பண்பு அறிந்து ஆற்றாக்கடை "
என்ற பா பற்றிய சிந்தனை, புகையிரதப் பயண நண்பர்கள் பற்றிய சிந்தனை, அவர்களில் சிலர் சொல்வதுபோல் ஒவ்வொருநாளும் போய்வரலாமா என்ற சிந்தனை, அந்தச் சிந்தனை, இந்தச் சிந்தனை என்று எண்ணங்கள் குறுக்கறுத்தோட,
"பரவாயில்லை. அடுத்த வெள்ளி இரவு அல்லது சனி காலமை அவனைக் கூப்பிட்டு அவனுக்கு விருப்பமான பாட்டெல்லாம் போட்டுக் காட்டுவம். சிரிப்பான்." என்ற நினைவு அமைதிப்பக்கம் உணர்வைத் திருப்ப, ''கூ ...கூ....சக்குப் புக்கு ...சக்குப் புக்குக்... க்கூ ..."ட்ரெயின் வரும் ஒலி அவரது காதை அடைக்கிறது.

கொக்குவிலில் இறங்கித் திருநெல்வேலிக்கு நடக்கும் போதும், பரமேஸ்வரன் ஓரிருமுறை மனவானில் எட்டிப்பார்க்கும் தேய் நிலவாய்த் தோன்றிப்பின் மேகக் கூட்டத்தில் ஒழிந்தான்.

ஞாயிறு இரவு நல்ல நித்திரையுடன் ஓடிவிட்டது. திங்கள் பகலும் இரவும் கொஞ்சம் மெதுவாய் நகர்வதான உணர்வு. செவ்வாய் இருபத்துநாலு மணிநேரம்! ...ஒரு நாளில் இத்தனை மணி நேரம் எதற்காக? புதன்கிழமை! ஆயிரத்து நானூற்று நாற்பது நிமிடங்கள் ...போய் முடிய வேண்டுமே! பரமேஸ்வரா வளாகத்தின் புல்லுகளுக்கிடையில் இந்த நத்தை ஏன் இவ்வளவு மெதுவாக ஊருகிறது?

"நத்தை! நீ கொஞ்சம் கெதியாப் போவன். முயலை முந்தாட்டிப் பறவாயில்லை. உன்னைப் பாக்கவே எரிச்சலாக் கிடக்கு ...சீ !"
அடுத்தநாள் விடியாமல் விட்டிருக்கலாம். சூரியனைத் தன் இஷ்டப்படி ஆட்டிப்படைத்த பாரதக் கண்ணன் எங்கே தொலைந்தான்?

காலைப் புகையிரதம் மூலம் ஒவ்வொருநாளும் கல்லூரிக்கு வந்துபோகும் மயிலிட்டி நண்பர் ஒருவர் அந்தச் சேதியைக் காவி வந்தார். இல்லை. இல்லை. விழிசிட்டியில் அடித்த பேய்க்காற்றுடன் தெல்லிப்பழைச் சந்திக்கு வந்த செய்தி, கசப்பான மணத்துடன் ரயில் புகையில் கலந்து பரமேஸ்வரா விடுதியை அடைந்தது.
''பரமேஸ்வரனுக்குத் திடீரெண்டு காய்ச்சல் கடுமைப் படுத்தி, மூளாய் ஆஸ்பத்திரியிலை விட்டிருக்காம்''
அந்தக்காலத்தில் அண்மையில் இருக்கும் வைத்தியர்கள் முயற்சி செய்து முடியாமல் கைவிரிக்கும் போதுதான் மூளாய்க்குப் போவது என்பது எல்லாரும் அறிந்த ரகசியம்.

அந்தச் செய்தி காதில் இருந்து மூளைக்கலங்களை அடைந்து, அது என்ன செய்தி என்று புரிந்த முறை ஒரு காட்டுத் தீப்பரவல் போல் தோன்றியது இவருக்கு! அவர் மிக வேகமாய்ப் புறப்பட்டு, அதிபரிடம் அனுமதிபெற்றோ, பெறாமலோ, ...ஒன்றும் புரியாமல் "பெட்டித் தொடர்களை இழக்கத் துணிந்ததுன் நெஞ்சம்"என்றொரு கவிஞனால் பாடப்பட்ட புகையி ரதம் ஏறினார்.

அவனுக்கு என்ன நடந்தது என்று வைத்தியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜக்கோவைத்தான் கேட்கவேண்டும். அன்றைய நிலையில் அந்தக் கிராமத்தில் அது என்ன காய்ச்சல் என்று அறியும் புரிதல் இருக்கவில்லை.
வீட்டை அண்மிக்க முதலே இவருக்குப் புரிந்துவிட்டது. மனிதர்களின் உடல் மொழிகள் நன்றாக இல்லை.
"பரமேஸ்வரன், பரமேஸ்வரன் காலடிக்குத்தான் போய்விட்டான் போல...". இதை அறியவா இவர் பரமேஸ்வராவில் இருந்து ஓடோடி வந்தார்?
"சொர்க்கத்திலே எல்லாம் இன்பமயம்தான்" என்று நினைத்துவிட்டானா? கயிலை மலையின் அருவி யிலே இன்பம் எப்படி இருக்கும் என்று பார்க்க நினைத்தானோ?

"சாவித்திரி! நீ எங்கேயம்மா போனாய்! யமனைப் பிடித்து நிறுத்தவில்லையா?சாவித்திரி ..."
"ஒய்...என்ன ...வழக்கமாய் இஞ்சேரும் ...எண்டு கூப்பிறனீங்கள். இண்டைக்கு சாவித்திரி எண்டு ... "
இது இவரின் மனைவியின் குரல்! கட்டிலுக்குப் பக்கத்தில் தனது "வாக்கரின்" உதவியுடன் மெல்ல நகர்ந்து வந்து நிற்கிறார்.
"நான் உம்மைக் கூப்பிடேல்லை"
மிக மிக அரிதாய்ப் பட்டிமண்டப மேடைகளில் தோன்றிய இந்த அறிஞர் இப்போதெல்லாம் அடிக்கடி தனக்குள்ளே பட்டிமண்டபங்கள் நடத்திக்கொள்கிறார்.

"நான் வாழ்ந்த வாழ்வின் அர்த்தமென்ன?"
"அர்த்தமே இல்லைப்போல... "
"குற்ற உணர்வு என்னை இவ்வளவு பாதிப்பது நியாயமா?"
"நியாயம்தான். நீ செய்தது பிழைதானே!"
"என்மறைவோடு தானும் இக்குறை தீருமா?"
"தீராது"
"அவன் கேட்டது ஒன்றும் உணவு, நீர் போன்ற அடிப்படைத்தேவையல்ல... உடனே செய்ய வேண்டும் என்பதற்கு! அடுத்தவாரம் செய்யலாம் என்று நினைத்தது தவறில்லை ..."
"தவறுதான் ..."
"இது அறியாமல் செய்தது. அவனவன் ஆயிரம் கொலைகள் அறிந்து செய்துவிட்டு வன் புணர்வுகளைச் செய்துவிட்டு, உயிர்களைச் சித்திரவதைப் படுத்திவிட்டு அமைதியாக இருக்கிறான் ..."
"உலகம் ஆயிரம் சொல்லட்டுமே! உனக்கு நீதான் நீதிபதி --"
இவர் தூங்கப் போகிறார்.
மனப்பால் கடையும் மத்தில் அடுத்த சம்பவம் திரளத் தொடங்குகிறது!

(யாவும் கற்பனையல்ல)

# சரணம் அடைவாய்

சுழலும் பூமி சுயநல மனிதம்
உழலும் வாழ்வில் ஒழியும் நேசம்
தழலின் கொடிய தணியா வஞ்சகம்
நிழலாம் கருணை நலியும் கொடூரம்

மனிதம் மறந்து மாக்களாய் அலைந்து
புனிதம் துறந்து பேதமை வளர்த்து
கனிவை இழந்து கூண்டில் அடைவது
இனியும் வேண்டாமே இகத்தில் எமக்கு

மதங்களின் பிரிவினை மாநில வேற்றுமை
வேதங்களின் போதனை வாழ்தலில் தோற்றதே
காதலின்றிக் கொப்பளிக்கும் காழ்ப்புணர்ச்சியின்
வெப்பம்
வாதமாய்ப் புரையோடுதலை வெறுத்தே
ஒதுக்குவோம்

அறத்தைப் படித்து அன்பைத் தொடுத்து
திறனாம் சகிப்பை தீர்க்கமாய் அணுகி
இறப்பு வரைக்கும் இன்முகம் காட்டி
பிறப்புகள் கூடிவாழப் பெருகுமே பொதுநலம்

கரணம் அடித்துக் கயமை காட்டி
காரணமின்றி உறவுகளைக் களைகிறாய் வலிந்து
மரணம் எனும் முடிவு வருகையில்
சரணம் அடைவாய் சகதி வாழ்விலே

அலட்சியம் கழித்து அன்பை வளர்த்து
இலட்சியம் பேணும் ஆன்மாக்கள் சேர்ந்து
மலர்ச்சி மனங்களில் மகிழ்வுடன் பொலிய
தளர்ச்சியிலாக் கூட்டுறவைத் தேர்ந்து வாழ்வோம்.

Dr ஜலீலா முஸம்மில்
ஏறாவூர், இலங்கை

எழுத்தாளர்
**வண்ணதாசனின்**
கவிதை வரிகள்



தானாய் முளைத்த
விதை என்கிறார்கள்...
யாரோ வீசிய
விதையிலிருந்துதானே!

நன்றி 'தடம்'


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரான்ஸில் பழையமாணவர் சங்கங்கள் இனி என்னவாகும்?

பிரான்ஸில் இலங்கைத் தமிழ் பழையமாணவர் சங்கங்கள் தோற்றம் பெற்று முப்பது ஆண்டுகளைக் கடந்து நிற்கின்றன. முதன் முதலாகத் தோற்றம் பெற்ற புனித பத்திரிசியர் கல்லூரி தனது முப்பத்தைந்தாவது ஆண்டைப் பூர்த்தி செய்து நிற்கின்றது. ஆங்காங்கே இன்னும் சில சங்கங்கள் தோற்றம் பெற்றுக்கொண்டிருப்பதும் கவனிக்கத்தக்க ஒன்று.

பிரான்சில் பழையமாணவர் சங்கங்கள் தோற்றம்பெற கீழ்வரும் காரணிகள் அமைந்தன.

1. பாடசாலை அதிபரின் அல்லது நிர்வாகத்தின் வேண்டுகோளுக்கிணங்கத் தோற்றம் பெற்றவை.
2. ஏனைய நாடுகளிலுள்ள சங்கங்களின் ஆலோசனை அல்லது தூண்டுதலின் பெயரில் தோற்றம் பெற்றவை.
3. ஒருசில ஆர்வமுள்ள தன் முனைப்பாளர்களின் முயற்சியால் பழையமாணவர்களின் ஆதரவோடு தோற்றம் பெற்றவை.
4. ஏனைய சங்கங்களின் செயற்பாட்டால் கவரப்பட்டுத் தாமும் ஒரு சங்கத்தை உருவாக்கவேண்டும் என்ற விருப்பில் தோற்றம் பெற்றவை.

தோற்றம் பெற்ற எல்லாச் சங்கங்களுமே தாம் கற்ற பாடசாலைக்கு உதவுதல் என்ற பொதுநோக்கை முன்னிலைப்படுத்தியிருந்த போதும், இனிமையான பாடசாலை நாட்களை இரைமீட்டிப்பார்த்து இன்புறுதல் என்னும் பெருவிருப்பு அவர்களின் மன ஆழத்தின் இயங்குவிசையாகச் செயற்பட்டது.

பாடசாலைக்குக் கணிசமான நிதியை இச்சங்கங்கள் வாரி வழங்கியதோடு, சில பல பொதுச் செயற்பாட்டிலும் அவை தம்மை ஈடுபடுத்தின. கலை விழாக்களை நடாத்துதல், உதைபந்தாட்டப்போட்டிகளை நடாத்துதல், கவிதை, சிறுகதை, கட்டுரைப் போட்டிகளென இலக்கியப் போட்டிகளை நடாத்துதல், நாடகம் இன்ன பிற கலை வெளிப்பாட்டினை புலம் பெயர் தேசத்திலும் ஊக்குவித்தல், அதற்குக் களம் அமைத்துக் கொடுத்தல், மலர்வெளியீடுகள், அடுத்த தலைமுறையினரை தமிழ்க் கலாசாரத்தின் பால் ஈடுபட வைத்தல் என அவர்களின் செயற்பாடுகள் தொடர்ந்தன. இதற்காக ஒரு தொகுதியினர் குறிப்பிடத்தக்க தங்கள் பெறுமதி மிக்க நேரங்களையும், பொருட்களையும் செலவு செய்தனர்.

ஏறத்தாழ முப்பது ஆண்டுகாலச் செயற்பாட்டில், இச்சங்கங்களும் தாம்சார்ந்த சமூகத்திற்கு தம்மாலான பங்கினை ஆற்றியிருக்கின்றன என்பது மறுப்பதற்கில்லை. ஆனாலும், காலம் செல்லச்செல்ல ஆரம்பத்திலிருந்த உற்சாகம் குன்றி ஒரு வித சலிப்பும் சோர்வும், தீவிரமாக இயங்கிய பெரும்பாலானோரிடம் எஞ்சி நிற்பதை அவதானிக்க முடிகிறது.

**ஏன் இந்த நிலை?**

சமூகம் ஏதோ ஒரு புள்ளியில் ஒன்றிணைவதும், கூட்டாக இயங்குவதும் ஆரோக்கியமான விடயமே! தேவையானதும் கூட. ஆனாலும், புலம் பெயர்ந்த நாட்டின் சூழலோடும், வாழ்க்கை நெருக்கடியோடும் பொதுச் செயற்பாடுகள் நெருக்கடிகளைச் சந்தித்து வருவதும் தவிர்க்கமுடியாத இயங்கியல். ஆரம்பத்தில் இளைஞர்களாக, உடல் உள ஆரோக்கியம் மிக்கவர்களாக, சக்தி மிக்கவர்களாகச் செயற்பட்ட பலர் தொடர்ந்து செயற்படமுடியாது போவதும் இயல்பான ஒன்றே. மேலும், செயற்பாடுகளின்போது தோன்றும் சிறிய சிறிய முரண்பாடுகளையும் தீர்க்கமுடியாது அவற்றைத் தனிநபர் பகை முரண்பாடுகளாக்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நண்பர்கள் ஜென்ம விரோதிகளாகிப்போவதும் கவலைதரும் கண்கூடு.
ஆளுமைமிக்கவர்களும் 'சோலி வேண்டாம் ஆளைவிடு' என ஒதுங்கிப்போவதும் சமூகஇயக்க பின்னடைவிற்கான காரணி.

பொதுச் செயற்பாட்டில் ஈடுபடுவோரை பின்வருமாறும் வகைப்படுத்தலாம்.
1. கடமை உணர்வோடு செயற்படுபவர்கள்.
2. தம்மை முன்னிலைப்படுத்தி விளம்பர நோக்கிற்காகச் செயற்படுபவர்கள்.
3. ஏதாவது சுய இலாபம் கருதிச் செயற்படுபவர்கள்
4. பொழுதுபோக்கிற்காகச் செயற்படுபவர்கள்.
5. நண்பர்களின் வற்புறுத்தல்களுக்காகச்செயற்படுபவர்கள்
6. குற்ற உணர்வில் தாமும் ஏதாவது சமூகத்திற்குப் பங்காற்றவேண்டும் என்ற நோக்கில் செயற்படுபவர்கள்.

இவர்கள் எல்லோரும் இணைவதும், இவர்களை ஒரு புள்ளியில் இணைப்பதும்தான் பொது அமைப்பு. இது அவ்வளவு சாதாரண விடயம் அல்ல. இந்தப் புரிதல் குறைபாட்டினால், நிர்வாக ரீதியில் பொது அமைப்பு சீராக இயங்கமுடியாது சலிப்பையும், சோர்வையும் பரிசாகப் பெறுகின்றன.

மனம்முதிரா மனிதர்களைப் புரிந்துகொள்வதுதான் முதிர்ச்சியின் அடையாளம். முதிர்ந்த மனிதர்களின் போதாக்குறையும் பொது அமைப்புகளின் சிக்கல்களுக்கு முக்கிய காரணம். இன்னும் பொது அமைப்பினுள் சிக்கல்கள் தோன்றும்போது கூட்டாக இணைந்து தீர்வுகாணாது, சிக்கல்களை அப்படியே விட்டுவிட்டுப் பலர் ஒதுங்கியும் போய் விடுகின்றனர்.

பொது அமைப்புச் சீராக இயங்குவதற்கு நிர்வாகத்தில் முக்கிய பொறுப்பிலுள்ளோர் பாரிய பொறுப்புகளை ஏற்கவேண்டியவர்களாக இருக்கின்றனர்.
ஆளுமைத்திறன், திட்டமிடல், எல்லோரையும் அனுசரித்துப்போதல், அர்ப்பணிப்பான உழைப்பு, காய்தல் உவத்தல் இன்றித் திறமைகளை அங்கீகரிக்கும் பண்பு, சிந்திக்கும் ஆற்றல், புதிய சிந்தனைகளை உள்வாங்கும் திறன் எனப் பல்வேறு சிறப்புகளை நிர்வாகம் தன்னகத்தே கொண்டிருத்தல் அவசியம்.

ஒரு சங்கம், எப்போதும் இயங்குநிலையில் இருத்தல் அல்லது வைத்திருத்தல் அவசியமானது. சங்கமானது நல்லவர் கூடாதவர் என்றல்ல, எல்லோருக்குமானது என்ற புரிதல் அவசியம். சங்கங்களில், எதிலுமே திருப்திப்படாத மனநிலையோடு எல்லாவற்றையும் குறை கூறிக்கொண்டும் சிலர் இருக்கத்தான் செய்வர். சிலர் தாம் முக்கிய பொறுப்புகளில் இருந்தால் மட்டுமே செயற்படுவர். இவர்களும் சங்கத்தின் உறுப்பினர்களே என்பதை நிர்வாகம் கவனம் கொள்ளத் தவறக்கூடாது. அவர்களிலும் ஆற்றல்மிக்கோர் இருப்பர். அவர்களை இயக்கமுடியாது போனாலும்கூட பரவாயில்லை. அவர்களை எதிர் நிலைக்குத் தள்ளாது பார்த்துக்கொள்ளுதல் அவசியம். அவர்களையும் இயக்குவதில்தான் சங்கங்களின் வெற்றி தங்கிநிற்கிறது.

புலம்பெயர் தேசங்களில் பொது அமைப்புகள் எதிர்நோக்கும் முக்கிய இடர், தலை முறை இடைவெளி. கலாசார இடைவெளி. அடுத்த தலைமுறையினரை வெல்லமுடியாத, அவர்களையும் உள்வாங்கமுடியாத நிலை மிகவும் துர்ப்பாக்கியமானது. அவர்களுடைய புதிய சிந்தனைகளையும், சக்தியையும் பயன்படுத்துவதற்கு பழைய தலைமுறை நிறைய ஆய்வுகள் மேற்கொள்ளவேண்டி இருக்கிறது. நிறையக் கற்றுக்கொள்ளவேண்டி இருக்கிறது. புதிய புதிய விடயங்களைச் சிந்திப்பதும், உள்வாங்குவதும் சலிப்பின்றி உழைப்பதுமே சங்கங்கள் நிலைபெற வழிவகுக்கும். இல்லையேல், சங்கங்கள் மட்டுமல்ல சமூகத்தின் எதிர்காலமுமே கேள்விக்குறிதான்.

**- மனோ சின்னத்துரை**
*முன்னாள் தலைவர்*
*மகாஜனக்கல்லூரி ப.மா.ச. பிரான்ஸ்*
*28.03.2024*

சென்.பற்றிக்ஸ் கல்லூரி - பிரான்ஸ் 35வது ஆண்டு நிறைவையொட்டி வெளிவந்த 'சத்திய பாதை 'மலருக்காக எழுதியது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இணைந்த சொற்களைப் பிரித்து அல்லது சேர்த்து எழுதுதல்

க. செயபாலன்,
கனடா.

தங்கப்பதக்கம்
தங்கப் பதக்கம்
தங்க பதக்கம்

மேலே இருப்பவற்றில் எது சரியான முறை என்பதில் ஐயப்பாடுகள் இருக்கின்றன. சரி, பிழை பார்க்குமுன், இந்த நிலை எப்படி உருவாகிறது என்று பார்க்கலாம்.

முற்காலத்தில் தமிழ் எப்படி எழுதப்பட்டிருக்கும் என்பதற்குச் சான்றாக எங்களிடம் இருப்பவை கல்வெட்டுகளும் பழைய ஓலைச் சுவடிகளும். இவைகளில் சொற்கள், வசனங்கள் என்பவை இடைவெளி உட்பட்ட எந்தவித நிறுத்தற் குறிகளும் இல்லாமல் தொடர்ச்சியாக எழுதப்பட்டிருக்கும்.

இணையத்தில் கண்ட ஒரு ஓலைச் சுவடியின் படம் இதோ.



தனியாக இருக்கும் சொற்களைக்கூட பிரிக்காமல் எழுதியிருப்பது இடத்தை மிச்சப்படுத்துவதற்காக இருக்கலாம்.

உதாரணம்: "வண்டுவந்துதேன்குடித்தது"

சில வசனங்கள் சந்தி சேர்த்து எழுதப்பட்டிருக்கும்போது இப்படியான ஒரு வாசகமாக இருந்திருக்கலாம்.

"வண்டுகளுக்குத்தேன்கொடுக்கப் பூக்கள்பிறந்தனவோ"

இன்னுமொரு வசனத்தை இங்கே ஆய்வுக்காகத் தெரிவோம்.

'தெல்லிப்பழையென்றவூரிற்றோன்றியவொருவற்குப் பள்ளிக்கூடஞ்செல்வதென்றாற்பசியறியாரே"

இதை எடுத்த எடுப்பிலே வாசிப்பதென்பது பலருக்குக் கடினமாக இருக்கும். ஒரே மூச்சில் வாசிக்க எண்ணிச் சிரமப்பட வேண்டியிருக்கும்.

அதனால் ஒரு சில நூற்றாண்டுகளுக்கு முன்னர், சிலர் இத்தகைய வசனங்களில் இடைவெளியை அறிமுகப்படுத்தினார்கள். ஆறுமுகநாவலர் இதை ஆரம்பித்தார் என்றும் அறியப்படுகிறது. அப்படி எளிதாக்கினால் அந்த வசனம் இப்படித் தோன்றும்.

'தெல்லிப்பழை யென்ற வூரிற் றோன்றிய வொருவற்குப் பள்ளிக்கூடஞ் செல்வ தென்றாற் பசி யறியாரே"

இத்தகைய எழுத்து முறையை நாம் பழைய திருக்குறட் புத்தகங்களில் அல்லது வேறு பழைய புத்தகங்களில் கவனித்திருக்கலாம்.

பிரித்து எழுதுபவரின் எண்ணத்தைப் பொறுத்து இந்த வசனக் கூறாக்கலில் கூடிய அளவோ அல்லது குறைந்த அளவோ சொற்களின் எண்ணிக்கை இருந்திருக்கும். உதாரணமாக, பள்ளிக்கூடம் என்பது பள்ளிக் கூடம் என்று எழுதப்பட்டிருக்கலாம்.

அத்துடன் இப்படிப் பிரிப்பது என்பது பிரித்துப் பார்க்க எண்ணுபவரின் தமிழறிவையும் பொறுத்தது. இங்கே இருக்கும் சொற்களை இனங்காண்பது இலகுவாக உள்ளதால், பிரிப்பதும் இலகுவாகி விடுகிறது.

ஒரு சங்க காலப் பாடலை எடுத்துச் சொற்களைப் பிரித்து எழுதுவது என்பது பலருக்கு முடியாத காரியமாக இருக்கும்.

உதாரணமாக:
கொலைவிற்புருவத்துக்கொழுங்கடைமழைக்கண்
இலவிதழ்புரையுமின்மொழிதுவர்வாய்

பிரிப்பது கொஞ்சம் சிரமமாகவே இருக்கும். காரணம், இந்தச் சொற்களிற் பல எங்கள் சொல்லறிவிற்குத் தூரமானவை. மேலே குறிப்பிட்ட உதாரணம் இப்பொழுது நாம் புழங்கும் சொற்களைக் கொண்டுள்ளதால் பிரிப்பதும் விளங்குவதும் இலகுவானதே. ஆகவே தமிழறிவின் ஆழம் இங்கே பங்குகொள்கிறது.

நாமறிந்த அண்மைய சொற்களான "அறிவில்லாதவன்" இரண்டு முறைகளில் பிரித்துப் பார்க்கப்படலாம்.

"அறிவில் ஆதவன்" மற்றது "அறிவு இல்லாதவன்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த நிலை, ஒரு விடயம் சொல்லப்படும் இடங்களையும் சந்தர்ப்பங்களையும் பொறுத்து பல சொற்கள் வேறு வேறு கருத்துகளுக்காகப் பாவிக்கப்படும் என்பதைக் கூறுகிறது. அப்படியான சொற்களைப் பிரித்து எழுத நேர்ந்தால் கூடிய கவனம் தேவை.

ஒன்றாக எழுதப்பட்ட வாக்கியத்தில், இங்கே முதற் தடவையாக இடைவெளி என்ற நிறுத்தற் குறி ஒன்று தமிழுக்கு அறிமுகஞ் செய்யப்படுகிறது. நிறுத்தற் குறிகள் தமிழில் முன்னர் இருந்திருக்கவில்லை. ஆனால் பின்னாளில் அறிமுகமாகி, அந்த வழியில் வந்த முற்றுத்தரிப்பு, காற்புள்ளி, கேள்விக்குறி என்பவை உள்வாங்கப்பட்டு நல்ல உபயோகமாக உள்ளன.

இடைவெளியுடன் உள்ள தமிழ் வசனங்கள் வாசிப்பை இலகுவாக்க உதவுகின்றன. இருந்தும், சொற்களை விளங்கிக் கொள்வது கொஞ்சங் கடினந்தான். இங்கே உள்ள "றோன்றிய", "வொருவற்குப்" என்ற சொற்களை எப்படி எடுத்து கொள்வது? தனிச்சொற்களாக அவற்றை அடையாளங் காண்பது சற்றுச் சிரமமே.

இங்கே முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டியது தமிழின் தரம் கெடாமல் இலக்கணப் பிழையின்றி அவை தரப்படுகின்றன. இங்கே சந்தி பிரிப்பு எதுவும் இடம்பெறவில்லை.

இதை மேலும் இலகுவாக்க எண்ணி, நாம் இலக்கண உதவியை நாடி, சந்தி பிரிப்பின் மூலம் மேலும் பிரித்து எழுத முயல்வோம்.

அதாவது:
என்றவூரில் = என்ற + ஊரில்
ஊரிற்றோன்றிய = ஊரில் + தோன்றிய

போன்ற இலக்கணச் சூத்திரங்கள் மூலம் வசனத்தைக் கூறாக்கிச் சொற்களாகத் தனிமைப்படுத்திக் கொஞ்சங் கருத்து விளங்கக்கூடிய தொடராக எழுத முயல்கிறோம்.

இந்த நிலையில், அந்த வசனம் இவ்வாறு வரும்.

'தெல்லிப்பழை என்ற ஊரில் தோன்றிய ஒருவற்கு பள்ளிக்கூடம் செல்வது என்றால் பசி அறியாரே"

இலகுவாக இருக்கிறது. ஆனால் சிலருக்கு அது நெருடலாகவும், அழகற்றதாகவும், பிழையாகவும் (ந்) தெரியலாம்.

இந்தக் கட்டுரை எழுதுப்படும் போக்கைக் கவனித்தால் எழுதுபவரின் நிலை எதுவென்றும் விளங்கும். ஆனால் எனக்குத் தெரியாத இலக்கணச் சூத்திரங்களால், நான் தவறிழைத்து பல இலக்கணப் பிழைகளை வழுவமைதி காத்து எழுதியுள்ளேன். சில இடங்களில் வேண்டுமென்றே பிழையாக சந்தி பிரிப்பு அல்லது சேர்ப்பு செய்திருக்கிறேன்.

ஊரில் தோன்றிய என்பதை ஊரிற் தோன்றிய என்றும் சிலர் எழுதலாம்.
என்ற ஊரில் என்பதை என்றவூரில் என்றும் சிலர் எழுதலாம்.
எழுதுபவர்களின் எண்ண ஓட்டத்தைப் பொறுத்து சேர்த்தோ பிரித்தோ எழுதலாம்.

"றோன்றிய" என்ற சொல் அதன் முன்னால் இருந்த சொல்லின் தாக்கத்தால் "தோன்றிய" எனற உருவில் இருந்து அந்த உருவைப் பெற்றது.

இதேபோல், ஒரு சிறு உதாரணமாக, அழகு என்ற சொல் எப்படியெல்லாம் உருமாறுகிறது என்பதைப் பார்ப்போம்.

பல் லழகு, மூக் கழகு, இமை யழகு, கண் ணழகு, கழுத் தழகு, முன் னழகு, தே ரழகு, பாட் டழகு, பூ வழகு, கூற் றழகு, பஞ் சழகு

எத்தனை அழகுகள் தமிழின் அழகில். கணினியில் "அழகு" என்ற சொல்லைத் தேடும்போது சிறப்புக் கவனம் எடுக்க வேண்டிய காரணங்களில் இதுவும் ஒன்று.

தங்கப்பதக்கம் என்ற சொல்லை, தங்கப் பதக்கம் என்று எழுதவது பரவாயில்லை. ஆனால் தங்க பதக்கம் என்னும் போது பொருட் பிழை நேரலாம். தங்குவதற்குப் பதக்கம் என்பது போல் பொருள் கொள்ளப்படலாம்.

இவ்வாறு சில சொற்களைப் பிரித்து எழுதும் போது பொருளில் பிழை நேராமல் இருக்கக் கவனம் எடுப்பது நல்லது.

வசனங்களைப் பிரித்து எழுதி இலகுவாக்கும்போது, ஊர்ப் பெயர்களைப் பிரிப்பதைத் தவிர்க்கலாம். உதாரணமாக:

பருத்தித்துறை என்பதை பருத்தித் துறை என்றோ பருத்தி துறை என்றோ எழுதவதை தவிர்க்கலாம்.

சில முக்கிய பெயரீடு, தலைப்புகள் என்பவற்றில் கொஞ்சம் கூடுதலான கவனம் செலுத்த வேண்டும்.

அண்மையில் தமிழ் நாட்டில் தோன்றிய ஒரு அரசியற் கட்சியின் பெயரை 'தமிழக வெற்றி கழகம்" என அறிவித்தார்கள். இதைப் பார்த்துப் பலர் தமது எதிர்ப்பைத் தெரிவித்ததைத் தொடர்ந்து அக் கட்சியின் பெயர் 'தமிழக வெற்றிக் கழகம்" எனத் திருத்தப்பட்டுள்ளது.

மேலும் சில உதாரணங்களைப் பார்க்கலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அச்சந் தவிர் ====== அச்சம் தவிர்
இளமையிற் கல் ====== இளமையில் கல்
கடலோரம் ====== கடல் ஓரம்
விருந்துண்ண ====== விருந்து உண்ண

செல்வத்துட் செல்வஞ் செவிச்செல்வம்
அச்செல்வம்
செல்வத்து ளெல்லாந் தலை.
======
செல்வத்துள் செல்வம் செவிச் செல்வம்
அச்செல்வம்
செல்வத்துள் எல்லாம் தலை.

இவ்வாறு பல எடுத்துக்காட்டுகளை நாம் நடை-முறையிற் பார்க்கலாம்.

சில வேளைகளில் தவிர்க்கமுடியாத அளவில் சில சொற்கள் நீளமாக இருக்கும். அவை பிரித்து எழுதப்பட முடியாதவையாக இருக்கும் வேளை களில், சில நேரங்களில் சில சிக்கல்கள் எழும்.

**உதாரணமாக "எடுத்துக்காட்டுகளை" என்ற சொல்லைப் பார்ப்போம்.**

இது, ஒரு வரியின் இறுதியில் வரும்போது, அந்தச் சொல்லை அடுத்த வரியில் எழுத வேண்டியேற்படும். அப்போது வரியின் அழகு குறைந்து தோன்றும். அத்தகைய நேரங்களில், நாம் இணைப்புக்கோடு என்ற நிறுத்தற் குறியைப் பாவித்து, அதைச் சரியாக்கலாம்.

எடுத்துக்கா-
-ட்டுகளை .......

பிரித்து எழுதும் முயற்சிகளிலே பிரச்சினைகளை எதிர்நோக்கும் நேரத்தில்,
மேலதிக புதிய பிரச்சினை ஒன்றும் உள்ளது.
அதாவது, புணர்ச்சி தேவைப்படாத இடங்களில் வலிந்து புணர்ச்சியை ஏற்படுத்திச் சொற்களைச் சேர்த்து எழுதுவது அண்மையில் காணப்படும் ஒரு கெட்ட (ப்) பழக்கம்.

"முக்கியச் செய்திகள்" என்று பல தொலைக்காட்சி, இணைய வழியான செய்தி ஊடகங்களிற் பார்க்கிறோம். இது இடையில் வந்த ஒரு புதுமை. முன்னர் "முக்கிய செய்திகள்" என்று தான் எழுதி வந்தோம்.

சிவகுமார் என்று எழுதி வந்ததை சிவக்குமார் என்று எழுதுகிறார்கள்.
சீதா என்பதை சீத்தா என்று எழுதுவது.

இவற்றின் தவறுகளையோ அல்லது சரியான பிரயோகங்களையோ எப்படிக் கண்டுபிடிப்பது? தமிழை நாளாந்தம் புழங்கி வருபவர்களுக்கு இத்தகைய பிரயோகம் நெருடலாகத் தோன்றும். அப்போது இதன் சரி பிழைகளைக் கண்டறியலாம்.

வேறு சில சந்தர்ப்பங்களில், கடைப்பிடி என்பதை கடைபிடி என்றும், கட்டிப்பிடி என்பதை கட்டிபிடி என்றும் எழுதும்போது பொருட்பிழை நேரிடும். கேள்விப்பட்டு என்பதை கேள்விபட்டு என்பதும் சரியல்ல.

இறுதியில், எது சரி எது பிழை என்பதை மக்களின் தமிழ் அறிவின் ஆழத்தைப் பொறுத்து அவர்கள் பிழை சரி சொல்ல முடியும். இருந்தும், நாங்கள் எல்லோரும் எங்கள் பொறுப்புகளை உணர்ந்து ஓரளவுக்கேனும் கருத்துப் பிழை தோன்றாது, புணர்ச்சி விதிகளைச் சிதைக்காது தமிழை எழுதி வருதல் மிக முக்கியமாகும்.

தமிழிற்கு ஏராளமான புணர்ச்சி விதிகள் உள்ளன. அத்தனையையும் அறிந்திருப்பதும் அவற்றை ஞாபகம் வைத்திருப்பதும் இலகுவான விடயம் இல்லை. அதனால் நூறு வீதம் சரியாக எழுதுவதோ பேசுவதோ கடினமான காரியம் தான்.

சில சந்தர்ப்பங்களில் தமிழின் நெளிவு சுளிவுகள் மேலதிக பங்களிப்பையும் செய்கின்ற உதாரணங்கள் காணப்படுகின்றன. முன்னரே குறிப்பிட்ட அறிவில்லாதவன் போன்றவை அவை.

பிள்ளையாருக்குக்கல்யாணம்
இது
பிள்ளை! யாருக்குக் கல்யாணம்?
என்றும்
பிள்ளையாருக்குக் கல்யாணம் என்றும்
விளங்கப்படலாம்.

இப்படியாக பல தமிழ் விளையாட்டுகளும் காணப்படுகின்றன.

முடிவாக, தமிழில் சொற்களைச் சேர்த்தோ அன்றிப் பிரித்தோ புழங்கும்போது ஏற்படும் தவறு-களையும் இழுக்குகளையும் நாம் தவிர்க்க வேண்டும். இவற்றைச் சிறுவயதில் தமிழைக் கற்க ஆரம்பிக்கும்போதே, கவனமுடன் படித்து விளங்கி வைத்திருத்தல் நல்லது.

இதுவும் சரி
இதுவுஞ் சரி
இதுவுஞ்சரி

என்பவற்றில் எது சரியென்று விடைத்தாள் திருத்தும் ஆசிரியர் ஒருவர் எடுத்துக் கொள்வார் என்பதைப் பற்றிய சரியான புரிதல் மாணவர்களுக்குத் தெரிந்திருக்க வேண்டும். இல்லாவிட்டால் நூற்றுக்கு நூறு எதிர்பார்ப்பவர் எண்பது எடுக்கும் நிலை நேரிடும்.

சித்திரமும் (ங்) கைப்பழக்கம்
செந்தமிழும் (ந்) நாப்பழக்கம்
தமிழைச் செவ்வனே புழங்கினால்
தவறுகள் தவிர்க்கப்படலாம்.

❍

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# வளரால் விளைந்த மஞ்சரி

- விஜயகுமார் ஜெயாயினி

ஆண்டு 9 - அருணோதயக்கல்லூரி,
அளவெட்டி

மாணவருடைய அறிவு, எழுத்தாற்றல், ஆளுமை ஆகியவற்றை வளர்க்கும் முகமாக யா / அருணோதயக் கல்லூரியில் கல்வி பயிலும் தரம் 9A வகுப்பு மாணவராகிய நாங்கள் "மஞ்சரி" என்னும் கையெழுத்துச் சஞ்சிகையை வெளிக் கொண்டு வந்தோம். இதனைச் செவ்வனே கொண்டு வருவதற்கு எம்மிடம் காணப்பட்ட வாசிப்புப் பழக்கமும் வளர் சஞ்சிகையின் வருகையுமே காரணமாக அமைந்தன. வளர்சஞ்சிகையை வாசித்ததன் மூலம் எமக்கு உண்டான புத்தாக்க அறிவே, மஞ்சரி சஞ்சிகையின் வருகைக்கு வழி வகுத்தது. மஞ்சரி என்பது பல்வேறு வகையைச் சேர்ந்த பூக்களின் கொத்து. அதுபோல் பல்வேறு வகையான ஆக்களின் சேர்க்கை கொண்டது என்பதால் இச்சஞ்சிகைக்கு "மஞ்சரி" என்னும் பெயரைச் சூட்டினோம்.

இம்மஞ்சரி இதழுக்குரிய அட்டைப் படத்தை தானே முன்வந்து சுயவிருப்போடு சுவீந்திரன் நிருசனா என்னும் மாணவி வரைந்து தந்தார். இது போல அந்தந்தத் துறைகளில் தேர்ந்த மாணவர்கள் தங்கள் ஆக்கங்களைத் தந்தனர். அளவெட்டிக் கிராமத்தில் புகழ்பூத்த மூத்த ஆளுமைகளில் ஒருவராக விளங்கியவர் பண்டிதர் க.நாகலிங்கம் ஐயா ஆகையால் அவரைப் பற்றிய கட்டுரையை முதற் கட்டுரையாக இச் சஞ்சிகையில் வெளியிட்டோம். இக்கட்டுரையை ஸ்ரீவெங்கடேசன் ஸரப்பிரியன் எழுதித் தந்தார். இவ்வாறு ஆளுமைகளின் வரிசையில் பிறிதொருவர் கலாபூசணம் சைவப் புலவர் சு.செல்லத்துரை அவர்கள். இவர் குறித்த பதிவொன்றை கெங்காதர கீர்த்தி சதுர்சன் தந்திருந்தார். இவை தவிர சுபாகரன் துசாந்தால் 'சிறுதுளி பெருவெள்ளம்' என்ற கட்டுரையும், சிவகாந்தன் அர்ஜனாவால் 'வாசிப்பை வளர்ப்போம்' என்ற கட்டுரையும் மாணவர் மத்தியில் நம்பிக்கையையும் அறிவையும் வளர்க்கும் முகமாக எழுதப்பட்ட கட்டுரைகள் ஆகும். அதேவேளை நூலில் இடம் பெறும் கனதியான கட்டுரைகளாகவும் இவற்றைக் கொள்ளலாம். பி.தக்க்ஷலனின் 'விநோதக்கனவு' என்ற கட்டுரை காஞ்சனா3' என்ற படம் பார்த்துவிட்டு தூங்கியதால் விளைந்த நகைச்சுவைக் கட்டுரையாகும்.

மாணவரின் விஞ்ஞான அறிவை மேம்படுத்தும் வகையில் ஆக்கங்கள் பலவற்றை 'மஞ்சரி' சேர்த்துக் கொண்டது. அவ்வகையில் சோதிநாதன் அஸ்வின் என்பவரால் 'நுணுக்குக் காட்டியின் வரலாறு' என்ற கட்டுரை அமைந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிருக்ஷ்ணகுமார் திருசிகனால் எழுதப்பட்ட 'விஞ்ஞான விளக்கங்கள்' சஞ்சிகைக்குப் புதுப் பொலிவைத் தந்தன. விஞ்ஞானிகள் குறித்து இருகட்டுரைகளும் சஞ்சிகையில் இடம்பெற்றன. கோ.தேரிக்ஷிகா என்ற மாணவியின் 'தோமஸ் அல்வா எடிசன்' பற்றிய கட்டுரையும் சிவராசா பவிதன் என்ற மாணவனால் எழுதப்பட்ட 'ஆல்பர்ட் ஐன்ஸ்டைன்' என்ற விஞ்ஞானி குறித்த கட்டுரையும் மலருக்குச் சிறப்பைத் தந்தன. அத்தோடு மாணவர் மத்தியில் கணித அறிவினை வளர்க்கும் வகையில் 'எண்கோலங்கள்' என்ற பகுதியையும் சஞ்சிகையில் சேர்த்திருந்தோம்.

மாணவர்கள் எப்போதும் மகிழ்ச்சியாக இருக்கவேண்டும். 'சிரிப்பு இல்லாத வாழ்க்கை சிறகில்லாதபறவைக்குச்சமம்'எனக்கூறுவார்கள். அவ்வகையில் கற்கும் மாணவரை மகிழ்ச்சியாக வைத்திருக்கவும் அவர்களைச் சிந்திக்கவும் சிரிக்கவும் வைக்கும் முகமாக சிரிக்கவும் சிந்திக்கவும்' என்னும் பகுதியைச் சஞ்சிகையில் இணைத்திருந்தோம். இதனை இ.ஆருஜன் என்ற மாணவர் தொகுத்துத் தந்திருந்தார். இத்தோடு சுரேக்ஷ் கிரோஜன் என்ற மாணவரின் விடுகதை கள் மாணவரைச் சிந்திக்கவும் செயற்படவும் தூண்டின. சஞ்சிகையின் இப்பகுதியும் மாண-வரைக் கவரும் வகையில் அமைந்திருந்தது என்பதுவும் இங்கு குறிப்பிடத்தக்கது.

எம்மண்ணின் மரபினைப் பேணும் வகையில் பழமொழிகளையும் சஞ்சிகையில் இணைத் திருந்தோம். இதனை சி.கபிசன் சிறப்பாகவே செய்திருந்தார். மனித வாழ்வின் விழுமியத்தை வலியுறுத்தும் வகையில் தோமஸ் அல்வா எடிசன், அன்னை தெரேசா, காமராஜர், மகாத்மா காந்தி, நியேட்சே ஆகியோரின் பொன்மொழிகளைத் திரட்டித்தந்த சு. நிருக்ஷனாவையும் இத் தருணத்தில் நினைவுகூர்கிறேன்.

நாட்டில் பரவலாகப் போதைப் பொருள் பாவனை அதிகரித்து வருகிறது. அதற்குக் குறிப்பாக மாணவர்களே அடிமையாகின்றனர். போதைப் பொருள் பாவனையில் இருந்து மக்கள் விடுபடவேண்டும் என்ற நோக்கம் கருதி போதைப் பொருள் ஒழிப்பு நடவடிக்கையில் இதழ் கூடிய கவனம் செலுத்தியது. சந்திகுமார் சோமிலன் 'போதைப் பொருள் ஒழிப்பு' என்ற நாடகத்தை இச்சஞ்சிகையில் எழுதி இருந்தார். யசோதரன் கிருட்சிகன், ஞா.ஆர்த்திகன், சி.டேனுயன் ஆகிய மூவரும் இணைந்து இத்தலைப்பில் இச்சஞ்சிகைக்கு ஒரு கட்டுரையையும் தந்துதவினர்.

மாணவரின் ஆக்க இலக்கியப் படைப்பாற்றலைத் தூண்டும் வகையில் மாணவரின் சிறுகதைகளும் கவிதை களும் இச்சஞ்சிகையில் சேர்க்கப்பட்டன. அவ்வகையில் வி.மிதுரனின் 'பொய் சொல்லாத சிரவணன்' மற்றும் கி.மகிர்தாவின் 'நேர்மைக்கு கிடைத்த பரிசு', 'தப்ப முடியாத தண்டனை' முதலான சிறுகதைகளும் மஞ்சரியை அலங்கரித்தன. வி.ஜெயாயினியின் 'கடற்கன்னி' என்னும் கவிதையும் ச.மதுவந்தியின் 'நல்லெண்ணங்களைத் தேர்ந்தெடுப்போம்' என்ற கவிதை யும் எமது சஞ்கைக்கு புதுப்பொலிவைத் தந்தன. 'சிறுதுளி பெருவெள்ளம்' என்ற தலைப்பில் கட்டுரையை எழுதிய சு.துக்ஷாந் அதே தலைப்பில் கவிதை ஒன்றையும் தந்திருந்தார். இச்சஞ்சிகையில் இடம்பெறும் யு.கிருயென்னின் 'சின்னஞ்சிறு கவிதை' என்னும் ஆக்கம் எறும்பைப் பற்றியதாக அமைந்திருந்தது. இச்சஞ்சிகை வெளிவருவதற்குக் காரணமாக இருந்த பாடசாலைச் சமூகத்துக்கும் மற்றும் எமது தமிழாசிரியருக்கும், இதழாசிரியர் என்ற வகையில் நன்றி கூறும் கடப்பாடும் எனக்குள்ளது. இது போன்ற சஞ்சிகைகளின் வரவு பாடசாலைகளில் பரவாலாக்கப்படும் போது எம் போன்ற மாணவரின் அறிவு, திறன், மனப்பாங்கும் கட்டி எழுப்பப்படும்.




# இலவச கண்சிகிச்சை

நாட்டின் அசாதாரண சூழ்நிலை காரணமாக, பொருளாதாரத்தில் நலிவுற்றிருப்போர் இவ் உதவியைப் பெற்றுக்கொள்ளலாம்.

நோய், காயம் மற்றும் வயோதிகம் மூலமாக எமது மக்களின் கண்பார்வையைப் பாதிக்கும் கண்புரை (cataract) , நடுவிழித்திரைச் சிதைவு (macular degeneration) மற்றும் நீரிழிவு ரெட்டினோபதி (diabetic retinopathy) ஆகியவை பார்வை இழப்பை ஏற்படுத்தும்.

குறைந்த செலவில் நடமாடும் கண் மற்றும் பார்வை பராமரிப்பு பரிசோதனை நிலையங்களை அமைத்து கண் பரிசோதனைகள் நடத்தப்படுகின்றன். கண் திறப்புத் திட்டமானது optometrical and ophthalmological screening, கண் மருத்துவப் பரிசோதனையை ஒருங்கிணைத்து, நடமாடும் கண் முகாம்களாக, யாழ்ப்பாணம் STS மருத்துவமனையால் ஒழுங்குசெய்யப்பட்டுள்ளது




தொடர்புகள், மற்றும் மேலதிக விபரங்களுக்கு.

STS Hospital
130, 1st Cross Road
Jaffna.
Phone : +94 212 226 600

சரஸ்வதி இல்லம்
இராமனாலயம்
Phone : +94 764453640

Saraswathyillam@yahoo.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# "இல்லறம் அல்லது நல்லறம் அன்று"

## புலம் பெயர் பெற்றோரும் பிள்ளைகளும்

**சின்னையா ரவீந்திரன் - சுவிஸ்**

தமிழரின் வாழ்வியலில் இல்லறம் முக்கிய பங்கை வகிக்கின்றது. அன்றே ஔவையார் கொன்றை வேந்தனில் கூறினார் "இல்லறம் அல்லது நல்லறம் அன்று" என்று. ஒரு காலத்தில், பெரும்பாலான திருமணங்கள் பெற்றோர்களால் நிச்சயிக்கப்பட்டவையே. பல சந்தர்ப்பங்களில் மணமக்கள் திருமணத்திற்கு முன்பு ஒருவரை ஒருவர் பார்த்திருக்க மாட்டார்கள். சாதகம், சமயம், சாதி, சீதனம், இரு குடும்பங்களின் சமூக பொருளாதார நிலை போன்ற எல்லாம் பொருந்தி வரும் போதுதான் திருமண ஏற்பாடு நடக்கும். புலம்பெயர்ந்தவர்களுக்கு, அவர்களின் கலாசார பாரம்பரியம், அவர்கள் குடியேறிய நாட்டின் கலாசாரம் ஆகியவற்றுக்கு இடையே செல்வது ஏற்கனவே சவாலாக இருக்கலாம். ஏற்பாடு செய்யப்பட்ட திருமணங்கள் இந்தச் செயல்முறையை மேலும் சிக்கலாக்கும், ஏனெனில் அவர்கள் தங்கள் தனிப்பட்ட அடையாளத்தையும் விருப்பங்களையும் குடும்பக் கலாச்சார எதிர்பார்ப்புகளுடன் சமரசம் செய்ய வேண்டியிருக்கும்.

இப்போது, நமது புலம்பெயர்ந்த நாடுகளில், பழைய தலைமுறையினர் தங்கள் பிள்ளைகளுக்கு நிச்சயிக்கப்பட்ட திருமணத்தின் மூலம் துணையைத் தேடத் தொடங்கும்போது, சிக்கலான பிரச்சினைகளை எதிர்கொள்கிறார்கள். ஏற்பாடு செய்யப்பட்ட திருமணங்கள் பல கலாச்சாரங்களில் நீண்டகால பாரம்பரியமாக இருந்து வருகின்றன, மேலும் அவை குடும்ப ஆதரவு மற்றும் கலாச்சார பாதுகாப்பு போன்ற நன்மைகளைக் கொண்டிருக்கும் போதும், அவை குறிப்பாக, புலம்பெயர் சமூகங்களுக்கு சவால்களை ஏற்படுத்தலாம். இளைய தலைமுறைகள் வேறுபட்ட கலாசாரச் சூழலில் வளர்கிறார்கள். இது ஏற்பாடு செய்யப்பட்ட திருமணங்கள் மற்றும் தனிநப ரின் சொந்த நம்பிக்கைகள், ஆசைகள், வேறுபட்ட கலாச்சாரத்தில் அவர்களின் வளர்ப்பின் மூலம் வடிவமைக்கப்பட்ட மதிப்புகளுக்கும் (values) பாரம்பரிய மதிப்புகளுக்கும் இடையே கலாச்சார மோதல்களுக்கு வழிவகுக்கும். ஏற்பாடு செய்யப்பட்ட திருமணங்கள் சில சமயங்களில் சம்பந்தப்பட்ட நபர்களின் சுதந்திரத்தைக் கட்டுப்படுத்துகின்றன, குறிப்பாக அவர்கள் குடும்ப எதிர்பார்ப்புகளுக்கு இணங்க அழுத்தம், மனக்கசப்பு, விரக்தி அல்லது அவர்கள் தங்கள் துணை யைத் தாங்களே தேர்ந்தெடுக்காத சூழ்நிலையில் சிக்கிக்கொண்ட உணர்வுகளுக்கு வழிவகுக்கும்.

முக்கியமாக, ஜாதகம் மற்றும் ஜாதிப் பொருத்தம் இளைய தலைமுறைக்கு விளக்குவது மிகவும் கடினம். பொதுவாக, இளைய தலைமுறையினர் பழைய தலைமுறையினருடன் மனம் விட்டு பேசுவதில்லை, இதனால் இளைய தலைமுறையின் எண்ணங்களை மதிப்பிடுவது, பெரும்பாலான இளைய தலைமுறையினர் வீட்டிற்கு வெளியே என்ன செய்கிறார்கள், அடையாளம் காண்பது மிகவும் கடினம். அவர்கள் வீட்டிற்கு வெளியே ஒருவித காதல் வாழ்க்கை இருந்தால், அவர்கள் பெற்றோரால் நிச்சயக்கப்பட்ட திருமணங்களுக்கு உடன்பட மாட்டார்கள். அதே நேரத்தில், அவர்கள் தங்கள் வீட்டிற்கு வெளியே உள்ள காதல் வாழ்க்கையைச் சொல்லவும் மாட்டார்கள். அவர்கள் பெற்றோரைத் தெரியாத பகுதியில் (unknown zone) பல காலம் வைத்திருந்த பின்னர் அவர்கள் தங்கள் கதையை மெதுவாகச் சொல்வார்கள். பிள்ளைகளுக்குப் பேசித்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமணம் செய்து வைப்பது என்பது பெரிய நேரத்தை வீணடிப்பது என்பதைப் பெற்றோர்கள் காலம் கடந்தபின் உணர்வார்கள்.

இளைய தலைமுறையின் நண்பர்களுக்குப் பெண் நண்பர் அல்லது ஆண் நண்பர் இருக்கும்போது இளைய தலைமுறையினரும் தாங்களும் சகாக்களையும் (boy/girl friend) கொண்டிருக்க வேண்டும் என்று நினைக்கிறார்கள் (Peer pressure). அவர்கள் அதைப் பற்றிப் பெற்றோரிடம் பேசும்போது, இந்த விஷயத்தைப் பற்றிப் பேசுவதற்குப் பெற்றோர்கள் மிகவும் சிரமப்படுவார்கள். சில பெற்றோர்கள் தாய்நாட்டில் மணமகள் அல்லது மணமகனைத் தேடுகிறார்கள். அவர்கள் பல சிக்கலான பிரச்சனைகளைக் காண்கிறார்கள், முக்கியமாக, மணமகன் மற்றும் மணமகள் இருவரும் முற்றிலும் மாறுபட்ட இரண்டு சூழலில் வளர்ந்து இரண்டு வெவ்வேறு சிந்தனைகள் மற்றும் எதிர்பார்ப்புகளைக் கொண்டிருப்பர். எத்தனை முரண்கள் என்று திருமணத்திற்குப் பிறகுதான் தெரியும். மணமகள் அல்லது மணமகன் தாயகத்தில் இருந்து வெளிநாட்டிற்கு வரும்போது அவர்கள் ஆடம்பர வாழ்க்கையை எதிர்பார்க்கிறார்கள், உண்மை முற்றிலும் வேறுபட்டது.

இது தாயகம் போன்ற சமூக வாழ்க்கை அல்ல, தனிமைச் சூழலில் தள்ளாடுவார்கள், வேலை, வீடு பின்னர் மீண்டும் வேலை என்ற சக்கரத்தில் சிக்கிக் கொள்வார்கள். தலைக்கு மேல் கூரையையும் மேசையில் உணவையும் வைக்க, இருவரும் பல வருடங்கள் கடினமாக உழைக்க வேண்டும் என்ற எண்ணம் வந்தவரின் கனவைத் தள்ளாடச் செய்யும், சகிப்புத் தன்மையுள்ளவர்களின் திருமணம் நீடிக்க வாய்ப்புண்டு. பெற்றோர் சாதகம், சாதி பார்த்துப் பிள்ளைகளைப் பேச விடும் போது முதல் சந்திப்பிலேயே தனக்குப் பிடிக்கவில்லை என்று சொல்லி விடுவார்கள். இது ஒரு குறிப்பிட்ட காலத்திற்குப் பல முறை நடக்கும். சிறிது காலத்துக்குப்பின், பெற்றோர்கள் தங்களுக்குப் பொருத்தமான துணையைத் தாங்களே கண்டுபிடிக்கும்படி பிள்ளைகளிடம் கேட்பார்கள். பிள்ளைகள் 30-35 வயதை அடையும் வரை இது நீடிக்கும். முதிர் கன்னிகளையுடைய பெற்றோர்கள் பெரும் மனவலியுடன் இருப்பார்கள், பொது நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதைத் தவிர்ப்பார்கள். பிள்ளைக்கு ஏதாவது கல்யாணம் சரி வந்ததா? என்ற கேள்வியை எதிர்நோக்க விரும்ப மாட்டார்கள்.

இந்தச் சவால்களை எதிர்கொள்வதற்கு இளம் சந்ததியுடன் மனம் விட்டுப் பேசுதல், தலைமுறையினர்க்கிடையே பரஸ்பர மரியாதை மற்றும் தனிப்பட்ட சுதந்திரத்தை மதித்தல், கலாச்சார மரபுகளுக்கு இடையில் சிக்கலான பிரச்சினைகளை புரிந்து கொள்ளுவதற்கான உரையாடல் நடத்த விருப்பம் தேவை. இளைய தலைமுறையினரின் நல்ல நண்பர்களுடன் பிரச்சனைகள் பற்றிய உரையாடல், ஆலோசனை சேவைகள் (counselling services) ஆகியவற்றின் ஆதரவு புலம்பெயர் சூழல்களுக்குள் ஏற்பாடு செய்யப்பட்ட திருமணங்களை வழிநடத்தும் நபர்களுக்கு உதவியாக இருக்கும்.

இளைய தலைமுறையினரின் மதிப்புகள், அபிலாஷைகள் மற்றும் நல்வாழ்வு ஆகியவற்றுடன் இணைந்த தேர்வுகளைச் செய்ய அதிகாரம் பெற்ற இடங்களை உருவாக்குவதே குறிக்கோளாக இருக்க வேண்டும். புலம் பெயர் தேசத்திலோ, தாயகத்திலோ கட்டுப்பாடுகளைத் தளர்த்தி, மனம் விட்டுப் பேசி அவர்களுக்குரிய வாழ்க்கைத் துணையை அவர்களே தேர்ந்தெடுக்கின்ற சுதந்திரத்துக்குப் பக்க பலமாக நின்றால் ஆரோக்கிய வாழ்க்கைக்கு வழி வகுக்கும்.



**பயணங்கள்**

கப்பல் பயணங்கள்
கடல் அலைகளோடு
சம்பவிப்பவையும்
சங்கமிப்பவையும்
என்பதே உண்மை!
ஆர்ப்பரிக்கும் அலைகளைக் கண்டு
அஞ்சுபவனல்லன் மாலுமி!
ஓர்மத்துடன் பாய்மரங்களுள்
காற்றை நுழைவித்துக்
கரைசேர வல்லோன்!
வாழ்க்கைப் பெருங்கடலில்
மனமெனுந் தோணியை
மூழ்கவிடாதோர்
பிழைத்துக் கொள்கின்றனர்!
இம்மையிலும் மறுமையிலும்!



**கனல்!**

நந்தவனங்களை
வளம் கொழிக்கச் செய்யும்
அந்த நதிகள் வற்றி
நெடுங்காலம்!
பசுமரக் காடுகள் விரவிக்
கிடந்த நிலமெலாம்
அசுத்தம் விளைக்கும்
விசும்பு முட்டும்
கட்டிடக் காடுகள்!
ஊரெங்கும் காண்டாவனம்
என மாரடித்து அழுகுரல்கள்!
பாரெங்கும் அனல் போலக்
கொழுத்தும் வெப்பம்!
பெருங்கடலும் தண்மை தாராது!
பசுமையைத் தொலைத்த
ஒரு பெருந் துயரந் தாங்காது
என்னுள்ளும் பற்றி
எரிகிறது
கனல்!

**- புனிதா கணேஸ்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 'இயற்கை, இறைமை இரண்டையும் போற்றும் எழுத்துச் சித்தர்'



# பெருமாள் முருகனுடன் சில மணிநேரங்கள்…

- கவல் கணன்

தெற்கு ஆஸ்திரேலியாவின் தலைநகர் அடிலெய்ட் ஆண்டு தோறும் விழா எடுக்கிறது. அதில் எழுத்தாளர்களுக்கென்று ஒரு வாரம். "Adelaide Writers Week" என்று சிறப்பாக ஒரு வாரம் மார்ச் 2ஆம் திகதி முதல் 7ஆம் திகதி வரை நகரத்தின் மையப் பகுதியிலுள்ள ஒரு பூங்காவில் விழா. இருக்கப் பிடிக்கவில்லை, சென்று பார்க்கலாம் என்று கிளம்பினால், ஒரு நல்வாய்ப்பு. அஞ்சலி ஜோசஃப், நிலஞ்சலா றோய், அஞ்சும் ஹசன் என்ற இந்திய எழுத்தாளர்கள் மட்டுமின்றி மீனா கந்தசாமி மற்றும் பெருமாள் முருகன் அவர்களும் கலந்து கொண்டிருந்தார்கள். ஐந்து எழுத்தாளர்களும் தனித்தனியாக மேடைகளில் தோன்றி தமது எழுத்துப் பணிகள் பற்றியும் தமது இந்திய நாட்டின் கள நிலைப்பாடுகள் குறித்தும் தத்தமது கருத்துகளைப் பகிர்ந்திருந்தார்கள். அவர்கள் ஐவரும் ஒரே மேடையில் ஒரு கருத்துப் பரிமாற்றத்திலும் கலந்து கொண்டார்கள்.

இந்த நிகழ்வுக்காக அவுஸ்திரேலியாவிற்கு அழைக்கப்பட்டிருந்த எழுத்தாளர் பெருமாள் முருகன் அவர்கள் சிட்னி நகரிலுள்ள University of New South Wales (UNSW) இன் Centre For Ideas என்ற அமைப்பின் ஒழுங்கமைப்பில் நடைபெற்ற ஒரு பொதுக் கூட்டத்திலும், சிட்னி நகரில் தமிழ் கலை மற்றும் பண்பாட்டுக் கழகம் மற்றும் மெல்பேர்ண் நகரில் அவுஸ்திரேலிய தமிழ் இலக்கிய கலைச் சங்கம் என்ற அமைப்புகள் ஒழுங்கில் நடந்த நிகழ்வுகளிலும் உரையாற்றியிருந்தார்.

அவுஸ்திரேலிய தமிழ் இலக்கிய கலைச் சங்கம் என்ற அமைப்புகள் ஒழுங்கில் மெல்பனில் நடந்த நிகழ்வில் அவரது 'மாதொருபாகன் நாவல்' பற்றிய பார்வை ஒன்று முன் வைக்கப்பட்டது மிகவும் பொறுமையாகவும் அவதானத்துடனும் பேச்சாளர் சொல்லும் ஒவ்வொரு வசனத்தையும் பெருமாள் முருகன் அவர்கள் கூர்ந்து அவதானித்துக் கேட்டுக் கொண்டிருந்ததை பார்த்து இரசித்துக் (இலயித்துக்) கொண்டிருந்தேன்.

**'தமிழர்கள் பழம் பெருமை பேசுவதில் வல்ல வர்கள் ஆனால் அந்தப் பெருமைகளை ஆவணப் படுத்துவதோ பதிவு செய்வதோ இல்லை'** என்ற தலைப்பில் பெருமாள் முருகன் சுமார் ஒரு மணி நேரம் உரையாற்றினார். முக்கியமாக உலகப் பொது மறை என்று கூறப்படும் திருக்குறள் தமிழ் மக்களால்தான் அப்படி அழைக்கப்படுகிறது என்றும் திருக்குறள் பல மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டிருந்தாலும் அதை எழுதியவர் யார் அவரது பெயர் திருவள்ளுவர் தானா என்பது கூட ஆவணப் படுத்தப்படவில்லை என்பதை மன வருத்தத்துடன் சுட்டிக் காட்டினார். 'தமிழ் விடு தூது' என்று ஒரு அழகான நூல் இருக்கிறது என்று கூறியவர், அதனை எழுதியவர் யார் என்று தெரியாது என்பதை விலாவாரியாகக் கதைகளுடன் எடுத்துச் சொன்னார். மயிலை சீனி வெங்கடேசன் அவர்கள் எழுதிய நூல்கள் பலவற்றைச் சுட்டிக்காட்டிய அவர், 300 பக்கங்கள் கொண்ட "மறைந்து போன தமிழ் நூல்கள்" என்று அவர் எழுதியிருந்த நூலைச் சுட்டிக்காட்டி, எத்தனையோ நூல்கள் எழுதப்பட்டதற்கான சான்றுகள் பல்வேறு நூல்களில் இடம் பெற்றிருந்தாலும், அப்படியான நூல்கள் அனைத்தையும் இன்றுவரை பெற முடியாதது குறித்து கவலையுடன் கருத்துப் பகிர்ந்தார்.

'இலக்கியம் வாசிப்பவர்களின் ஆயுள் அதிகரிக்கும்' என்று அவரது உரையிலே பலமுறை கூறியிருந்தார். கூட்டத்திற்கு வந்திருந்த பாதிக்கும் மேற்பட்டவர்கள் இளையோர் அல்லர் என்பது அவர் கூறியதற்குச் சான்று போல் அமைந்திருந்தது.

இவர் பேசி முடிந்ததும் அவரிடம் கேள்வி கேட்கும் வாய்ப்பு வந்திருந்தவர்களுக்கு வழங்கப்பட்டிருந்தது. சில கேள்விகள் கேள்வி கேட்பவரின் அறியாமையை எடுத்துரைத்தன, சில கேள்விகள் கேள்வி கேட்பவர் தம் விற்பன்னத்தை மற்றவர்களுக்கு, குறிப்பாக பெருமாள் முருகன் அவர்களுக்குத் தெரியப் படுத்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும் என்பதற்காகச் சொல்லப்பட்டது போல் எனக்குப் பட்டது.

கூட்டம் நடந்த இடத்தில் அன்று 38 டிகிரி செல்ஸியஸ் வெப்பம். இருந்தாலும் பேசியவரோ வந்திருந்தவர் களோ சூடாகாமல் அமைதியாகக் கருத்துப் பரிமாற்றம் நடந்தது மகிழ்வைத் தந்தது.

தமிழ்க் கலை மற்றும் பண்பாட்டுக் கழகம் சிட்னியில் ஒழுங்கமைத்திருந்த விழா உண்மையில் எழுத்தாளர் ஆ.சி.கந்தராஜா அவர்கள் முன்னெடுப்பில் நடந்தது என்று அறிகிறேன். அவரால் நிகழ்ச்சியை ஒருங்கிணைக்க முடியாமல் போனதால் பண்பாட்டுக் கழகத்தினர் கைகொடுத்திருந்திருக்கிறார்கள். அந்தக் கூட்டத்தில் பெருமாள் முருகன் அவர்கள் "புனைவும் அபுனைவும்" என்ற தலைப்பில் உரையாற்றியிருந்தார். தமிழ் இலக்கியங்கள் அச்சுப் பதிவில் வரத் தொடங்கிய பின்னர்தான் அபுனைவு தமிழுக்கு அறிமுகமாகியிருந்தது என்ற கருத்தை அவர் முன் வைத்திருந்தார். கேள்வி நேரத்தில் இருவர் அது பற்றிக் கேள்வி எழுப்பியிருந்தார்கள். அவர்கள் கேள்விகளைத் தொடர்ந்து எனக்கும் குழப்பமாக விட்டது. பெருமாள் முருகன் அவர்களது அனைத்து எழுத்துகளையும் வாசித்துள்ள ஒரு 'வாசகர்' கேட்ட கேள்விகளாலும், கூறிய கருத்துகளாலும் பெருமாள் முருகன் அவர்கள் ஆச்சரியத்தில் ஆழ்ந்து போனது அவர் முகபாவங்களிலும் உடலசைவுகளிலும் தெளிவாகத் தெரிந்தது. அப்படி ஒரு வாசகர் ஒரு எழுத்தாளருக்கு வாய்த்திருப்பது பெருமைப்பட வேண்டிய விடயம்தானே!

UNSWவில் நடந்த கூட்டத்திற்கு 300 பேர் பதிவு செய்திருந்ததாக, அந்தக் கூட்டம் நடந்த இடத்தில் இருந்த ஒருவர் இன்னொருவருடன் பேசுவதிலிருந்து அறிந்து கொண்டேன், சொன்னவர், அதே மூச்சில் "பதிவு செய்பவர்களில் பாதிக்கும் மேற்பட்டவர்கள் வருவதில்லை என்று கூறினார். நானும் அவர்களிடம் பேச்சுக் கொடுத்ததில், Centre For Ideas என்ற அமைப்பு ஒழுங்கமைத்த கூட்டங்களில் மிக அதிகமானவர்கள் வருகைக்காகப் பதிவு செய்தது பெருமாள் முருகன் அவர்களின் பேச்சைக் கேட்கத்தான் என்று அறிந்து கொண்டேன். அவர்களில் ஒருவர் கூறியது போல், உள்ளே இருந்தவர்கள் எண்ணிக்கை ஒரு நூற்றி ஐம்பது அல்லது நூற்றி எண்பது என்று மதிப்பிட்டேன். பெருமாள் முருகன் அவர்களுக்கு ஒரு மொழிபெயர்ப்பாளர் இருந்தார். நீட்டி முழக்காமல் தேவையான கருத்துகளை மட்டும் மொழி பெயர்த்துக் கொடுத்திருந்தது போதுமானதாக இருந்தது.

இத்தனையையும் சற்று விரிவாக நான் கூறியிருப்பதற்குக் காரணம் இருக்கிறது. எந்த வித பந்தாவும் இல்லாமல் ஒரு விருது பெற்ற எழுத்தாளர் தமிழர்களிடையேயும், தமிழ் தெரியாதவர்களிடையேயும் அவுஸ்திரேலியாவில் பழகியதை நேரில் பார்த்த எனக்கு, அவரது பேச்சும் அவர் கூறிய கருத்துகளும் அவர் மற்றவர்களுடன் நடந்து கொண்ட விடயமும் என்னை மிகவும் ஈர்த்துள்ளன. இருந்தாலும் தமிழர்கள் கலந்து கொண்ட கூட்டங்களில் அவர் கூறிய ஒரு கருத்து சற்று நெருடலாக இருந்தது. அவுஸ்திரேலிய அரசின் அழைப்பில் அவர் இங்கு வந்திருந்ததாக அவர் கூறியதில் உண்மையில்லை. அவரை இங்கு அழைத்திருந்தது ஒரு மாநில அரசின் சுற்றுலாத் துறையின் ஒரு பணிமனை மட்டுமே. ஆனால், அதனை அவுஸ்திரேலிய அரசு என்று அவர் கூறித்திரிந்ததைத் திருத்துவதற்கோ அதனைப் பெரிய குற்றம் என்று சுட்டிக் காட்டுவதற்கோ எனக்கு மனமிருக்கவில்லை.

அவர் எழுதிய மாதொருபாகன் என்ற நூல் பற்றி எதிர்ப்பு கிளம்பியதை அடுத்து, அவரது ஊரிலிருந்த அதிகாரிகளும் எதிர்ப்பாளர்களும் அவருடன் ஒரு ஒப்பந்தத்திற்கு வந்ததாகவும், அதைத் தொடர்ந்து அந்த நூலை விற்பதற்கோ, மறு பதிப்பு செய்வதற்கோ அவருடைய உரிமை மறுக்கப்பட்டதென்றும் அவர் கூறினார். எழுத்தாளனாகிய அவருக்கு அதை விட அதிகமான அவமானம் எதுவும் இல்லை என்று கூறிய அவர், அத்துடன் எழுதுவதில்லை என்று முடிவெடுத்து, "எழுத்தாளர் பெருமாள் முருகன் இறந்து விட்டார்" என்று அறிவித்ததாகவும் கூறினார். அதனை சொல்லும் போதெல்லாம் அவரது வலியை மீண்டும் மீண்டும் உணர்ந்தது போல் தெரிந்தது. இந்த முடிவு ஏற்றுக் கொள்ளக் கூடியது அல்ல என்று ஒரு எழுத்தாளர் சங்கம் தொடுத்த வழக்கில் தீர்ப்புக் கூறிய நீதிபதி, மாதொருபாகன் நாவலை முழுமையாக வாசித்து அதனை வரி வரியாக விளக்கி, பெருமாள் முருகன் அவர்கள் எழுத்தில் எந்தக் குறையும் இல்லை என்று கூறி, இறுதியில், 'பெருமாள் முருகன் தொடர்ந்து எழுத வேண்டும்' என்று சொன்னதன் பின்னர்தான் அவர் மீண்டும் எழுத ஆரம்பித்ததாகக் கூறினார். அந்த நீதிபதி வழக்கை விசாரிக்கவில்லையென்றால், அல்லது விசாரித்த நீதிபதிக்கு இலக்கியத்தில் அவ்வளவு ஆர்வம் இருக்கவில்லையென்றால் தமிழ் பேசும் நல்லுலகு ஒரு சிறந்த எழுத்தாளரை இழந்திருக்கும் என்பது உண்மைதான்.

பெருமாள் முருகன் அவர்களது எழுத்துகளைப் படித்தவர்களுக்குத் தெரியும் அவர் எவ்வளவு நுணுக்கமாக அனைத்தையும் அவதானித்து, அவற்றை வாசகர்களின் கண்களூடாகப் பார்க்கும் வண்ணம் எழுதும் வல்லமை கொண்டவர் என்பது. அவுஸ்திரேலியாவில் அவர் பலரை சந்தித்துள்ளார், பல இடங்களில் பேசியுள்ளார். அவரை அழைத்துக் கொண்டு பல சுற்றுலா இடங்களுக்குப் பலரும் சென்று வந்துள்ளார்கள். அவரது அவுஸ்திரேலிய அனுபவங்களுடன் பின்னிப் பிணைந்த ஒரு கதையோ நாவலோ விரைவில் வெளிவரும் என்ற நம்பிக்கையுடன் காத்திருப்பவர்களில் நானும் ஒருவன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சிறுகதை

# வல்லான்வில் வேட்டைக்காரி

அகரன்

'வல்லான்வில்' என்ற கிராமத்திற்கு நாங்கள் குடிபெயர்ந்து சில நாட்களில் மூன்றாவது வீட்டில் திருட்டுச் சம்பவம் நடைபெற்றது. 'கிராமங்களுக்கு எல்லா இடமும் கண்கள் இருக்கும்' என்ற பிரெஞ்சு சொல்வடையை இத் திருட்டு பொய்யாக்கி விட்டது. சம்பவம் நடைபெற்று ஆறு மாதங்களின் பின்னர்தான் எங்கள் வீட்டுக்கு அந்த செய்தி தெரிய வந்தது.

பெரு நகரத்தில் இருந்து கிராமத்துக்கு குடிபெயர்வது என்பது தாயின் தசைவீட்டுக்குள் மீண்டும் சென்றுவிடுவது.

இலங்கையின் ஒரு கிராமத்தில் பிறந்து, பிரான்சின் மாபெரும் பிளே பச்சைக்கடலின் நடுவே இருக்கும் வல்லான்வில் என்ற கொனி ஆற்றின் கைக் குழந்தையான கிராமத்துக்குள் நுழைவது, கொல்சா பூக்களின் மேல் படுத்திருந்து நட்சத்திரங்களை எண்ணுவது போன்றது.

கிராமங்களின் இதயம் தாய்மையடையும் உயிர்களின் கருவறை போன்றது. அந்த இருட்டுக்குள் இருந்துதான் ஒளிகள் பிறப்பெடுக்கும். அப்படி ஒரு இனிய இருட்டில் யாரும் தட்டாமலேயே 'கதை' கதவை திறந்து கொண்டு வெளியே வந்தது.

மகளைப் பள்ளிக்கூடத்தில் விட்டுவிட்டு நடந்து வந்து கொண்டிருக்கும்போது அக்கிராமத்திலேயே சண்டைக்காரி என்று அறியப்பட்ட பாட்டி சன்னலை திறந்து 'மொன்சூர் எங்கள் கிராமத்து இளவரசியை பள்ளியில் விட்டு விட்டு வருகிறாயா ?' என்று தன் தொங்கிய கன்னச்சதைகள் குலுங்கும்படி கேட்டாள். அவள் சதைகள் தொங்கும் வயதில் இருந்தாள்.

குறிப்பிட்ட இந்த கிழவியுடன் அவதானமாக இருக்கும் படி எதிர் வீட்டு ரமியும், அக்கிராமத்து நகரத் தந்தை புறினோவும் சொன்னதால், நான் நிதானமாகக் கிழவியை எதிர்கொண்டேன்.
அக்கிராமம் முதியவர்களால் மட்டும் உயிர் வாழ்வதால் 'கிராமத்தின் இளம் குடும்பமும் ஒரே ஒரு குழந்தையும் இருக்கும் வீடு' என்ற அங்கீகாரம் எமக்கு கிடைத்திருந்தது. எந்த முயற்சியும் இன்றிக் கிடைத்த அங்கீகாரத்தை வைத்துக்கொண்டு என்ன செய்வது என்று தெரியாது இருந்தபோது, எல்லோரிடமும் சண்டை பிடிக்கும் கிழவி எனது மகளை 'இளவரசி' என்று கூறியது எனக்குக் குதூகலத்தை கொண்டு வந்து விட்டிருந்தது. உடனடியாகவே 'கிழவியோடு ஒட்டுறவு வேண்டாம்' என்று இருக்கின்ற கிராமத்தின் மீது பொசுக்கென்று கோபம் வந்தது.

சன்னலைவிட்டுநீங்கி கதவின்ஊடாக வெளியே வந்து படலையின் அருகே நின்றபடி 'உனக்குத் தெரியுமா இந்த அயல் வீட்டில் திருட்டு நடந்திருக்கிறது!' என்றாள். சிவந்த மசுக்குட்டி ஒன்றுக்கு மேல் ஒன்று படுத்திருப்பதுபோல் அவள் முதிய உதடுகள் இருந்தது. இலைகளுக்குள் தெரியும் நரம்புகள் வடிவில் கன்னத்தசைக்குள் இருந்த நரம்புகள் அவள் பேசும்பேது மண்புழு அசைவது போல் அசைந்தன. அவை அசைவதைப் பார்த்தால் அவை வெளியே வந்திடும் போல் இருந்தது. ஒரே நேரத்தில் சிரிக்க முயன்று பேசினாலும் கண்கள் தூர நட்சத்திரங்களை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படம்பிடிக்கும் ஜேம்ஸ் செய்மதியாக எனது கறுப்புத்தோலை ஆராய்ந்தது. 'இளமையில் இந்த கிழவி என்ன பாடுபடுத்தி இருப்பாள் சிறுக்கி' என்று எனக்குள் ஒருவன் கூவினான்.

தான் கூறுவதை யாரும் கேட்டு விடக் கூடாது என்ற திட்டத்தோடும் ' இந்தக் கிராமமே தன் பேச்சை ஒட்டுக் கேட்கிறது என்ற பௌவியத்தோடும் கிழவி யின் கண் அசைவுகளும், வாய்ச்சுழிப்பும் இருந்தது. திருட்டு நடந்த வீட்டுக்கும் எங்கள் வீட்டுக்கும் நடுவில் கிழவியின்வீடு இருக்கிறது. திருட்டு நடந்தது பற்றிய அச்சமோ, அதூசையோ அற்று உற்சாகமான மனநிலையை வெளிக்காட்டியபடி 'அது நடந்து ஆறு மாதமாகிவிட்டது' என்றாள்.

நான் செயற்கைத்தனமான ஆச்சரியத்தை கொண்டு வந்து 'இங்கும் இப்படி நடக்கிறதா?' என்றேன்.

'நாற்பது வருடத்திற்கு பிறகு இப்போது தான் நடந்திருக்கிறது' என்றாள்.

'நீங்கள் எத்தனை வருடமாக இங்கு இருக்கிறீர்கள் ?' என்றேன்.

'ஓ நீ என்ன கேள்வியை கேட்டு விட்டாய்? இதோ பார் இந்தச் சுவருக்கு பின்னால்த்தான் பிறந்தேன். அப்போதெல்லாம் வீடுகளிலேயே பெத்து விடுவார்கள்.'

'கள்வனைப் பிடித்து விட்டார்களா ? அது எப்படி இங்கே நடைபெற்றது ?'

'ஓ.. அது உலகமெல்லாம் இருக்கும் சமாச்சாரம் தான். இந்த வீட்டுக்காரரின் பிழை தான். கள்வனின் தவறல்ல. வீட்டு வேலைக்கும், தோட்டங்களை அழகு படுத்தவும் அவர்கள் கண்ட.. கண்ட ஆட்களிடம் திறப்பை கொடுத்து விடுவார்கள். அதனால் அங்கு யார் நின்றாலும் நாங்கள் அவதானிப்பதில்லை. அன்று பகல் வேளையில்த்தான் திருடர் வந்து அவர்களது குடி வகைகளை அள்ளிக் கொண்டு போய் விட்டார்கள்' என்று கிழவி சிரித்தபோது திருடருக்கு ஆதரவாக இருப்பது தெரிய வந்தது.

'இங்கே என் வீட்டுக்குத் திருடர் வந்தால் உயிரோடு போக முடியாது' என்றாள். அது எனக்கென்றே சொல்வது போல் ஒரு தோரணையை நான் உள்வாங்கி 'எப்படி நீ சொல்வாய் ?' என்றேன்.

'என்னிடம் மூன்று துப்பாக்கிகள் உள்ளன. அவை வேட்டைத் துவக்குகள். திருடர் வந்தால் நான் யோசிக்க மாட்டேன். உடனடியாகச் சுட்டு விடுவேன். என்னிடம் அதற்கான பலம் இருக்கிறது.' என்று கையால் சுட்டுக்காட்டியபோதே பொக்கை வாயையும் பயன்படுத்திக் கொண்டாள்.

என்னருகே மிக நெருங்கி வந்தவள் 'இந்த கிராமத்தில் உங்களைவிட நல்லவர்கள் ஒருவரும் இல்லை. நீ உன் வீட்டில் நடைபெற்ற விருந்தின் போது இடையூறுக்கு வருந்தி துண்டுச்சீட்டு எழுதிப் போட்டு இருந்தாய். இவர்கள் யாரும் அப்படி நடப்பதில்லை. திமிர் பிடித்த மூடர்கள்' என்றாள்.

இந்த கிராமம்தான் மோசமான கிராமமா? இந்த கிழவி அற்புதமான கிழவியா? குழப்பக்கிடங்கில் திட்டமிட்டு வீழ்த்தப்படுகிறேனா? என்று மூளை சிந்தித்தது. இந்த உரையாடல் நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது ரெமியும் அவர் மனைவி அன்னாவும் அப் பாதையால் வந்தனர். நதியோரமாகத் தமது நாயைக் பொழுதுபோக்காக அழைத்துச் செல்ல எங்களைக் கடந்து செல்லவேண்டி இருந்தது.
கிழவியின் நாய் ரெமியின் நாயைக் கடிக்க ஓடியது. கிழவி அதை கண்டு கொடுப்புக்குள் சிரித்தபடி 'கடிக்கட்டும்' என்ற நினைப்பில் மெதுவாகத்தான் அதைக் கூப்பிட்டாள். தனது நாயைப் பாதுகாக்கும் படபடப்பில் வணக்கத்தை துண்டு துண்டாக எனக்கு வைத்தபடி வேகமாக ரெமி கடந்தார். தனது நாய் அவர்களது நாயை கடித்துவிட்ட மகிழ்ச்சி கிழவியின் முகத்தில் தெரிந்தது. அதை ஒரு கொண்டாட்டமாக நொடிகளில் மலர்த்திக் காட்டியது அவள் முகம்.

'சரி மேடம், நீ தான் இந்த கிராமத்தின் மூத்த பெண்ணா ? என்றேன்.

'எப்படிக் கண்டுபிடித்தாய் மற்ற எல்லோரும் எனக்குப் பிறகு வந்தவர்கள்' என்றாள்.

'அப்படி என்றால் நாங்கள் இருக்கும் வீட்டின் வரலாறு உனக்குத் தெரிந்திருக்குமே ?'

'பின்னே என்ன ? நான் இங்கு தானே இருந்தேன் !. உனக்கு முன் இருந்த மிஸ்யு புவாவுக்கு முதல் இருந்த பொறஸ்ரியே குடும்பம்தான் காணியை உருவாக்கி சிறிய வீடு கட்டியவர்கள். அது 1900 ஆரம்பமாக இருக்கும்.

அவர்களுக்கு நான்கு பிள்ளைகள். இரண்டு ஆண்கள். இரண்டு பெண்கள். இரண்டாம் உலக யுத்த காலத்தில் ஜெர்மன் பரசூட் வீரன் ஒருவன் தவறி இவர்களது தோட்டக் காணிக்குள் விழுந்துவிட்டான். அவனுக்கு மேடம் பொறஸ்ரியே சாப்பாடு கொடுத்து பராமரித்து அனுப்பி இருக்கிறார். அதற்கு நன்றி சொல்ல ஒரு வாகனத்தில் ஜெர்மன் ஆமி இங்கு வந்து அவர்களுக்கு பரிசாக ஏதோ கொடுத்துவிட்டு சென்றிருக்கிறார்கள். இதனால் அவர்களுக்கு எதிர்ப்பு உருவாகி அப்போது ஜெர்மனியர்களுக்கு எதிராக இயங்கிய புரட்சிக்குழு மேடம் பொறஸ்ரியே தோட்டத்தில் வேலை செய்து கொண்டிருந்த போது சுட்டுவிட்டு ஓடிவிட்டார்கள்.

அதற்குப் பிறகு மிஸ்யூ பொறஸ்ரியேவும் தற்கொலை செய்து கொண்டார். இரண்டு ஆண்களில் ஒரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பையனுக்கு கிட்டத்தட்ட எனது வயதிருக்கும். அவன் ஜெர்மன் இராணுவத்திற்கு தகவல் கொடுப்பவனாக மாறிவிட்டான். பிறகு இரண்டு ஆண்களும், இரண்டு பெண்களும் உங்கு தான் வாழ்ந்தார்கள். ஜெர்மன் ராணுவத் தொடர்பால் அவர்களுடன் யாரும் தொடர்பு வைத்துக் கொள்ளவோ பேசவோ விரும்பாததால் திருமணமே செய்யாது நால்வரும் வாழ்ந்து இறந்து போனார்கள்.

'அப்படியா அதிர்ச்சியாக உள்ளது... !.?'

'யுத்தம் எல்லாவற்றையும் மாற்றிவிடும். எனது அப்பா வேட்டையும் விவசாயமும் செய்தார். யுத்தத்தின் கடைசிக் காலத்தில் ஜெர்மனியர்களை விரட்ட எல்லா ஆண்களும் செல்ல வேண்டி இருந்தது. எனது அப்பா தெற்கு பிரான்ஸ் பகுதிக்குச் சென்றார். அப்போது ஜெர்மன் படைகள் விட்டு விட்டு ஓடிய ஒரு இராணுவ வண்டியை எடுத்துக்கொண்டு இங்கே வந்துவிட்டார். 'அது ராணுவக் களவு" என்று விட்டு கிழவி எங்கிருந்தோ வந்த சந்தோசத்தை நிறைத்துச் சிரித்தாள்.

அப்புறம் என்ன நடந்தது?

'எங்களை வாகனத்தில் ஏற்றியபடி வீதி வீதியாக அப்பா திரிந்தார். யாரோ பிரெஞ்சு ராணுவத்திற்கு அறிவித்துவிட்டார்கள். ஒரு நாள் இரவு தூக்கத்தில் இருந்தபோது ராணுவம் வீட்டைச் சுற்றி வளைத்து அப்பாவைப் பிடித்துப் போய்விட்டார்கள். பின்பு ஸ்ராஸ் புரூஸ் நகரத்தில் உடை இல்லாமல் ஆறு மாதங்கள் இருக்கும் தண்டனை முடித்து வந்தார். என் அப்பா கழுத்தில் தலையிருப்பதை மறந்து விட்டு திருடக்கூடியவர்' என்று தன் தந்தையின் சாகசங்களில் கிழவி உடல் குலுங்கியபடி இருந்தது.

'குறுகிய நேரத்தில் இத்தனை வெளிப்படையாகப் பேசினாய். உனக்கு என்ன உதவியானாலும் சொல்லு நான் இருக்கிறேன்' என்றேன்.

கிழவிக்குக் கண்கள் சிவந்தன. எனக்கு மூன்று பிள்ளைகள் இருக்கிறார்கள். ஆனால் ஒருவரும் என்னுடன் பேசுவதில்லை. நானும் எனது கணவனும் தனியே இருக்கிறோம். எனது முதற்கணவன் ஒரு குழந்தையோடு 18 வயதில் நான் இருந்தபோது தற்கொலை செய்து கொண்டான்.

இரண்டாவது கணவனுக்கும் ஒரு குழந்தை இருந்தது. அவன் முரடன். எடுத்ததற்கும் அடிப்பான். குழந்தை பிறந்து சில மாதங்களிலேயே பிரிந்து விட்டோம். அவனோடு இருந்திருந்தால் அவன் என்னை அடித்தே கொன்றிருப்பான்.

இப்போது நானும் மூன்றாவது கணவரும் 45 வருடமாக ஒன்றாக இருக்கிறோம். நமக்கும் ஒரு குழந்தை. இப்படி மூன்று ஆண்களுக்கும் ஒரு குழந்தை தந்தும் ஒன்றும் என்னோடு பேசுவதில்லை. இருந்தாலும் நாம் வாழத்தானே வேண்டும்!

எனது கணவருக்குச் சுவாச நோய். அவர் சிறந்த வேட்டைக்காரன். காட்டின் எல்லா ரேகைகளும் அறிந்தவர். இந்த கிராமத்தின் வேட்டைத் தலைவனாய் இருந்தவர். இரவுகளில் தான் செத்து விடுவேனோ என்று பயந்தபடி இருக்கிறார். அதை மறக்கக் குடிக்கிறார். மோசமான குடி, அவரின் மடியில் மரணத்தை கொண்டு வந்துவிடும்' என்றாள்.

என் மனதைக் கிழவி சொற்களால் கரைத்தபோது அவளது கரங்களைப் பற்றி 'நீ தைரியமாய் இருக்கிறாய். என்ன உதவி என்றாலும் எந்த நேரத்திலும் என்னைக் கூப்பிடு' என்றேன்.

அவள் இரண்டு கைகளையும் நீட்டியபடி என்னிடம் வந்து கன்னங்களில் முத்தம் வைத்தாள். அவள் உதடுகள் குளிர்நீர் உறிஞ்சிய பஞ்சு ஒத்தடமாக அழுத்திப் பதிந்தது. அதற்குள் ஆதரவின், நன்றியின் சொற்கள் அடைக்கப்பட்டிருந்தன. கைகளின் சதைகள் எலும்புகளில் இருந்து ஓய்வை எடுத்திருந்தன. அவள் சுவாசம் சிகப்பு வைனின் வாசத்தோடு என் முகத்தில் பெருக்கல் அடையாளமாகச்சென்றது.

பின்பு நாட்கள் கடந்தபோது எங்கள் வீட்டுக்கோழிகள் ஒவ்வொன்றாக காணாமல் போனது. மரநாய் பிடித்திருக்கும் என்ற நினைப்பில் இருந்தபோது ஒருநாள் புதிய மண்வெட்டி காணாமல்போனது. மனைவி படபடப்போடு தனது எதிர்காலம் திருட்டு போனது போல் 'நம் வீட்டிலும் கள்ளனா ?' என்று ஏங்கினாள். எனக்குபதட்டமடையவேண்டிய அவசியம் இருக்கவில்லை. வேட்டைக்காரியின் அயல் வீடு இப்படித்தான் இருக்கும். கிராமத்தின் பெயரும் அப்படித்தான் இருந்தது.

"எங்கேயும் பயணிக்காத போதும்,
எதையும் வாசிக்காத போதும்.
இந்த வாழ்க்கையின் மெல்லிய இசையை
காது கொடுத்து கேட்காத போதும்,
உன்னையே நீ பாராட்டிக் கொள்ளாத போதும்,
கொஞ்சம் கொஞ்சமாக நீ சாக ஆரம்பிக்கின்றாய்."



பாப்லோ நெருடா

ILAVARASAN_BOOKS



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆளப்போகும் வேர்கள்



முகநூலுக்கு முன்னராகவே எழுத்தாளராக அறியப்பட்டவர் வடகோவை வரதராஜன்.

அவரது சிறுகதைத்தொகுப்பான "நிலவு குளிர்ச்சியாக இல்லை" கவனம் கொள்ளத்தக்க முக்கியமான தொகுப்பு.

இயற்கை நேசரான வரதராஜன் ஓய்வுபெற்ற கிராமசேவையாளர். கிராமத்து மண்மணம் நிரம்பப் பெற்ற இவர், முகநூலில் அதிகளவு வாசகர்களைத் தன்னகத்தே ஈர்த்து வைத்திருக்கிறார்.

விவசாயம் மற்றும் இயற்கை வளங்கள் பற்றிய இவரது பதிவுகள் தனித்துவமானவை.

தேர்வு செய்யப்பட்ட பதிவுகளின் தொகுப்பாக வெளிவந்திருக்கும் 'ஆளப்போகும் வேர்கள் "எனும் நூல் பயன்மிகு நூல்களில் ஒன்று என்பதில் ஐயமில்லை.

தலைப்புத் தொடர்பான ஒரு சிறிய மயக்கத்தில் அவரிடம் கேள்வியை முன்வைத்த போது அவரிடமிருந்து 'வளர்' வாசகர்களுக்காக கீழ்வரும் பதில் அமைந்திருந்தது.

### ஆளப்போகும் வேர்கள்

இன்றைய சிறுவர்களுக்கு பால் பசுவில் இருந்து வருகிறதுஎன்பதுதெரியாது.பைக்கற்றிலிருந்தும் போத்தலிருந்தும் வருவதாகவே அவர்கள் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள்.
அவ்வாறே உணவுகள் பேக்கறியிலிருந்து வருவதாக நினைத்துக்கொண்டிருக்கிறார்கள் .
உலக வியாபாரத்துவம் அப்படி ஒரு மாயையை சிருஸ்டித்து வைத்திருக்கிறது .
நெடும்காலம் இப்படி இருக்க முடியாது .
கொரோனா பூதம் போன்ற ஒரு பெரும் உடைப்பு நிகழலாம் . அப்போது மனிதர்கள் தம் வேர்களைத் தேடி மண்ணுக்கு போவார்கள் .
இனிவருங்காலத்தில் மண்ணில் ஆழமாக போகும் வேர்களே உலகை ஆளும் வேர்களாக மாறும்.

– வடகோவை வரதராஜன்

வேர்களின் நேசரின், விவசாயத் தரவுகளின் தொகுப்பான 'ஆளப்போகும் வேர்கள்' மெய்ப்புனைவு நூல் முழுவதும் ஒரு விவசாயக் கல்லூரிப் பட்டதாரியின் அனுபவ நாற்றுகள் செழித்து நிற்கின்றன,
அவை வெறும் தரவுகளாக அன்றி, சில பாத்திரப் படைப்புகள் மூலம் கேலியும் கிண்டலும் சுய எள்ளலுமாக பயிரிடலுக்கான பாதையை, எம்முன் விரிக்கின்றன.
அவரைக் கேலியும் கிண்டலும் செய்வதற்கே பார்வதம்மாமியை நாம்பாவித்துக் கொண்டாலும், புனைவாக அன்றி நிஜப்பாத்திரங்கள் போலவே மனதில் இடம்பிடித்துவிட்ட நளினச்செல்லையரும் பார்வதம் மாமியும் ஆளச்செல்லும் வேர்களின் பலமுள்ள பக்க வேர்கள் என்பதைத் தரவுகள் நிறைந்த ஒரு கட்டுரையை நகைச்சுவையோடு வாசிப்புக்குக் கையளிக்கும் போது வாசிக்கும் இறுக்கம் ஏற்படுத்தும் களைப்பிலிருந்து விலகி, புரிதல் எவ்வளவு இலகுவாகின்றது. என்பதை இந்நூல் வாசிப்பனுபவத்தில் உணர்ந்து கொள்ள முடியும்.

ஒவ்வொருவருக்கும் தான் வாழும் மண் பற்றிய தெரிதல் எவ்வளவு அவசியம் என்பதை, தன் வீட்டில் இருக்கும் சொற்ப நிலத்திலும் தனக்கான உணவுத்தேவையைப்பூர்த்திசெய்யும்பயிரைபயிரி டலும் பராமரித்தலும் பற்றிய அறிவை விளக்கி நிற்கும் இந்நூல் ஒவ்வொரு வீட்டிலும் இருப்பில் இருப்பது அவசியம் என்றே எண்ணுகிறேன்.

– மாலினி மாலா (மு.நூ.)

விவசாயம் மற்றும் கால்நடை பற்றிய தகவல்களை அங்கதம் தொனிக்கும் வகையில் எளிமையாகவும் அதேசமயம் விடயத்தின் கனதி குறையாமலும் சுவாரஸ்யமாக எழுதிவரும் வடகோவை வரதராஜனுக்கு விவசாயக் கல்லூரியில் அவர் பெற்ற கல்வியறிவும் நீண்ட கால விவசாயம் தொடர்பான அனுபவங்களின் திரட்சியும் ஒருங்கு சேர்ந்து இந்தப் பதிவுகளைச் சாத்தியப்படுத்தி உள்ளன. – சின்னராஜா விமலன் (மு.நூ.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பூங்குன்றத்து ஆசீவகன் கணியன்

**-வே. காசிநாதன்**

சென்ற வாரம் அவுஸ்திரேலிய வானொலியில் பேசிய பெரியாரொருவர், மனிதர்க்குச் சுயசித்தம் (free-will) என்பதொன்றில்லை, அவர்களின் சிந்தையுஞ் செயலும் கோடானு கோடி காலங்களாக அவரின் முன்னோர் தெரிந்தும் தெரியாமலும் அனுபவித்தவற்றாலும், பிறப்பிலிருந்து, ஏன் விதைப்பிலிருந்தே தாயின் உடற் சுரப்புக்களாலும் உளநெகிழ்வுகளாலும் இன்னும் பலவற்றாலும் நிர்ணயிக்கப்படுகின்றன என விரித்துக்கூறினார்.

பூரண நிர்ணயவாதம் எனும் இக்கொள்கைப்படி, எப்படி நாம் ஒன்றை அணுகுகிறோம் என்பது மட்டுமல்ல, ஒரு நிகழ்ச்சியை எப்படி அனுபவிக்கிறோம் என்பதும் இப்படி முதலிலேயே நிர்ணயிக்கப்பட்டுவிடுகின்றன, எவன் நல்லவன், எவள் அழகி என்கிற எமது மதிப்பீடுகளும் உண்மையில் எங்களுடைவையல்ல. "யாரைக் கட்டுவேன் என நான்தான் தீர்மானிப்பேன்", "அப்ப எங்கள் சொல்லுக்கு ஒரு பெறுமதியுமில்லையோ" என்றெல்லாம் நடைபெறும் துயர்மிகு பிணக்குகளில் ஈடுபடும் பிள்ளைகளும் பெற்றோர்களும் ஏமாளிகள், இருவருமே சூத்திரப் பாவைகள் என ஆகிறது.

இது எமக்கு ஏலவே பரிச்சயமான குழப்பமும் வெளிச்சமும் தான்: "எப்பவோ முடிந்த காரியம்" எனும் கொழும்புத்துறையாரின் வாக்கியம் யாழ்ப்பாணத்திலே பிரபலம். வள்ளுவர், ஒளவையார் உட்பட வேறு வேறு காலப் புலவர் பலரும் இதே கருத்தைக் கூறியுள்ளனர் என்பர்.

ஆனால் இது இவர்கள் எல்லோருக்கும் முந்தியது. புத்தரின் காலத்திலிருந்தே - 2500 ஆண்டுகளுக்கும் முன்னரே இப்படி வாதாடிய கூட்டத்தினர் இருந்தார்கள். ஆசீவகர் என வழங்கிய இவர்களுடைய கருத்துக்களை ஏற்றவர்கள் சங்க காலத்திலும் அதற்குப் பின்னரும் தமிழகத்திலும் வாழ்ந்தார்கள். சிலப்பதிகாரத்திலும் மணிமேகலை, நீலகேசி, சிவஞானசித்தியாரிலும் ஆசீவகம் பற்றிய குறிப்புகள் உள.

மாற்றமுடியாத நியதியின் வழியே யாவும் நிகழும் என இவர்கள் நம்பியதால் ஆசீவகரது கொள்கை நியதி-வாதம் எனவும் வழங்கிற்று. விதி எனவும், தமிழில் ஊழ் எனவும் வரும் பாவனைகளும் இதுவே எனலாம்.

நியதிவாதிகள் கடவுள் இருப்பதாக நம்பவில்லை. எனின் இந்த நியதியை ஏற்படுத்தியவரோ நிர்வகிப்பவரோ யாரும் இல்லை. அத்துடன் நாம் ஆரம்பத்தில் குறிப்பிட்ட காரணகாரிய கொள்கையின் வழி வரும் பூரண நிர்ணய வாதத்தைப் போலல்லாது இவர்கள் காரணங்கள் என்பனவற்றையும் ஏற்கவிலை: நியதி வழி தொடர்வதற்கு காரணம் வேறில்லை.

யாவும் நாம் காணமுடியாத நுண்ணிய அணுக்களா லானவை எனவும், ஆதியோ அந்தமோ இல்லாத இப் பரமாணுக்களின் சேர்க்கையாலும் பிரிவாலுமே எம் அனுபவத்தினுள் வரும் நிகழ்வுகளும் பொருள்களும் ஆகும் எனவும் இவர் நம்பினர்.

ஊழின் வழியே அனைத்தும் எனின், வெற்றி தோல்விகளும், குற்றம் குறைபாடுகளும் யாரினுடையவை யும் அல்ல ஆயின், நான், எனது என்பன பொருளற்ற டம்பமே என ஆகிறது.

இராமநாத மாவட்டத்தில் மகிபாலன்பட்டி என இன்று வழங்கும் ஊர், பூங்குன்றம் என அறியப்பட்டிருந்த சங்ககாலத்தில் வாழ்ந்த கணியன் எனும் புலவர் பாடிய பாடல் ஒன்று கீழே தரப்பட்டிருப்பது. கணியன் என்பது அவரது தொழிலால் ஏற்பட்டதே அன்றி அவரது இயற்(?) பெயரல்ல என்போருளர்.

யாதும் ஊரே...

யாதும் ஊரே யாவரும் கேளிர்
தீதும் நன்றும் பிறர்தர வாரா
நோதலும் தணிதலும் அவற்றோரன்ன
சாதலும் புதுவது அன்றே, வாழ்தல்
இனிதென மகிழ்ந்தன்றும் இலமே முனிவின்
இன்னா தென்றலும் இலமே, மின்னொடு
வானம் தண்துளி தலைஇ யானாது
கல் பொருது மிரங்கு மல்லல் பேரியாற்று
நீர்வழிப் படூஉம் புணைபோல் ஆருயிர்
முறை வழிப் படூஉம் என்பது திறவோர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்சியில் தெளிந்தனம் ஆகலின், மாட்சியின்
பெரியோரை வியத்தலும் இலமே,
சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே.

– கணியன் பூங்குன்றன், புறநானூறு: 192

இதன் முதல் வரி எம்மவரிடையே அதிகம் அறியப்பட்டது, புகழப்பட்டது. இந்திரா பார்த்தசாரதி எனும் பிரபல எழுத்தாளர், உலக இலக்கியங்கள் முழுவதிலும் மிகச்சிறந்த கவிதைகள் எனப் பத்தைத் தேடினால் இதைச் சேர்க்காமல் விடமுடியாது எனவும் எழுதியிருக்கிறார். ("யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழி போல்" …?)
எனினும் முதல் ஓரிரண்டு வரிக்கப்பால் செய்யுளை அறிந்தவர் குறைவு அதிலும், "கேளிர்" எனும் சொல்லை அறியாது "கேளீர்" என நீட்டி வாசிப்போருமுளர். அன்றியும், எல்லா ஊரும் எங்களதே, எல்லாரும் எமது உறவினரே என உடமைக்குரலெடுப்பதும், தமிழர் உலகப் பிரசைகள், எவ்வகைப் பிரிவினையோ ஒதுக்கலோ வேண்டாதவர்கள், மகிபாலன்பட்டிக் கணியன் சொன்னதே சேர, சோழ, பாண்டிய, ஏரிகள், காரிகள், பிட்டன்கள், கொற்றன்கள் எல்லோரும் எப்போதும் இப்போதும் சொன்னதும் நினைப்பதும் எனப் பாடியம் செய்து மகிழ்வதுமுண்டு.

கவிதைகளின் ஊழ் இவ்வாறாக, கணியன் ஒரு ஆசீவகன் என்பது இன்று பெரும்பாலும் ஏற்கப்பட்டுள்ளது. ஆசீவகர்களது கொள்கைகள் பற்றிய பழைய விளக்கங்கள் பலவும் கணியன் கவிதையின் பெயர்ப்புகள் போலத்தோன்றுகின்றன எனின் மிகையாகாது.
எனின், இந்த ஆசீவகக் கவிஞன் என்ன சொல்கிறான்?

தீமையும் நன்மையும் யாரும் எவருக்கும் செய்வதில்லை, உண்மையில் எதுவும் யாரோ நாமோ செய்வதில்லை. வானத்தில் மின்னும் மேகம் குளிர்ந்து மழையாய்ப் பொழிகிறபோது பாறைகளையும் இடித்தோடி வரும் காட்டாற்றின் பெருக்கிலே, தன் கதி என ஒன்றின்றி, அலைக்கப்படுகின்ற சிறு படகைப் (புணை) போல, ஊழின் வழியே அலைவதே இவ்வுயிர். தெள்ளியரான ஞானியர் கட்சியால், உலகின் இவ்வியல்பை நாமும் அறிந்துள்ளோம். நோவும் சுகமும், எங்கும் எப்பவும் எல்லோரும் காணும் சாவும் வாழ்வும், உயர்வும் தாழ்வும் எமக்கென வருவன அல்ல, யாருடையவுமல்ல. எனின், இவற்றில் மகிழ்வதற்கோ வருந்துதற்கோ, புகழவோ இகழவோ யாதுளது?

இப்படிச் சொல்கிற புலவன், எல்லாம் என்னது, எல்லாரும் என்னவர் என மார் தட்டுவதாக எடுத்துக்கொள்வது எவ்வளவு பொருத்தம்? ஊர் எதுவாயினும் என்ன, யாரும் அண்ணியரோ அந்நியரோ அல்ல என்பதே இக்கவிதையின் குரல் என வேண்டாமோ? எதற்கு உரிமை கோருவது எவர்?
உரிமைத் தொனியில் முதலாம் வரியை எடுத்துக்கொண்டு தொடர்ந்து, துன்பமோ நன்மையோ என ஒன்றைக்காண்பதும் அனுபவிப்பதும் எமது ஓர்மத்தைப் பொறுத்ததே, பிறர் என்னை ஆட்டவோ அசைக்கவோ விடுவது என் கையிலேயே என இரண்டாம் வரியையும் சுயசித்தப் பிரகடனமாக வாசித்து மகிழ்வோருளர். முதல் ஓரிரு வரிகளை மட்டும் வாசித்தால் இது சாத்தியம்: முழுச்செய்யுளையும் அதன் மையத்தில் உள்ள வலுவான உவமையையும் உளங்கொண்டால் அப்படி வாசித்தல் கடினம்.

ஆகவே, கீழே தருவது ஒரு ஆசீவக வாசிப்பின் ஆங்கிலப் பெயர்ப்பு.

All places are the same……

*All places are the same*
*And everyone kin*
*Good and evil no one brings to another*
*So are pain and its relief*
*Death too is ever so common*
*We do not rejoice if life seems sweet*
*Nor do we cry it's bitter when in straits.*
*As puny craft caught in rivers crashing down rocks*
*Swollen with cool rains dropping*
*From lightning-split skies*
*Our lives too are tossed around by the fates*
*Thus, we have learnt from clear-eyed teachers*
*Why praise then any as mighty when they rise*
*Even less reason therefore*
*To disdain those now reduced.*

- Kaniayan Puungkunran, Puranaanuuru -192.

* * *

அறையின் நடுவில் நிற்கிற யானை, சுவரோ தூணோ என்றும் இங்கே சொல்லவில்லை என்பது தெரியும்.
காரண காரியத் தொடரின் நிர்ப்பந்தத்தாலோ, உலக முதல்வன் எழுதியதாலோ, முற்கர்ம வினையாலோ, ஆசீவகர் சொல்வது போல எழுதப்படாத, ஆக்கியோனில்லாத குருட்டு விதியாலோ வரும் பூரண நிர்ணயவாதம் சரியோ பிழையோ எனும் கேள்வியை இங்கே தொடவிலை. மெய்யியல் மாணாக்கர் பலரை இன்னும் வருத்தும் அக்கேள்வி, பிரசித்தமான ஒரு தமிழ்க்கவிதையை எப்படி வாசிக்கலாம் எனச்சொல்லும் இச்சிறு முயற்சியின் இடையே வேண்டியதில்லை.
இனி, நாளைக்கு பூங்குன்றத்துக்கணியன் ஆசீவகனே அல்ல என்று "கண்டுபிடி"க்கப்பட்டால் வாசிப்பு மாற வேண்டுமோ எனின் அவ்வாறன்று செய்யுள் முழுவதையும் முரணின்றி வாசிப்பதே இங்கு வழியாயிற்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

# வளர் குழுவினரின் கவனத்துக்கு,

கீழ்வரும் தலைப்புகளில் பாடசாலை மாணவருக்கான கட்டுரைப்போட்டி ஒன்றினையும் நீங்கள் நடாத்தலாமே?

1. ஆசிரியர் என்பவர் யார்?
2. ஆசிரியரின் கடமைகள் என்ன?
3. எனக்குப் பிடித்த ஆசிரியர்
4. எனது வகுப்பாசிரியர்
5. ரியூசன் மாஸ்ரர்
6. எங்கள் அதிபர்
7. ஈழத்தின் புகழ் பெற்ற அதிபர்கள்.
8. வறுமை
9. வறுமையில் உழலும் என் பள்ளி நண்பன்
10. பாதியில் படிப்பை நிறுத்திய என் சகோதரி.
11. பள்ளிக்காதல்
12. போதைவஸ்தினால் ஈர்க்கப்படும் மாணவர்களும், பின்விளைவுகளும்.
13. ஆசிரியரின் பிரம்பு
14. பள்ளிநாளில் மறக்கமுடியாத நிகழ்வு
15. என் மனதைக் காயப்படுத்திய பாடசாலை நிகழ்வு
16. எனது இலட்சியம்
17. நான் ஆசியரானால்...?
18. நான் அதிபரானால்...?
19. மாணவ தலைவர்களின் சிறப்பியல்புகள்.
20. என்னைக் கவர்ந்த விளையாட்டு வீரன்
21. சாரணர் இயக்கம்
22. என்னைக் கவர்ந்த பாடசாலை நிகழ்வு
23. என் பல்கலைக்கழக கனவு
24. பகிடி வதை.
25. மாணவனின் சமூகப்பொறுப்பு
26. மாணவிகள் எதிர்கொள்ளும் நெருக்கடிகள்
27. நட்பு.
28. தமிழ்

28. நன்றி மறவாமை

- வளர் வாசகன்

# உறைக்கும் பொழுது

எத்தனை பெரிய ஞானபீடம்
இந்த மருத்துவமனைக் கட்டில் ?
வலி பழக வலி பழக ஏதோ பிடிபடுகிறது
இந்த வாழ்க்கையில்.

மூன்று நாட்களாய் நான் காணாத சூரியன்
நானில்லாமலும் இயங்குகிறது.

தாதிகளும் இல்லையென்றால்
நானொரு நாதியற்ற பிணம்.

சொட்டுச் சொட்டாய் துளிர்க்கும்
குளுக்கோஸ் துளிகளை
எண்ணிக் கொண்டிருக்கிற வேலையை
புதிதாய் தொடங்கியிருக்கிறேன்.

இடியப்பமும், சொதியோடும்
பஸ் இறக்கி, ஏறி வருகிற மனைவியை
புதிதாக பார்க்க வைக்கிறது காலம்.

நானில்லாத வீடு எப்படியிருக்கிறதென்று
அவளும் சொல்லவில்லை.
நானும் கேட்கவில்லை.

எல்லோருக்கும் ஏராளம் வேலையிருக்கிறது.
எனக்கு இருந்ததைப் போலவே.

ஊசிகள் உடம்பைச் சாப்பிடுகின்றன.
இயங்கிக் கொண்டிருக்கும் வரை
தெரியவேயில்லை உடலின் மகத்துவம்.

விட்ட பிழைகளையெல்லாம்
விட்டம் தான் ஒவ்வொன்றாய் காட்டுகிறது.

நீட்டி நிமிர்ந்து
குழாய்களோடு படுத்துக் கிடக்கையில்
கடைக் கண்களால் வழிகின்றன.
துடைக்க யாருமற்ற
என் வாழ்வின் மிச்சக் கண்ணீர்.

*– தீபிகா*
*18.03.2024*
*09.42 இரவு*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவகுணதிரிவிழிதசபொருள் சுந்தரன்



" பேஸ்புக் (Facebook) தன்னைப் பைத்தியமாக்குகிறது. "
என்று முறைப்பாடு வைத்தார்.
நவகுணதிரிவிழிதசபொருள் சுந்தரன்.

மெல்லவும் முடியாமல், துப்பவும் தெரியாமல்
கட்டிக் கொண்டு அழுகிற
தன் முகப்புத்தகத்தை
கைவிடத் தெரியவில்லை அவருக்கு.

தூக்கத்தில் எழும்பி, மேயத் தொடங்குகிற வியாதி
இப்போது நன்றாக முத்திவிட்டதென
தானே கண்டுபிடித்துச் சொல்கிறார் சுந்தரத்தார்.

ஒத்தோடவும் முடியாமல், மறுத்தோதவும் அச்சப்பட்டு
பொங்கிக் கொதிக்கிறது அவரது உலைமூடி.

எல்லாவற்றையும்
தலையில் கட்டி வைத்துக் கொண்டு
கிழிகிறது அவரது பழஞ்சீலை.

பெரும் பெரும் எழுத்துக் குதிரைகளின்
கூச்சநாச்சமற்ற எழுத்துப் பிழைகளுக்கெல்லாம்
நேரகாலம் பாராமல் கொதிக்கிறது
நவகுணதிரிவிழியின் மூலம்.

தெரியாமல் நுழைந்து விட்ட, பட்டியை விட்டு
வெளியேறத் தெரியாத செம்மறிக் கொம்பாய்
அங்குமிங்கும் ஓடியோடி முட்டுகிறது
சுந்தரச் சுடுதண்ணீர்.

விடிந்து எழும்பினால் தொடங்கி விடுகிறது
ஏதோவொரு விடியாத பிரச்சனை.

முழுவியளமே மூதேவி தானென்று
தெரிந்து கொண்டும்
முகப் புத்தகத்தில் தான் விழிக்கிறது.
மோட்டுச் சாம்பிராணி.

சனியனைக் கட்டிக் கொண்டு அழுகிறது
அவரது சத்திராதிக் காலம்.

நடுச்சாமத்தில் தடவித் தடவிப் போய்
தானே மண்ணள்ளிப் போடுகிறது
அவரது நவகுண யானை.

கிழமைக்கொரு அடிபிடியோடு
சிலம்பு சுத்துகிறார்கள் சண்டியர்கள்.
ரிக்ரொக் வேறு, பனி முத்திக் கொட்டுகிறது.

"இன்ஸ்ரா" இன்னொரு இளசுகளின் உலகு.
அங்கெல்லோரும் Bro...Bro... என்று
புசத்துகிறார்கள்.

எப்போதும், போனும் கையுமாக
தவங் கிடக்கிற சமூகச் சாமியை,
அவரது வீடு,
துறவறம் பூண்டு நெடு நாளாயிற்று.

பாவம் திரிவிழி !

வெளியே எங்காவது போய்
ஆறி வருவோமென்றால்...
ஒன்றில் ஆடிக் கொல்கிறார்கள்.
இல்லையேல்
அடிபடுகிற மாதிரி கடிபடுகிறார்கள்.

ஒரு பொருளுமற்ற உலகத்துள் கிடந்து
உழல விதிக்கப்பட்டேனே என்று
புலம்பிச் சரிகிறது தசபொருள்.

----- XXX -----

**– தீபிகா**
*16.04.2024*
*07.47 காலை.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**• சிறுகதை •**

க. ஆதவன்



**ஒரு** காதல் நடந்தேறியதை
ஊர் அறிந்திருக்கவில்லை.

மணியத்தார் பேத்தியுடன்
கொஞ்சி விளையாடிக்கொண்டிருந்தபோது
தன் கனவை மீட்கத்தொடங்கினார்.

எட்டாம் திருவிழா
மொந்தன் வாழைக்குலை
வாணவேடிக்கை.
தெட்சிணாமூர்த்தி.
நீலப்பட்டாடை உடுத்தி
அம்மன் வீதி வலம் வந்தாள்.
அவளுக்கும் பயந்தானே..
அம்மா அப்பா அக்கா பெரியம்மா
மயிலிட்டிச் சின்னம்மா புடைசூழ
அவள் வந்திருந்தாள்.
என்ன த்றில் எண்டால்
அவ்வளவு பேரையும் சுழிச்சுப்போட்டு
பார்த்தாளே ஒரு பார்வை.
அம்மனைப் பாக்கிறதா
அவளைப் பாக்கிறதா...
ரெண்டும் ஒண்டாய்த் தெரியுது.
மின்னியடிக்குது கண்.
இதயம் படபடக்குது.
வயித்துக்குள்ளை இருந்தொரு
கீறுவாணம்

உச்சந்தலையிலை அடிச்சுது
பிறகு
போக வரெக்கை
ரியூசன் பள்ளிக்குடம் அந்திரட்டி
சாமர்த்தியச்சடங்கென
அப்பப்ப சந்திச்சம்
அப்பவும் ...
அது நீல அம்மந்தான்
சயன்ஸ் பிக்சன் படம் பார்க்கும்
பொழுது
கரு நீலக் கண் கொண்ட
ராஜ நாகத்தின் கண்களைப்
பார்த்திருக்கிறாயா...-
அப்படி ஒரு கண்.
இரு கண்கள்..
கண்களினால் யாரும்
விஷ அம்புகளை தொடுப்பார்களா..
தொடுத்தாளே அவள்.

நான்
படுத்துக்கிடந்தேன்.
கிடக்கிறேன்.
சுற்றிவர நேர்ஸ்மார்.
டொக்டர் வந்தார்
இவர் பெயர் மணியம் எண்டு
பதிஞ்சிருக்கு.

மணியத்தாருக்கு
ஒரு கோதாரியும் விளங்கேல்லை.

மஜிக்கல் றியலிசம்.. எண்டு
ஆரோ ஆரோக்கோ
படிப்பிச்சுக் கொண்டிருந்தார்கள்.

புறாக்கள் இரண்டு
தங்களுக்குள் கத்திக்கதறி
வாழ்வைத் தொலைத்துக் கொண்டிருந்தன.

சூரியன் மறைந்து கொண்டிருந்தான்.

தோகை விரித்தொரு அழகிய மயில்
மணியத்தாரின் வீட்டுக்குள் வந்து
ஆடிக்கொண்டிருந்தது.

ஆள் முடியப்போகுது..
ஆகவேண்டியதைப் பாருங்கோ.

ஒரு நாயும் இஞ்சை வரப்புடாது.
மணியத்தார் கதறினார்.
மனிசர் செத்தால் பிறகு
என்ன நடக்கும்...
தெரியாது
தெரியாது
தெரியாது

என்னைச் சாகவிடுங்கோ
அங்கை போய்க்
கேட்டுச் சொல்லுறன்

துணைவி
கையில் காப்பியுடன்
வந்து நின்றாள்.

இரவு
கனவிலை நான் ஏதும்
புலம்பினனே?

இல்லையே
எனக்கொரு சத்தமும்
கேட்கவில்லையே..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பின் அட்டை ஓவியம்



ஓவியம் - Melancholy - மெலொன்கொலி - சோகம், கவலை, வேதனை
Oil, sand on canvas - எண்ணெய் வர்ணம், மணல் கித்தானில் (கன்வஸ்) - அளவு 150 x 100 cm
ஓவியர் - கிளின் ஹியூஸ் Glyn HUGHES *(1931 - 2014)*

# மெலிலான்கொலி

**மெலொன்கொலி - சோகம் : எனும் ஓவியம்** - சர்ச்சைக்குரிய எதிர்காலத்தை எதிர்நோக்கி நம்பிக்கையற்று, கிடைத்த வேலைகளைச் செய்யும் சைப்ரசில் வாழ்ந்த ஈழத் தமிழ் மாணவனைப் பிரதிபலிக்கிறது. சைப்ரசில் 40$^0$ டிகிரியில் கதிரவன் கக்கும் வெக்கையின் அகோரத்திலும் கல்வியும் வேலையுமாக அலையும் மண்ணிற இளைஞனின் தோலில் கதிரவனின் கதிர்கள் பட்டு பச்சை சிவப்பு செம்மஞ்சள் வர்ணங்களின் பிரதிபலிப்பை ஓவியத்தில் காணலாம். தாவரங்களையும் கடலையும் விரும்பும் மாணவனின் உணர்வு குருத்துப்பச்சை கடல்நீல வர்ணங்கள் - இடமும் வலமுமாக பரப்பப்பட்டுள்ளது கித்தானில். ஓவியம் தற்போது சைப்ரஸ் தலைநகரின் நிக்கோஸியா முன்னாள் நகர பிதாவின் காப்பகத்தில் பேசுபொருளாக. (Pierides permanent collection 2000)

**ஓவியர் - கிளின்** - கார்மேகங்களும் நிலக் கரிகளும் சூழ்ந்த வடக்கு வெய்ல்ஸ் North Wales நாட்டில் பிறந்து, ஓவியம், நாடகம், மேற்படிப்பைலண்டனில் கலைக்கல்லூரியில் முடித்து, ஓவிய ஆசிரியராகப் பணிபுரிந்தார். இரண்டாம் உலக யுத்தத்தின் பாதிப்புகளோடு ஆங்கில காலனித்துவ நாடான சைப்ரஸ் நாட்டிற்குப் பயணப்பட்டார் - புகையிரதம் கப்பல் மோட்டார்வண்டி ஊடாக. ஓவியதிற்கே அச்சாணியான வெளிச்சம், காலநிலை, மத்தித்தரை கடலின் வர்ணத்திலும் ஈர்க்கப்பட்டு 1956ம் ஆண்டிலிருந்து 2014ம் ஆண்டு இயற்கை எய்தும் வரை அத்தீவிலேயே வாழ்ந்து வரைந்து அறியப்பட்ட ஓவியரானார். இடமாற்றங்கள், பயணங்கள், அரங்கியல் வடிவமைப்புகள், கருத்தரங்குகள், காண்பியங்கள், எழுத்துக்கள், ஓவியங்கள் என அவரது 50 ஆண்டு கலைப்பயணத்தை 2004ல் வெளிவந்த சுயசரிதை ஓவிய நூல் ஆவணத்துடன் விபரிக்கின்றது. ஆங்கில காலனித்துவ நாடுகளின் வரலாற்று சச்சரவுகள் பற்றி நன்கு அறிந்தவர், அவற்றின் தாக்கம் அவரின் கித்தானிலும் தென்பட்டன.

சைப்ரஸ் 1960ல் சுதந்திர நாடானது, அதே ஆண்டில் பிரான்சில் ஓவியக்கலை கற்ற சைப்ரஸை பூர்வீகமான கிறிஸ்தோபொரோஸ் சவா (Christoforos Savva) உடன் இணைந்து தீவில் முதலாவது நவீன ஓவியக்கலைக் கூடத்தை அபோபாஸிஸ் APOPHASIS என்ற பெயரில் நிறுவினர். தீவின் மூன்றில் ஒரு பகுதி வட நிலத்தை 1974ல் துருக்கி ஆக்கிரமிக்க அகதியாகத் தெற்கு நோக்கினர். லண்டனில் வசித்த காலத்தில் இலங்கை ஓவியருடன் (Imogen KANNANGARA) இணைந்து பட்டிக் Batik ஓவியச் செய்முறையைப் பயின்றார். பட்டிக் பாணியில் ஓவியங்களும் அரங்கியலிலும் 1974ன் அகதிவாழ்வுபற்றிப் பேசின. கிரேக்க நிலமான தென்பகுதியில் ஓய்வூதியம் பெறும் வரை ஓவிய ஆசிரியரா க வும் பணிபுரிந்தார். சமாந்தரமாக நான்கு தசாப்தங்களுக்கு மேலாக சினிமா நாடகம் ஓவியம் சார் கட்டுரைகளை பத்திரிகைகளில் பிரசுரித்தார். குறிப்பாக, தீவின் முன்னணி ஆங்கிலச் செய்தித்தாளான சைப்ரஸ் வீக்லி பத்திரிகையில் Cyprus Weekly News Paper கலைக்கான இரு பக்கங்கள் இன்றும் பேசப்படுவது அவருக்கே உரிய தனித்துவம். பிரிட்டிஷ் கவுன்சில் British Council நூலகத்துடன் கூட்டாகப் பல குழு ஓவிய காட்சிகளை நிகழ்த்தி, தரமான ஓவியர்களை அங்கீகாரப்படுத்தினார். சைப்ரஸ், அதென்ஸ், பேரூட், சீனா, ஜெர்மனி, சுவிற்சர்லாந்து, அவுஸ்திரேலியா, அமெரிக்கா, வெய்ல்ஸ் போன்ற இடங்களில் இவரது ஓவியங்கள் காட்சிக்கு சென்றன. 2015ம் ஆண்டு தலைநகர் நிகோசியாவில் நீமக் NiMAC (Nicosia Municipal Arts Centre) கலைக்கூடத்தில் பிரமாண்டமாக இவரது முக்கிய படைப்புகள் காட்சிப்படுத்தப்பட்ட நிகழ்வை சைப்ரஸ் ஜனாதிபதி திறந்து வைத்து பேசுகையில் - கிளீன் ஹியூஸ் ஓவிய மாணவர்களுக்கும் ஓவியர்களுக்கும் முன்மாதிரியாகவும் உறுதுணையாகவும் ஊக்கியாகவும் வழிகாட்டியாகவும் இயங்கிய தீவின் பிரதான நவீன ஓவியராவார் என்றார்.

- VP. **வாசுகன்**

கிளினின் படைப்புக்களை நோக்க
- www.glynhughesart.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**மெலொன்கொலி**

ஓவியர் - கிளின் ஹியூஸ் Glyn HUGHES (1931 - 2014)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org